
குமாரசாமி குமாரதேவன்

54

# வாசிப்பும் அறிதலும்




வாசகரும் சகபயணியும்



*தோற்றம் : டிசம்பர் 10, 1960 (கோவளம், காரைநகர்)*

*மறைவு : நவம்பர் 15, 2019*
*(வண்ணைச் சிவன் கோவிலடி சண்முகம் கடை)*

வாசகரும் சகபயணியும்

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

சமகாலத்தின் மிக முக்கியமான வாசகராகவும் நுண்ணுணர்வுடன் கூடிய விமர்சகராகவும் மிகக் கூர்மையான நினைவாற்றலுடன் அரசியல், இலக்கியம், சமூகம், திரைப்படம் என்று பல்வேறு தளங்களிலும் ஆழ்ந்தகன்ற அறிவும் புலமையும் கொண்டவருமான குமாரசாமி குமாரதேவன் அவர்கள் நவம்பர் **15, 2019** அன்று இயற்கையுடன் கலந்தார்.

டிசம்பர் **10, 1960** அன்று காரைநகரிலுள்ள கோவளத்தில் பிறந்த குமாரதேவன் அவர்கள் தனது சிறுவயதிலிருந்தே தீவிரமான வாசிப்பிலும் தேடலிலுமாக தன் வாழ்வை வரையமைத்து கொண்டவர். அண்மைக்காலமாக ஈழத்தில் நடந்த பல்வேறு சமூக, அரசியல், இலக்கியக் கூட்டங்களிலும் உரையாடல்களிலும் தன் வாசிப்பினாலும், புலமையினாலும், நேர்படப் பேசுகின்ற பண்பினாலும் அனைவராலும் மதிக்கப்பட்டு சமகால வாசகர் தரப்பின் முதன்மை அடையாளமாக விளங்கியவர் குமாரதேவன் அவர்கள். விதைகுழுமம், தொன்ம யாத்திரை, புதிய சொல் போன்றவற்றின் ஆரம்பம் முதலே உணர்வுத் தோழமையுடன் விளங்கிய தோழர்களில் ஒருவராகவும், வாசகராகவும், பங்கேற்பாளராகவும் சேர்ந்து பயணித்த குமாரதேவன் பல்வேறு சந்தர்ப்பங்களில் எமக்கான ஆலோசகராக இருந்தும் நெறிப்படுத்தியிருக்கின்றார்.

தொடர்ச்சியான வாசிப்பினாலும், வாசிப்பினதும் தனது அனுபவத்தினதும் நீட்சியாக அவர் நிகழ்த்திக்கொண்டிருந்த உரையாடல்களினாலும், தனது தேடல்களையும் அறிதல் பரப்புகளையும் நாளெல்லாம் கிளைவிரித்துப் பரப்பிக்கொண்டிருக்கின்ற ஒரு மாபெரும் ஆளுமையாகவே குமாரதேவன் அவர்கள் தன் சுவடுகளைப் பதிவு செய்துவிட்டுப் போயிருக்கின்றார். அவரது மறைவிற்குப் பின்னர்

அவருக்கான நினைவு மலரை கல்வெட்டுக்கான வழமையான அம்சங்களுடன் வெளியிடுவதைவிட குமாரதேவன் யாராக இருந்தார், எவ்வாறு நினைவுகூரப்படுகின்றார் என்பதை அவர் வாழ்ந்து உறவாடி உரையாடிய சமூகத்தினரின் குரல்களூடாகப் பதிவுசெய்வதே பொருத்தமானதாகவும் பயன்பொதிந்ததா-கவும் இருக்குமென்பதை அவரது குடும்பத்தினரும் உணர்ந்தே இருந்தனர். கலை, இலக்கிய, சமூகச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் இருக்கின்ற தனது உறவுகள் குறித்த அறிமுகத்தை யும் அவர்களுக்கும் தனக்குமான உணர்வும் தோழமையும் எத்-தனை ஆத்மார்த்தமானது என்பதை குமாரதேவன் அவர்கள் தனது குடும்பத்தினருக்கு விளக்கமாகவே சொல்லியிருந்திருக் கின்றார். அந்த நேசமும் நம்பிக்கையுமே அவரது குடும்பத்தி-னரை குமாரதேவன் அவர்கள் நெருக்கமாகச் சேர்ந்தியங்கிய விதை குழுமம் மற்றும் புதிய சொல் தோழர்களிடம் இந்த நூலை உருவாக்குவதிலும் நிகழ்வை ஒருங்கிணைப்பதிலும் கூட்டாகச் சேர்த்திருக்கின்றது. இந்த முக்கியமான செயலுக்குத் தூண்டியாக இருந்ததன் மூலம் குமாரதேவன் அவர்கள் தனது மரணத்திலும் கூட ஒரு சேதியைப் பதிவுசெய்துபோயிருக் கின்றார். தன் வாழ்நாள் முழுவதையும் வாசிப்பிற்கும் தேடலிற்கும் அர்ப்பணித்த, ஜனநாயக பூர்வமான உரையாடல்கள் மற்றும் செயற்பாடுகளுக்கும் அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்கிய கூட்டான சமூகச் செயற்பாடுகளை முன்னிலைப்படுத்துவதற்கும் நேர்மையான வெளிப்படையான பேச்சிற்கும் பற்றற்றதோர் வாழ்க்கை முறைக்கும் தன் வாழ்வையை சாட்சியாக முன்வைத்த குமாரதேவன் அவர்கள் குறித்து நாம் தொடர்ந்து உரையாட-வும் எம்மை சுயமதிப்பீடு செய்யவும் அவரை முழுமையாகப் புரிந்துகொள்ளவும் இச்சிறுநூல் ஒரு தொடக்கமாக அமையும் என்று புதிய சொல் மிகுந்த நம்பிக்கைகொள்கின்றது.

தோழமையுடன்
புதிய சொல்

# குமாரசாமி குமாரதேவனின் வாழ்க்கைப் பாதை

தமிழருவி த. சிவகுமாரன்

வரலாற்றுப் பெருமையும் கேந்திர முக்கியத்துவமும் மிக்க இலங்கையின் சிரசாக விளங்குவது யாழ்ப்பாணம். அதன் நெற்றித்திலகமாக மிளிரும் காரைநகர். தொன்மைப் பண்பாடும் பாரம்பரியமும் மிக்கது. அலையும் கப்பல்களுக்கும் மரக்கலங்களுக்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்கம் நிமிர்ந்து நிற்கும். கோவளம் குறிச்சி கற்றோரும், கவின் பெறு வர்த்தகரும் கோழை படாத மேழிச் செல்வரும் குறைவிலாது விளங்கும் புண்ணிய பதியாகும்.

காரைநகரில் புகழ்பூத்த மணியர் கந்தையா தம்பதியின் புதல்வரான குமாரசாமி கமலாதேவி தம்பதியினரின் மூத்த புதல்வராக 10. 12 .1960 இல் குமாரதேவன் பிறந்தார். இவருக்கு மூத்த சகோதரியாக குமாரதேவியும் இளைய சகோதரங்களாக மங்கையற்கரசி, சிவகுமாரன், சிவகௌரி ஆகியோர் உடன் பிறந்தனர். தனது ஆரம்பக் கல்வியை ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியிலும் கற்றார். இளம் வயதிலேயே எதையும் நுணுகி ஆராய்ந்து கற்கும் திறன் கொண்ட இவர் அதிபர், ஆசிரி யர், சக மாணவர்கள், ஊரார்களுடைய பாராட்டுதலுக்குப் பல தடவைகள் உரியவரானார். அந்தக் காலத்திலேயே டபிள் ப்ரோமோஷன் பெற்ற மாணவரானார்.

மிக இளம் வயதிலேயே பத்திரி கைகளையும் பல்வேறு நூல்களையும் தேடி வாசிக்கும் பழக்கம் உடையவராக இருந்தார்.

நாவலப்பிட்டி பிரபல வர்த்தகராக விளங்கியவரும் ஆங்கிலப் புலமை நிறைந் தவருமான தந்தை குமாரசாமி தனது 44 வது வயதில் திடீரென மாரடைப்பால் மரணமடைந்தமை குடும்பத்தையே உலுக்கிப் போட்டது. மூத்த மகனான குமாரதேவனின் வாழ்க்கைப் பாதையை முற்றாகத் தடம் மாற்றிவிட்டது. தனது பதின் மூன்றாவது வயதில் கல்லூரிப் படிப்பை இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு தந்தையின் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள நாவலப்பிட்டிக்கு செல்ல வேண்டியதாயிற்று. கல்லூரிப் படிப்பைப் பாதியில் கைவிட வேண்டி ஏற்பட்டமை மிகுந்த மனவருத்தத்தைக் குமாரதேவனுக்குத் தந்திருந்தாலும் தானாக எல்லாவற்றையும் தேடிக்கற்கும் பழக்கத்தால் இவரது பல்துறை அறிவு நாளுக்கு நாள் வளர்ந்து மெருகேறியது.

1977 இல் ஏற்பட்ட இனக்கலவரத்-

தால் நாவலப்பிட்டியில் இருந்த இவரது வர்த்தக நிலையம் எரியூட்டப்பட்டு விட்டதால் மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பிய குமாரதேவன் இடைவழியில் விட்ட கல்லூரிப் படிப்படியும் தொடரமுடியாமல், வர்த்தக நடவடிக்கைகளையும் தொடர முடியாமலும் இரண்டும் கெட்டான் நிலைக்கு உள்ளாகி மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானார். ஆயினும் இவையெல்லாம் சேர்ந்து இன்னும் அவரது வாசிப்பையும் தேடலையும் அதிகரித்தன.

வண்ணைச் சிவன் கோவில் சூழலில் இவரது வர்த்தக நடவடிக்கையும் வாழ்க்கையும் தொடரலாயிற்று. சண்முகம் சைவ உணவகமும் இவருக்கு ஓர் " சங்கப் பலகை" ஆகியது. அங்கு வரும் அதிகாரிகள், கல்விமான்கள், சமூகத்தின் பலதரப்பட்ட மரியாதைக்கு உரியவர்கள், புத்திஜீவிகள் எல்லோருடனும் கலந்து உரையாடி தான் வாசித்த, தேடிய பலதரப்பட்ட விசயங்களையும் அவர்களுடன் பரிமாறி வரலானார். அபார ஞாபகசக்தியும், கணிதம், இலக்கியம், அரசியல் உட்பட பல விடயங்களின் தகவல் களஞ்சியமாகவும் விளங்கிய இவர் அவர்களுக்கு மத்தியில் நடுநாயகமாக விளங்கி வந்தார்.

இவரது சகோதரர்கள் திருமணம் புரிந்த வகையில் தமிழருவி த. சிவகுமாரன், பொ. அம்பிகைபாகன், சி. சத்தியலட்சுமி, நா. நாகராசா ஆகியோர் மைத்துனர்களாயினர். இவர்களது பிள்ளைகளான சி. ஜனகன் (Design & structural Engineer), சி. கௌதமன் (Electronic Engineer), சி. மதங்கன், அ. காண்டீபன் (லண்டன்), செ. சாலினி (அவுஸ்திரேலியா), நா. சிவதர்சினி (மருத்துவ பீடம், நான்காம் வருட மாணவி, ஜெயவர்த்தன பல்கலைக்கழகம்), நா. தனுஜா ( ஊடகவியலாளர்), சி. சாரந்தன், சி. சாரந்தி ஆகியோர் மருமக்களாயினர்.

2012 இல் ஏற்பட்ட உடல்நலக் குறைவிலிருந்து மீண்ட குமாரதேவனின் வாழ்க்கை இலக்கிய முயற்சியாளர்களுடனும் குறிப்பாக இளைய தலைமுறையினருடன் மிகுந்த நெருக்கமாக அமைந்திருந்தது. அவர்களால் அன்புடனும் மரியாதையுடனும் நேசிக்கப்பட்ட குமாரதேவன் ஒரு நேர்மையான விமர்சகராகவும் வாசிப்பால் உயர்ந்த முன் உதாரணமாகவும் விளங்கி வந்தார். பிரம்மச்சரிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தமையால் தனது முழுமையான நேரத்தை வாசிப்பதிலும் அவற்றைத் தக்காருடன் பகிர்வதிலும் செலவிட முடிந்தது.

இவ்வாறு எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்ட குமாரதேவன் 15 . 11 . 2019 வெள்ளிக்கிழமை முன்னிரவு 11. 35 மணி ஐப்பசி தேய்பிறை சதுர்த்தியில் தனது 59 ஆவது வயது நிறைவடையும் நேரத்தில் இவ்வுலக வாழ்வை நீத்து தேவர் உலகில் ஒருவராகி விட்டார்.

"புரந்தார் கண் நீர் மல்கச் சாகிற்பின் சாக்காடு

இரந்து கோள் தக்கதுடைத்து"

## பெயர் – குமாரசாமி குமாரதேவன்
## பிறந்தது – காரைநகரில் உள்ள கோவளத்தில்
## காலம் – 1960 மார்கழி 10

> "படிப்பை விட்டதாலேயே என்னமோ தெரியவில்லை, எதையாவது வாசிக்க வேணும் எண்ட ஆர்வம் இருந்தது, பேப்பருகள் அதுகள் இதுகள் எண்டு வாசிப்பன், ஒருவேளை பள்ளிக்கூட படிப்பிற்கு போயிருந்தால், வேறு மாதிரியும் போயிருக்கலாம்"

### சுய காதை

பதின்மூன்று வயதிலேயே பள்ளிக்கூடம் போவதை விடவேண்டியதாகிற்று. அப்பாவின் திடீர் மரணத்துடன் அப்பாவின் கடைக்குக் போகவேண்டிய சூழல்ஏற்பட்டது. தகப்பனார் மலையகத்தில் உள்ள நாவலப்பிட்டியவில் வியா-பாரம் செய்துவந்தார். அம்மா பிறந்தது மலாயாவில், பிறகு அவரது குடும்பத்தார் பென்சன் எடுத்துக்கொண்டு ஊரோடு வந்து இருந்துவிட்டனர். எனக்கு அப்ப யாழ்ப்பாணமே கூடத் தெரியாது, முதல் நகரம் என்றாலே நாவலப்பிட்டியா தான். நாவலப்பிட்டியாவிலும் ஒரு தமிழ்ச்சூழல் தான், பெரியதோட்டங்களும் தோட்டத் தொழிலாளர்களும் வாழ்ந்த பெருந்தமிழ்ப் பரப்பு.

ஏராளமான தமிழ்வாசிப்பு அங்கு தான் உருவாகியது. சிறுவயதிலேயே பத்திரிகைகளை வாசிப்பதில் ஆர்வம்கூட, அந்தக் காலத்தில் பொதுமக்கள் பத்திரிகை வாசிப்பது குறைவு, எனது வாசிப்பு ஆர்வத்தைப் பார்த்த எனது உறவினர் ஒருவர் - அவர்ஒரு மலாயன்பென்ச னியர் அவருக்குத் தான் வீரகேசரிப் பேப்பர் வரும். தான் வாசித்துவிட்டு பத்திரிகைகளை எனக்குத் தருவார். எனது ஆர்வத்தைப் பார்த்த தந்தையும், அவரது கடைக்கு வரும் பேப்பரை அவர் வாசித்தவுடன் தபாலில்போட்டுவிடுவார். அந்தக்காலத்தில் ரெண்டு நேரப்பாடசாலை தானே, மத்தியா-னம்சாப்பாட்டுக்கு சைக்கிளில் வரும்போதே பேப்பர் பார்த்துக்கொண்டு தான் வருவன், தபாலில் வந்த பேப்பரை உடைச்சு, அதை யும்கையில்வைத்துப்பார்த்து கொண்டு தான் சாப்பாடே நடக்கும். பிறகு, எனது ஊரில் இருந்த முகவர் ஒருவர் எனக்கும் சேர்த்து ஓடரைச் செய்துவிட்டார்.

நா. முத்தையா மாஸ்ரர் என்பவரது ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டியரி-வல் இயங்கியது. மலையகத்தின் பிர-தான அச்சகமாக அது இருந்தது. அவர் திருமணம் முடிக்காதவர், சமய ஈடுபாடு நிறைய உள்ளவர். அந்தச் சூழல் பெரிய கேந்திரமாக அந்தக் காலத்தில் இருந்தது.

நாவலப்பிட்டியில் நிறைய உறவினர்கள் இருந்தார்கள், அங்கு அறுபது வீதத்திற்கு மேற்பட்ட கடைகள் தமிழ்க்கடைகள் தான், இந்திய வம்சாவளி செட்டிமார்-கடைகள், யாழ்ப்பாணத்து ஆட்களின்

கடைகள் என்று எல்லாம் இருக்கும். நாவலப்பிட்டிய ரெயில்வே ஸ்டேசன்பெரிய ஒருநிலையம் இப்பொழுது கூட கொழும்பு, யாழ்ப்பணத்திற்கு அடுத்து பெரிய இடம் அதுதான். படிப்பை விட்டதாலேயே என்னமோ தெரியவில்லை. எதையாவது வாசிக்கவேணும் என்ற ஆர்வம் இருந்தது, பேப்பர்கள் அதுகள் இதுகள் என்று வாசிப்பன், ஒருவேளை பள்ளிக்கூட படிப்பிற்குப் போயிருந்தால், வேறுமாதிரியும் போயிருக்கலாம். அந்தக் காலத்தில் பழைய பத்திரிகைகள் விற்கும். நாடார்கடைகள் இருந்தன, அங்கே எஸ்டேட்டைச் சேர்ந்தவர்கள் வாசித்த ஏராளமான புத்தகங்கள் வரும். அவற்றை மிகக் குறைந்தவிலைக்கு நிறுத்து வாங்கலாம். நானும் கடைக்காரன் என்றபடியால் கேட்கும் விலைக்கு தருவினம். தீபம் இதழ்கள் மற்றும் அந்தக் காலத்தில் வந்த தரமான இதழ்கள் எல்லாமும் கூட எடுக்கக்கூடியதாக இருக்கும்.



அந்த நேரத்தில், எனக்கு முதலில் அறிமுகமாகியவர், நாவலப்பிட்டி உதவிதபாலதிபர் ரட்ணசபாபதி அய்யர். அவரும் நல்ல வாசிப் பாளர், கவிதைகளும் எழுதுவார். ஓய்வானநேரங்களில் கடையில்வந்து எங்களோடு கதைத்துக் கொண்டிருப்பார். ஒருநாள் அவர் கிராமப்பிறழ்வு என்ற மார்ட்டின் விக்கிர மசிங்கவின் நாவலான கம்பெரலியவைத் தந்தார். அது அந்தக் காலத்தைய எனது ஆர்வத்திற்குத் தீனி போட்டது. அன்றைய சிறிமாவோ ஆட்சிக் காலத்தில் தான் இந்தியப் பிரசுரங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது, வீரகேசரிப் பிரசுர வெளியீடுகள் நிறைய வந்தன. அப்போது எங்கள்கடைக்கு எதிரில்தான் வீரகேசரி முகவர் நிலையம் இருந்தது, புதியதாய் வரும் புத்தகங்களையே கூட வாசிக்கத்தருவார்கள். "நிலக்கிளி" தான் நான் அப்போது வாசித்தவற்றுள் நல்ல நாவல். பாலமனோகரன் என்பவரால்

எழுதப்பட்டது. வன்னிப்பிரதேசத்தைச் சேர்ந்த தண்ணிமுறிப்பு, தண்ணீரூற்று போன்ற இடங்களை மையமாகவைத்து ஒரு காதல் கதை, சாதியத்தையும் அதன் நிலவியலையும் கூட அது விரிவாகப் பேசியது. சிறியவயதில் வாசித்ததால் தான். அவ்வளவு நன்றாக இருந்தது என்று நினைத்தேன், ஆனால் இரண்டாவது பதிப்பைச் சில வருடங்களுக்கு முன் வாசித்தபோதும் அதே உணர்வையே தந்தது.

அதன் பிறகு மல்லிகை இதழை சேல்ஸ் ரெப்பாக இருந்த மாகலிங்கம் என்பவர் தந்தார். அவர் மலையகச்செய்திக்கட்டுரைகள் என்ற தொடரை மல்லிகையில் எழுதினார். சுதந்திரன், சுடர் போன்றவையும் வாசிக்கக்கூடிய அளவில் வெளிவந்தன. சுடர் ஒரு ரூபாய்க்கு, நிறைய வாசிக்கக் கூடிய விடயங்களுடன் வெளிவந்தது, அதே காலத்தில் சாகித்திய விழாக்களும் கதிரேசன் மண்டபத்தில் நடந்தன.

1977 இல் ஆட்சிமாற்றம் போன்றன ஏற்பட்டு ஒரு கலவரமாக சூழ்நிலை நிலவியது. மேலும் சிறுவயதில் ஓரளவு வெளிஉலகத்தைப் பார்க்க வெளிக்கிடேக்க யாழ்ப்பணத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், தமிழராய்ச்சி மாநாட்டு சம்பவங்கள் என்பவற்றைத் தாங்கி செய்திகள் வந்தன. வுசயடை யவ டியச கேஸ் என்பன பெரிய எழுச்சியை ஏற்படுத்தியிருந்த காலமது

பொதுவாக தேர்தல் காலமென்றாலே தமிழர்களைத்தாக்கும் சூழ்நிலை ஒன்று இருந்தது. தேர்தலுக்கு முன்னமே கலவரம் உருவாகக்கூடிய சாத்தியங்கள் தெரிந்தன. யார் வென்றாலும் தமிழ்க்கடைகளைச் சூறையாடுவதும், வெற்றியடைந்தவர்கள் தமிழ்க்கடைகளில் அதைக் கொண்டாடும் மனோநிலையும் இருந்தது. ஆகவே 77 தேர்தலுக்கு முன்னமே, உறவினர்கள் என்னை ஊருக்கு அனுப்பிவிட்டார்கள்.

## புதிய நகரத்தின் சருக்கம்

நான் யாழ்ப்பாணத்துக்கு வந்ததும், ஜே.ஆர் ஆட்சிக்கு வந்ததும் 1977 ஆம் ஆண்டிலேயே நடந்தது. தொடர்ச்சியாக எதிர்பார்த்தவாறே நிகழ்வுகள் தொடர்ந்தன. கலவரங்கள் மூண்டன. அதில் ஆத்ம ஜோதி நிலையமும் எரிக்கப்பட்டது. பின்னர் நான் யாழ்ப்பாண சூழ்நிலைக்கு ஏற்றவாறு வாழத்தொடங்கினேன். அப்போதும் ஒரு ரெண்டுங்கெட்டான் நிலைதான் காணப்பட்டது. படிக்கமுடியவில்லை என்ற ஏக்கம் இருந்தது, அதைமாற்ற நிறைய வாசிக்கவும் செய்தேன்.

1977 இற்குப் பிறகு யாழ்ப்பாணம் சிவன் கோயிலடி தான் வாழ்வு. "ஈழத்துச் சிதம்பரம்" என அழைக்கப்படும் சிவன் கோவில் அமைந்துள்ள காரைநகரில் இருந்து. வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவில் என பெயர் பெற்ற யாழ் நகர சிவன் கோவிலடிக்கு வந்து சேர்ந்ததும் ஒரு புதினமான ஒற்றுமை தான். சிவபெருமானின் ஜென்மநட்சத்திரமான "ஆதிரையை" பெயராகக் கொண்டது சயந்தனின் பின்னாளில் வெளியான நாவல். அந்நாவலில் ஆதிரை களத்தில் நின்று சிவபெருமானை சப்போட்டுக்கு கூப்பிடும் வர்ணணை ஞாபகம் வருகிறது. யாழ்நகர சிவன் கோயிலடி ஆறுமுகநாவலர் தனது தொடர்பிரசங்கங்களை நிகழ்த்திய இடம். பின்னர் நல்லை ஆதீனத்தை நிறுவிய மணி ஐய்யர் என ஆரம்பத்தில் அழைக்கப்பட்டவர் வசித்ததும் வெண்கலக் குரலில்

கதாப்பிரசங்கங்களை நிகழ்த்தியதும் யாழ்நகர சிவன் கோயிலடியே. செட்டியார் சிவன்கோவில் என்றும் அழைக்கப்படும்.

யுத்தத்திற்கு முதல் சொந்த தொழில் இருந்தது. பின்னர் நெருக்கடிச்சூழலில் அறி-முகரீதியிலும் பழக்கரீதியிலும் சண்முகம் உணவகத்தில் முதலில் பகுதி நேரமாகவும் பின்னர் கிட்டத்தட்ட முழு நேரமாகவும் வேலை செய்யக்கூடியதாயிருந்தது. சண்மு-கம் உணவகம் சைவ உணவுக்கு மாத்திரமல்ல உபசரிப்புக்கும் பெயர் பெற்றது. அதன் உரிமையாளர் ஊழியர்களை எதிர்பாராமல் தானே நின்று சகல வேலைகளையும்செய்வார். அவரது கையினால்ரீ குடிக்கவென தொலை விலிருந்தும்வாடிக்கையாளர்வருவர். அயலில் அலுவலகம் வைத்திருந்த "மல்லிகை" ஜீவா அந்தக்கடையின் வாடிக்கையாளர். மல்லிகை ஆண்டுமலர்ஒன்றின்ஆசிரியர்தலையங்கத்தில் சண்முகம்அண்ணையைப்பற்றிக்குறிப்பிட்டு எழுதியிருப்பார். எழுத்தாளர் தெணியான் தான்து நூலொன்றில் சண்முகம் உணவ-கத்தைப் பற்றி குறிப்பிட்டிருப்பார். 1995 இடப்பெயர்வுகாலத்தில் சங்கத்தானையில் இயங்கிய சண்முகம் உணவகம் குறித்து அருண்மொழிவர்மன் உதயனில் எழுதியி-ருந்தார். செட்டியார் அச்சக உரிமையாளர் திரு. சங்கர் உணவகத்தின் தினசரிவாடிக் கையாளர். அவர் சுதந்திரன் ஆசிரியராக இலக்கியப்பகுதிக்கும் பொறுப் பாளராக இருந்தபோதே எஸ்.பொ அவர்களின் "சடங்கு" நாவல் தொடராக வெளி-வரத் தொடங்கியது. பின்னர் நூலுருப் பெற்றது. சடங்கு நாவலின் முன்னுரையில் எஸ்.பொ இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார். உணவகம் பல இலக்கியவாதிகள் வந்து சந்தித்து உரையாடக்கூடிய ஓர் இடமா-கவும் இருந்தது.

## குடும்பத்தின் சருக்கம்

திருமணம் முடிக்கவில்லை. நாட்டுச் சூழலும் ஒரு காரணம் இராணுவக் கெடு பிடிகளும் அதுகளும் இதுக-ளுமாய் இருந்த காலம். இன்னொரு பக்கத்தால், ஏன் திருமணம் முடிக்கவ-ில்லை, இவன் ஏதேனும் இயக்கமாக இருக்குமோ என்றும் கூட அவர்களை அது யோசிக்க வைத்தது. பல தடவை இந்தக்கேள் விக்கு நான் பதிலளிக்க வேண்டியிருந்தது. உதாரணத்திற்கு, ஒரு தடவை ஓர் உயரதிகாரி கேட்டார், "நீர் ஏன் திருமணம் முடிக்க வில்லை?" நான் சொன் னேன், "இந்த உலகத்தில் எத்தனைபேர் திருமணம் முடிக்காமல் இருக்கினம், ஏன் இலங்கையிலே கூட திருமணம் முடிக்கா தவர்கள் எத்தனை-பேர் பிரதமர்களாக இருந்திருக்கினம்?" என்றேன். அவர் "டட்லி சேனநாயக்க" என்றார். "சேர். ஜோன் கொத்தலாவ, டபிள்வு. தகநாயக்க போன் றோரும் திருமணம் முடிக்கவில்லை என் றேன் சிநேகமாகச் சிரித்தார்.

பிறகு கொஞ்சக் காலம், இந்தியப் பிரதமர் வாஜ்பாயும், பிறகு ஜனாதிபதி அப்துல்கலாமும் கூட அப்படித் தான் என்று கேட்போருக்குக்குச் சொல்லிக் கொண்டேன்.

திருமணம் முடிப்பதென்பது அவர் அவருடைய தனிப்பட்ட முடிவு, சூழ்நிலை போன்றன தொடர்பானது, அவ்வளவுதான்.

## காரை தீவு நகராகிய சருக்கம்

வலிகாமம் நிலப்பகுதியுடன் தங்கள் ஊரைப் பிரித்து நிற்கும் நீர்ப்பகுதியை "வெள்ளக் கடற்கரை" என்றே காரைநகர்மக்

கள் அழைப்பர். மிகவும் ஆழம் குறைந்த, வெள்ளம் போல்பரந்து கோடைகாலங்களில் நீரவற்றி மணற்திடல்ஆக இப்பகுதி காணப்படும் மக்கள்பழையகாலங்களில்கால்நடையாகவே இப்பகுதியைக்கடந்து தங்கள்தேவைகளுக்குப் பிரயாணம்செய்து வந்தனர். 1878 இல்பிரித்தானிய ஆட்சியில் வடபகுதி கவர்னராக இருந்த துவைனம்(Twainam) அவர்களின் முயற்சியால் ஒன்பது நீரோட்ட மதகுகளுடன்கூடிய கற்தெரு (Cause way) அமைக்கப்பட்டு போக்குவரத்து இலகுவாகியது. பொன்னாலைச் சந்தியுடன் காரைநகரை இணைப்பதால் இத்தெரு பொன்னாலைப் பாலம் என அழைக்கப்படுகிறது.

மாரிகாலங்களில் இந்தப்பகுதி நீரோட்டம் அதிகரித்துக் காணப்படும். இந்தக் கற்தெ ருவில் செல்லும்போது மேகம் நீர் குடிக்கும் காட்சியை சயந்தன் ஆறாவடு நாவலில் விபரித்திருப்பார். கிழக்கு மாகாணத்திலும் காரைதீவு எனப் பெயர்கொண்ட பெரிய தமிழ்க்கிராமம் உள்ளது, சுவாமி விபுலானந்தர் பிறந்த ஊர் அது. முன்னர் வெளியிடங்களில் இருந்து இக்கிராமங்களுக்கு தபால் அனுப்புவதாயிருந்தால் ஊர்ப்பெயருடன் யாழ்ப்பாணம் அல்லது மட்டக்களப்பு என எழுதவேண்டும். இதைவிட அரச அலுவலகங்களின் பல பணிகளிலும் குளறுபடி ஏற்பட்டது. 1923 இல் காரைநகருக்குச் சென்ற சேர். பொன். இராமநாதன் காரைதீவு இனி "காரைநகர் என அழைக்கப்படுவதாக" என்று சொன்னதாகச் சொல்லப்படுவது உண்டு.

## புதினங்கள்

1977 காலகட்டத்தில், வீரகேசரி பிரசுரம் மூலம் ஐம்பதுக்கும் மேற்பட்ட புதிய எழுத்தாளர்கள் வெளியே தெரியவந்தனர். அதற்கு அவர்களுடைய விநியோகபலமும் காரணம். ஆனால் அந்தக் காலப்பகுதி நூறுவீதம் நன்மை தந்தது என்று சொல்ல முடியாது. உள்ளூர்பிரசுரங்கள் வந்தன, அவ்வளவு தான். அதில் குறிப்பிடத்தக்க சில நாவல்களும் வெளிவந்திருக்கின்றன.

இயக்கங்களுக்கு முன்னதாகவே இந்தக் காலகட்டத்தில் மக்களைக் கவர்ந்த தலைவர் என்றால் அது அமிர்தலிங்கம் தான். நடத்தை, ஆளுமை, பேச்சாற்றல், துணிகரம் என்று எல்லாவிதத்திலேயும் அவர் ஒரு முன்னோடி. அந்தக் காலகட்டத்தில் தமிழீழக் கோரிக்கை தீவிரவாதமான கோரிக்கையாகக் கருதப்பட்டாலும் அதன் பின்னணியில் நிகழ்ந்த கலவரங்கள், சர்வதேசச் சூழல்கள் என்பவற்றின் காரணமாக அதன் பின்னரே ஆயுதப்போராட்டம் உருவாகத்தொடங்கியது. ஒவ்வொரு இயக்கங்களாக அவை உருவான நேரத்தில் எங்களுடைய வாழ்க்கை போய்க்கொண்டிருந்தது.

இக்காலப்பகுதியில் இடதுசாரிகளே ஆதிக் கம் செலுத்திவந்தனர், முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் கைலாசபதி, சிவத்தம்பி போன்றோரும் மிகவும் செல்வாக்குடன் இருந்தனர். அவர்கள் தேசிய இனப்பிரச்சினையை ஒரு பொருட்டாகவே மதிக்கிவல்லை. அதை படுபிற் போக்குத்தனமான ஒன்றாகவே வர்ணித்தனர். இதன் மூலம் சிங்களப் பேரினவாதத்திற்கு வக்காலத்து வாங்கினர். பின்னர் சிவத்தம்பி தாங்கள் விட்ட தவறை ஏற்றுக்கொண்டார்.

இந்தக் காலத்தில் இவர்களின் அங்கீகாரத்திற்கென்றே ஒருசாரார் எழுதிக் கொண்டிருந்தனர். கைலாசபதியோ

சிவத்தம்பியோ "ஓகே" பண்ணினால் அதுதான் இலக்கியம் என்ற போக்கு இருந்தது. ஆனால் அவர்களால் சிறந்த இலக்கியப்படைப்புக்களை அடையாளம் காணமுடியவில்லை. தங்களை மெத்தப படித்தவர்களாக நினைத்துக்கொண்டு மகாகவி, மு. தளையசிங்கம் போன்ற இன்னம் பலரையும் தமது நிறுவனமயப்பட்ட சிந்தனையாலும் இசங்களாலும் யுடன் அங்கொன்றும் இங்கொன்றுமாக படைப்பாளிகளைச் சிதறடித்தது. நாடகத்துறையில் பேராசிரியர் வித்தியானந்தனின் பங்களிப்பு முக்கியமானது. சிங்களப்பகுதிகளில் தேசிய நாடகத்தின் உருவாக்கத்திற்குச் சமமாக தமிழ்த்தேசியநாடக உருவாக்கத்திற் காக ராவணேசன் போன்ற நாடகங்களை பயன்படுத்தினர். எமது கிராமங்களிலும் வெடியரசன், பூதத்தம்பி



நிராகரித்தனர். இதன்போது, இதற்கான எதிர்க்குரலாக எஸ்.பொ திகழ்ந்தார். அலை சஞ்சிகையும் தனித்துநின்று இவர்களின் ஆதிக்கத்திற்கு எதிராகக் கலகக்குரலாக ஒலித்தது. எங்களுக்குத் தெரிந்து, இப்படியும் ஒரு பார்வை இருப்பதை அலை சஞ்சிகை மூலம்தான் அறிந்தோம்.

அதேவேளை, **1977** களில் இருந்த கலவரச்சூழல் தமிழ் மக்களின் எழுச்சி

போன்ற நாடகங்கள் ஆடப்பட்டன. மக்களாலும் ரசிக்கப்படன

உண்மையிலேயே ஆயுதப்போராட்டம் ஒன்றிற்கான பண்படுத்தப்பட்ட சூழல் இங்கே இருந்தது. ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பினர் பிரசாரத்தில் அதிக கவனம் செலுத்தவில்லை ஆயிரம் கூட்டங்கள் கொண்டு சேர்கக்காததை ஒரு தாக்குதல் செய்துவிடும் என்று

சொன்னார்கள், அதையே கடைசி வரையும் செய்தார்கள்.

## நிகழும் சருக்கம்

புதிதாக இப்பொழுது எழுதுகிறவர்கள் நல்லா எழுதுகிறார்கள். 1977 வரை பெரும்பாலும் பிரசாரப்படைப்புக்கள் தான் வெளிவந்தன. சரியான படைப்பு வறுமை. கிட்டத்தட்ட நல்ல படைப்புகள் மருந்துக்கும் இல்லாத நிலை தான் தொடர்ந்தது. இதற்கு இலங்கை இடதுசாரிகளும் ஒரு காரணம். அவர்கள் பெரும்பாலும் எரியும் பிரச்சினைகளைத் தவிர்த்தனர். கைலாசபதி, கா.சிவத்தம்பி போன்றோரும் முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் கொங்கிரீட் மாதிரி எல்லாவற்றையும் கட்டுப்படுத்திவந்தனர். யுத்தகளங்களிலிருந்து போனவர்கள் நனவிடை தோய்தல் எழுதுகிறார்கள் என்று விமர்சிப்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால் உண்மையாக அப்பிடி நினைவு உள்ளவர்கள் தான் அதை எழுதவேண்டும், அவர்களின் மன அவசத்தை அவர்கள் தான் வெளிப்படுத்தவேண்டும்.

உலகம் பூராவும் யுத்தகளங்களிலிருந்துதான் மகத்தான இலக்கியங்கள் பிறந்திருக்கின்றன. அதிலும் இது ஒரு சிறியசமூகம், சுயநலம்கொண்டசமூகம், அதிகாரத்திற்கு ஒத்தோடும் சமூகம், இதிலிருந்து மாற்றாக சிந்திப்பவர்களையும் ஒத்தோடிகளாக்கவே பலர் விரும்புகிறார்கள்.

யோ. கர்ணனின் கொலம்பஸின் வரைபடம் கடைசிக்கட்ட வெளியேறலை மிகச்சிறப்பாக வெளிக்கொண்டுவந்த படைப்பு. அந்தக்காலத்து படைப்புக்களைவிட இப்ப இளம் ஆட்கள் எழுதுவது வேர்த் ஆனது.

எனது ஆதங்கம் என்னவென்றால் போருக்கு முதலிலும் நடுவிலும் போனவர்கள் தான் இப்போது உபதேசம் செய்ய திரும்பி வருகினம், இவர்களின் ஒரு பக்கக் கருத்துநிலையால் தமிழ்மக்களின் நியாயங்கள் பிழையாக பாரப்பப்படுகின்றன. வாசிப்பு உங்களை உருவாக்குவதில் என்ன பங்களிப்பு செய்திருக்கிறதென ஒருவர் கேட்டால், "வாசிப்பு என்ன உருவாக் கியதன் விளைவே என்னை நோக்கிய இந்த கேள்வி" என்பதே எனது பதிலாக இருக்குமோ தெரியவில்லை. ஆனாலும் நேர்கோட்டில் சொல்வதானால், நான் நானாக இருக்கவும் பத்தோடு பதினோன் றாக இல்லாமல் இருக்கவும், என்னில் மூழ்காமல் என்னிலிருந்து மீளவும் வாசிப்பு உதவுகிறது.

கடும் சுகவீனத்திலிருந்து மீண்டு தற்போதைய வாழ்க்கையை மேலதிக போனஸாக உணர்கையில், இசங்கள், கோட்பாடுகள், சுமைகள் எதுவுமின்றி வெள்ளைமனதுடன் நவீன இலக்கியத்திற்குள் பிரவேசிக்கும் புதிய இளந் தலைமுறையினருடன் சேர்ந்து பறக்க இறக்கைகளை என்னில் உருவாக்க முயற்சி செய்கிறேன்.

தொகுத்து எழுதியவர் - கிரிசாந்

# குமாரதேவன் மாமா!

- மருமகன் காண்டீபன்


எனது அப்பாவுக்கு அடுத்ததாக இந்த உலகத்தில் நான் மிகவும் விரும்பும் ஒருவராக குமாரதேவன் மாமா இருந்தார். குமாரசாமியின் முற்பாதியையும் கமலாதேவியின் பிற்பாதியையும் சேர்த்து 'குமாரதேவன்' என ஆண்பாலாக பெயர் சூட்டினர் பெற்றோர்! அதற்கேற்றால் போல் அம்மப்பா போன்று வாசிப்பும் நுண்ணறிவு மிக்கவராகவும் அம்மம்மா போன்று பொறுமையும் பிறரை அனுசரித்துப் போகும் இயல்புடையவராக கடைசிவரை இருந்தார்.

யுத்த இடப்பெயர்வு காரணமாக எங்கள் குடும்பமும் மாமாவும் பல மைல் இடைவெளியில் வசித்து வந்தோம். யாழ்ப்பாணத்தில் இருந்த மாமா பண்டாரவளையில் எங்களுடன் இருந்த அம்மம்மாவுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் தொலைபேசியில் பேசுவது வழக்கம். அப்போதெல்லாம் மாமாவுக்கு என்னுடன் கதைக்க எதுவும் இருந்ததில்லை. 'சுகமா இருக்கிறீங்களா?, பள்ளிக்கூடம் போறீங்களா?' என்படுதுடன் எமது உரையாடல் முடிந்து விடும். ஒருமுறை அம்மம்மா "குமாரதேவன்! இவனுக்கும் உன்னப்போல பேப்பர் வாசிப்பது, முத்திரை, பழைய காசு சேர்ப்பதுதான் பொழுதுபோக்கு" என்றதிலிருந்து எனக்கும் மாமாவுக்கும் கதைக்க நிறைய இருந்தது. இந்த வருட நடுப்பகுதில் கூட வழமையான பேச்சின் இடையில் "காண்டீ! கடற்கோட்டை முத்திரை 2016இல் வெளிவந்தது தெரியுமோ?" என்றார். அதன் பின்னர்தான் இணையம்மூலம்கடற்கோட்டை முத்திரையின் முதல் நாள் உறையை வாங்கினேன்.

2002இல் A9 பாதை திறந்த பின் மாமா கொழும்பு வரும்போதெல்லாம் எங்கள் வீட்டில் தங்குவார். தொடர்மாடியின் மொட்டை மாடியில் நிலவொளியில் இரவிரவாக கதைத்தது இன்னும் நினைவிருக்கு. என்னைப் போலவே அவரும் நகர வாழ்வை விட கிராம வாழ்க்கையை இயற்கையை விரும்பினார், என்னை விட அதிகமாக காரைநகரை நேசித்தார். ஒருமுறை என்னை காரைநகர் கோவளத்திற்கு கூட்டிச் சென்று தான் இளவயதில் வாழ்ந்த கோவளத்தை விவரித்தார். அந்த விவரிப்பில் ஒரு பெருமிதமும் ஏக்கமும் இருந்தது. இடப்பெயர்வால் காரைநகர் பெற்ற நன்மையாக இன்னும் பழமை மாறாத வீடுகளை சொல்வார். காரைநகரில் இருந்த நூற்றாண்டு பழமையான நாற்சார் வீட்டை வீட்டின் உரிமையாளர் இடித்துவிட்டதை பலமுறை எனக்கு சொல்லி கவலைப்பட்டார்.

எனது திருமணத்தின்போது வாழ்வா சாவா போராட்டத்திலிருந்தும் மதுப் பாவனையிலிருந்தும் மீண்டவர், அதன் பின் தான் வாசித்த இலக்கிய உலகத்துடன் நேரடியாக பழக தொடங்கினார். அது அவருக்கு மிகுந்த உற்சாகத்தையும் புது வாழ்வையும் கொடுத்தது.

இங்கு இலண்டனில் இருந்து மாமாக்கு அழைப்பெடுத்து பேசும்போது தான் கலந்துகொண்ட நிகழ்வுகள் பற்றியும் அங்கு நடந்த சலசலப்பு பற்றி சொல்வார், அவருக்கு இணையம் பழக்கமில்லாததால் இணையத்தில் அச்சலசலப்பு தொடர்பாக வந்த செய்தியை அவருக்கு சொல்வேன். விசாரிக்கும்போது பேச்சில் மகிழ்ச்சி தெரியும். கவினுக்குத் தமிழை சொல்லிக் கொடுக்கச் சொல்வார். 'விளங்களையே...' எனக்கேட்டு கேட்டு பல விடயங்களை எனக்கு புரிய வைத்த மாமாவுக்கு காரை நகரைச் சேர்ந்த அறிஞர்கள் பற்றி புத்தகம் எழுதும் ஆசை இருந்தது. அப்படி



யாரையாவது எனக்கு அறிமுகம் செய்து வைக்கும்போது அவர்களின் நிறைகளை சொல்லியே அறிமுகம் செய்வார். நான் அறிந்து யாரையும் அவதூறாகப் பேசியது கிடையாது. யாரிடம் எது பேச வேண்டும் என நன்கு அறிந்து இருந்தார். அப்பா நோய்வாய்ப்பட்டிருக்கும் போது அப்பாவிடம் அடிக்கடி தொலைபேசியில் நலம் விசாரிப்பதோடு, உயர் இரத்த அழுத்தம் நீரிழிவு பற்றி தான் வாசித்தவற்றை சொல்லிக் கொண்டிருப்பார். என்னிடம் மகன் கவினைப் பற்றி எழுதினால் நான் அச்சில் கொண்டுவருவதாக சொல்லி இருந்தேன். அது நடக்காமலே போய்விட்டது! நான் தொலைபேசி விட்டு வைக்கும்போது 'காண்டீ! மறக்காமல் அடுத்த கிழமையும் எடு' என்பார். ஓம் மாமா! நான் ஒவ்வாரு வாரமும் அழைப்பெடுப்பேன் நீங்கள் கதைப்பிங்களா...?

என்றென்றும் உங்கள் நினைவுடன்,

# குமாரதேவன்

*-சாந்தன்*

"சேர், பிஸியா?" ஒவ்வொரு நாளும், அல்லது ஒன்று விட்டொரு நாளாவது எனக்கு வரும் அந்தக் குறுகிய அழைப்புக்கள் இப்படித்தான் அன்பும், பண்பும் பிரதிபலிக்க ஒலிக்கும். அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் குமாரதேவன். காலை ஏழு ஏழரைக்குள் அந்த அழைப்பு வருமானால் அது ஒரு தகவல் முன்னறிவிப்பாக இருக்கும். இன்றைக்கு இன்ன பேப்பரில் இன்ன விஷயம் வந்திக்கிறது, பாருங்கோ" என்று சொல்லி வைத்துவிடுவார். காலையில் முதல் வேலையாக எல்லாப் பத்திரிகைகளும்- ஆங்கிலப் பத்திரிகைகள் உட்படப் பார்த்திருப்பார்.

2005ல் யாழ்ப்பாணத்தில் என் நூல் வெளியீடொன்றின்போதுதான் குமாரதேவன் அவர்களை முதன்முதலிற் சந்தித்தேன். வந்திருந்த இருபத்தைந்து முப்பது இலக்கிய ஆர்வலர்கள் எல்லோருமே ஏற்கெனவே அறிமுகமானவர்கள். அவர்களிடையே முன்னர் அறிந்திராத ஒருவர் உட்கார்ந்திருந்து அமைதியும் அக்கறையுமாகச் செவிமடுத்துக் கொண்டிருந்தார். அவரது மிக எளிமையான தோற்றம் என்னைக் கவர்ந்தது. கூட்டமுடிவில் அவருடன் போய்ப் பேசியபோது இவ்வளவு ஆர்வமும் அறிவும் கொண்ட இம்மனிதர் இவ்வளவு நாட்கள் எங்கிருந்தார் என்ற வியப்பு வந்தது. தொடர்ந்து வந்த ஒரு தசாப்தத்துக்கு மேலாக எனக்கு மிகச் சிறந்ததோர் இலக்கிய சகாவாக அவர் அமைவார் என அப்போது தெரியாது

குமாரதேவன் ஏதோ இருந்தாற்போலோ அல்லது வேறு பராக்கோ, வேலையோ இன்றி இலக்கியத்தின்பால் திரும்பியவரல்லர். தன்னை அவர் வெளிக்காட்டு முதலே - பல்லாண்டுகளாகவே - ஒரு பழுத்த ஒரு வாசகனும் சிந்தனையாளனும் அவருள் குடிகொண்டிருந்தார்கள் என்பது எனக்கு விரைவிலேயே விளங்கிற்று. இந்த விளக்கம் தொடர்ந்த ஆண்டுகளில் மென்மேலும் வலுப்பெற்றது.

குமாரதேவன் வாசிப்பை ஒரு யோகமாகக் கொண்டவர் என்பது கூட அவரை அறிமுகப்படுத்தப் போதாது என்றேபடுகிறது. அது அவருடைய இயல்பாயேயிருந்தது. எனினும் வெறும் வாசிப்புடன் நிறுத்தியவர் அல்லர் அவர். வாசிப்புகளைத் தொடர்ந்து ஆய்வு, தேடல், சிந்தனை என்பவையும் அவருள் தாமாகவே கிளர்ந்தவை. எந்த ஒரு சிறிய விஷயமானாலும் தன் மனது ஏற்கும் வரை தேடலைத் தொடரும் குறுகுறுப்பு அவரிடமிருந்தது. ஒரு குறிப்பிட்ட சொல் கூட வாரக்கணகில் அவர் தேடலைத்

தொடரச் செய்யும்.

குமாரதேவன் கேட்கிற கேள்விகளுக்கு விடை கண்டு பிடிக்க முயல்வதாலும், அவருடைய சந்தேகங்களுக்கு விளக்கமளிக்க முயல்வதாலும் நான் அறிந்து கொண்டவை ஏராளம். எந்த மூலை



முடுக்கு பற்றி எப்போது என்ன கேட்-பார் என்று தெரியாது. "யூதர்களின் மூன்று முனை விளக்குப்பற்றி உங்களுக்கு எதாவது தெரி யுமா?" என்றார் ஒரு நாள். தேடினேன்.

அவருக்கென்று சொந்த அபிப்பிரா-யங்கள் கணிப்பீடுகளை வைத்திருந்தார். எவருடைய செல்வாக்கும் ஆளுமைக்குக்கு உட்படாமல் சுயமாய் ஏற்படுத்துகிற இந்த அபிப்பிராயங்கள், திடமானவை. எந்தச் சபையிலும், எவருக்கும் தயங்காது, அதே நேரம் எவர் மனமும் கோணாது அவற்றைச் சொல்லும் நெஞ்சுரமும், பண்பும் கொண்டிருந்தார்.

இப்படிச் சொந்தக் கருத்துக்களை இயல்பாகவே உருவாக்கிக் கொள்வதற்கு வேண்டிய நுண்ணுணர்வும் நுண்மதியும் அவரிடம் இருந்தன, எழுத்துக்கள், பேச்சுக்கள் பற்றிய அவர் கணிப்புக்கள் என்னுடன் பெரிதும் உடன்பட்டன் எனக்குப் பெரிதும் பயன்பட்டன. "நீங்கள் ஒரு தரக் கணிப்புமானி" என்று பகடிவெற்றியாகச் சொல்லியிருக்கிறேன், உண்மையும் அதுதான். சில வேளைகளில் அவற்றை அப்படியே ஒப்புக் கொள்ளா விட்டாலும், அக்கருத்துகள், நோக்குகள் அசட்டை செய்துவிட கூடியவையா யிருந்ததில்லை.

இலக்கியம் என்றில்லை, அரசியல், பண்பாடு, சமூகம், வரலாறு, மொழி என்று பலவற்றிலும் அவர் ஆர்வமும் அக்கறையும் விரிந்திருந்தன. தான் படிக்கிறவற்றையும் கேட்கிறவற்றையும் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வதில் நிறைவு கண்டவர். அவருடைய நண்பர்களில் எல்லாவிதமான போக்குள்ளவர்களும், கருத்துள்ளவர்களும், வயதுள்ளவர்களும் இருந்தார்கள் எனினும் எந்த மாறுபாடோ முரண்பாடோ இன்றி அறிவு, தேடல் இவற்றையே ஆதாரமாய்க் கொண்டு அவ்வுறவுகள் அமைந்திருந்தன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய இன்னொரு விஷயம் அவருடைய ஊரபிமானம், காரைநகர் பற்றியும் அதன் மக்கள் பற்றியும் பெருமை கொண்டிருந்தார். 'புத்திசீவி' என்பதற்குக் கண்முன் உலவிய உதாரணம் குமாரதேவன்.

ஒரு ஞானபீடமாய் விளங்கிய அந்தக் கடைப்படிகள் இனி வெறும் படிகளாகவேயிருக்கும்.

என் செல்பேசியில், "சேர் பிஸியா?" என்கிற அன்பான குரல் இனிக் கேட்கப் போவதில்லை.

# அஞ்சலி

-ஆச்சி

நான் ஐய்யா பாத்துக்கொண்டு இரய்யா எண்டால் இருப்பார். ஒரு பொய் களவும் இல்லை. அவர் அப்படித்தான் எல்லாருடனும் அக்கறையாக இருப்பார். அப்படிப்பட்டவருக்கு வருத்தந்தான் ஒரு நாலைஞ்சு தடவை வந்து வருத்தம் பண்ணிப்போட்டு.

அவர் பேப்பர் பாத்துப்பாத்து இந்தக் கூட்டங்களுக்கெல்லாம் போவார். எல்லாரும் அவரை வந்து வந்து கூட்டிக் கொண்டு போவினம். ஒரு நாளைக்கு எத்தினை பேர் வருவினமய்யா...

அவரோட கதைக்கேக்க - கதைக்கிறதெண்டால் அவர் ஒவ்வொரு நாளும் பேப்பரும் புத்தகங்களும் படிச்சுப் படிச்சுக்கொண்டிருப்பர். அதையெல்லாம் தான் அவர் கதைப்பார். அவருக்கு இப்பிடி திடீரெண்டு நடந்து போச்சுது இல்லையெண்டால் அதிலை, இந்த வாசல்ல இப்பிடி இருப்பார், திடீரெண்டு மழை ஏதேனும் வந்திச்செண்டால், பாத்துப்பாராமல் வில் பாத்துப்பாராமல் வில் எண்டு சொல்லுவார். நனையப் போகுது நட்டம் வர முன்னம் கேக்கிறவிலைக்குக் குடு எண்டுசொல்லுவார். நானும் ஓமய்யா எண்டு சொல்லிச் சொல்லி வைச்சிருப்பன் பழங்கல.



# வழிகாட்டியும் ஆசானும்

- சண்முகம் அண்ணை

குமாரதேவனை எங்களுக்கு 1985 இல் இருந்து தெரியும். உமா ஸ்ரோர்ஸ் எண்டொரு கடை முன்னாலை இருந்தது அதிலை பேப்பருகளை வாங்கிக்கொண்டுவந்து விப்பார். அதோட எங்களோடை கடையிலை உதவியாய் நிப்பார். எட்டுமணிக்குப்பிறகு அவற்ற வட்டிக் கடைக்குப்போவார். பின்னேரம் நாலரை அஞ்சு மணிக்குத் திரும்பி வந்திடுவார். பிறகும் கடையிலை நிண்டு உதவியள் செய்வார். அனேகம் கசியராத்தான் இருப்பார். கணக்கு வழக்கெல்லாம் நல்ல துல்லியமாச்செய்வார், நல்ல ஞாபக சக்தி உள்ளவர். அவர் இருந்தால் மூண்டு தொழிலாளிக்குச்சமன். அப்பிடி எங்களோடை முப்பத்தைஞ்சு வருசமா இருந்தவர்.

சண்டை இடப்பெயர்வு எண்டு என்ன நடந்தாலும் நாங்கள் எங்கைபோறமோ அங்கை அவர் எங்களோடையே வந்திடுவார். இப்பிடி எல்லா இடமும் வாற அவர் என்ரை மகன்களுக்கு நல்லதொரு தகப்பனாகவும் ஆசிரியராகவும் பல புத்திமதிகளைக் கூறுவார். கடையில எங்களுக்கு வாற பிரச்சினைகளிலையும் நல்ல புத்திமதிகள் சொல்லுவார். நான் அவரை எங்கள் கடையில் வேலைசெய்கிற ஒருவராக நினைக்கேல்லை, நான் அவரை என்னெண்டு சொல்ல... நல்லொரு தமையன்மாரித்தான்... ஒரு பெரிய குருமாதிரி எண்டும் சொல்லலாம்.

அவருக்கு முந்தியிருந்த சில பழக்க வழக்கங்களினாலை உடம்பு இப்பிடியாப்போச்சு. அவரை நான் சுதந்திரமாக இருக்கவிட்டன். அவர் எந்த நேரமும் போகலாம் வரலாம், வராமலும் விடலாம். அவரை எனக்கொரு வழிகாட்டியாகத்தான் வச்சிருந்தனான். அவர் தன்னுடைய இந்தப்பொது வேலைகளை எல்லாம் செய்து விட்டு இருக்கும் மிச்சக்காலத்தைத்தான் அவரோடு நான் பகிர்ந்து கொள்வேன்.

இந்தியாவிலையோ இலங்கையிலோ தேர்தல் எண்டால் மிக உற்சாகமாகி லெஜர் எல்லாம் போட்டு வடிவா எழுதி அதைப்பற்றிக் கதைப்பார். முனிசிப்பிலிட்டில ஒரு கூட்டம் எண்டால் என்ன, வர்த்தக சங்கத்திலை ஒரு கூட்டமெண்டால் என்ன என்ர இடத்தை நிரப்பி அவர்தான் போவார். எவ்வளவு பரபரப்பாக இருந்தாலும் வேலை சம்பந்தமாக நான் கேட்பதையெல்லாம் தட்டாமல் குறித்த காலத்துக்குள்ளேயே நல்ல வடிவாச் செய்துமுடித்துவிடுவார்.

குமாரண்ணை இருக்கிறதெண்டதே எங்களுக்கொரு பெரிய கொடைதான்,
ஒரு பலம்தான். அவரைப்போல நாணயஸ்தனான ஆள், நம்பிக்கையான ஆள் - இப்ப அப்பிடி கிடைக்கிறது கஸ்ரம். இந்தத் தொழில் இப்ப இவ்வளவுக்கு வளர்றதுக்கு அவர் இருந்ததும் ஒரு காரணம். என்ரை பிள்ளையளும் நல்லொரு இடத்துக்கு வந்ததற்குக்காரணம் அவற்ற வழிகாட்டல்களும் புத்திமதிகளும்தான். அவர் சொல்லுற சொல்லுக்கு நாங்கள் எண்டைக்கும் எந்த மறுப்பும் சொல்லுறதில்லை. அவர் சொல்லுற அத்தனையும் நல்லா யோசிச்சுச் சரியாத்தான் சொல்லுவார், அதனாலை நான் திருப்பிக்கதைகிறதுமில்லை மறுக்கிறதுமில்லை.

நானும் அவரைப்போல ஒரு வாசிப்புப் பழக்கம் இருந்தவன்தான். ஆனால் கலியாணம் எண்டுற ஒரு வளையத்துக்குள்ள போயிற்றன். அதுக்குப்பிறகு அந்த வளையத்தைத்தாண்டி என்னாலை போகமுடியாமல் இருந்தது. அதனாலை என்ர வாசிப்புப்பழக்கத்தை தொடர முடியேல்லை. ஆனால் குமாரதேவன் வாசிப்பையும் வாசிச்சவை பற்றி பேசுவதையும் ஒருபோதும் கைவிட்டதில்லை.

சுகாதார அதிகாரிகளால், நீதிமன்றங்களால் ஏதாவது பிரச்சினைகள் வரும்பொழுது தோளோடு தோள் நின்று அவர்தான் எங்களுக்கு வழிகாட்டுவார். அவர் எங்களோடை வந்து இதை இப்பிடிச்செய்யோணும் இதுக்கு இந்த லோயரைப்பிடிக்கோணும் எதை எப்பிடிக் கதைக்கோணும் எப்பிடிச்செய்யோணும் எண்டு அரசாங்கம் சம்பந்தப் பட்ட இப்பிடியான விசயங்களை எங்களுக்குப் புத்திமதி சொல்லிப் புரியவைப்பார். அப்பிடியான ஒராள் இப்ப எனக்கு இல்லை. அவர் எங்களுக்கொரு பெரிய ஆசானாவும் வழிகாட்டியாவும் இருந்திட்டு போயிட்டார்.

நான் ஒருக்காச் சொன்னன், கொஞ்சநாள் போய் தாயோடை இருந்து உடம்பைக் கொஞ்சம் தேத்தி திரும்ப நல்ல நிலைக்கு வாங்கோ எண்டு. அவருக்கு நான் அப்படிச் சொன்னது பிடிக்கேல்ல, சண்முகமண்ணை இப்படிச் சொல்லிப்போட்டார் என்றாலும் அதைக் கேட்காமல் இங்கதான் இருப்பன் எண்டமாதிரி இங்கதான் இருந்தார்.

பெரிய ஒரு இழப்புத்தான். இந்த இடைவெளியை யாராலும் இனி நிரப்பேலாது.

(யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை சிவன் கோயிலின் அருகிலுள்ள சண்முகம் சைவ உணவக உரிமையாளர், குமாரதேவன் தன்னுடைய வாழ்வின் பெரும் பகுதியை இவர் குடும்பத்துடன் வாழ்ந்தார்.)

# மறுக்கத்தான் முடியுமா? மறைக்கத்தான் முடியுமா?

-நேரு மாஸ்டர்

நண்பா !

வசந்தமான இளமைக்காலங்கள் இனிமை யானவை அக்காலங்களில் நண்பனாக நீயும் நானும் அமைதியாக வாழ்ந்ததை மறக்க முடியுமா?

இளமைக்கால சுவடுகளின் வலிகளை அறிந்த நண்பர்கள் அல்லவா நாங்கள் எம்மிடம் ஆற்றல்கள் பல இருந்தும் குடும்ப நிலை காரணமாக அமைதியாக நாம் இருந்தது நாமே நன்கு அறிவோம்.

யாழ்ற்ரன் கல்லூரியில் நாம் நண்பர்களாக படித்த காலத்தில் தமிழிலும் வரலாறு, பூமி சாஸ்திரம் போன்ற பாடங்களிலும் உனது திறமை கண்டு மிரண்டவன் அல்லவா நான். நல்ல வசதியும் வாய்ப்புகளும் உனக்கு கிடைத்து இருந்தால் இளமைக் காலத்திலே-யே பல பல்கலைக்கழகப் பட்டங்களை நிச்சயமாக உனதாக்கி இருப்பாய்!

சிறுவயதில் என்னோடு உரையாடும் பொழுது எப்போதும் யோசித்தும் சிந்தித்-தும் உரையாடும் பண்பு கண்டு நான் நான் ஆச்சரியப்பட்டதுண்டு. எப்பொழுதும் பவ்வியமாகப் பேசி இளம் புன்னகை-யோடு வாழும் பண்பாளன் அல்லவா. அதை சிறுவயதில் மட்டுமல்ல இன்றளவும் காப்பாற்றியது எனக்கு மிகுந்த ஆச்சரியத் தைத் தருகின்றது!

சிறு வயதில் எனது கல்விக் காலத்தில் ஏற்பட்ட ஏழ்மை கண்டு நான் என்மீது ஆத்திரப்படும் பொழுது அதை உன்னோடு ஒப்பிட்டு அமைதிப்படுத்திய ஒரு ஆத் மார்த்த நண்பன் அல்லவா நீ. அப் பொழுது இந்தக் கஷ்டம் நிலையானதல்ல, மாற்றங்களும் மாறுதல்களும் வாழ்வில் மாறிவரும் வசந்தத்தின் பொழுது நீ என்னைச் சந்திப்பாய் என்று கூறினாய். அந்த வார்த்தைகளை நினைவில் வைத்-தபடியே நாம் மீண்டும் வருடங்கள் பல கடந்து சந்தித்தோம். கடந்த இரு வருடங் களுக்கு முன்பு, இப்பொழுது எப்படி இருக்கின்றாய் என்று கேட்கும் பொழுது அந்த நாள் ஞாபகம் தான் எனக்கு வந்தது நண்பா. எல்லோரையும் வாழவும் சிந் திக்கவும் வைத்து முடிவில்லாமல் நம்மைச் சிந்திக்க வைத்து சென்று விட்டாய் அதை எண்ணும்பொழுது மனங்கள் கனக்கின்றன.

இன்று உனது சிந்தனையும் ஆய்வுத் திறன்களையும் மாணவர்களோடு பகிர்ந்து கொண்டதன்மைகளையும் பார்க்கும் பொழுது, நீ மாறவே இல்லை தொடர்ந்தும் கற்றுக்கொண்டே இருந்தாய் என்பதை எண்ணி பெருமகிழ்வு கொண்டேன் நண்பா!

நண்பா நானும் நீயும் வந்த தடங்களையும் வாழ்வின் வலிகளையும் வசந்தங்களையும் மறக்கத்தான் முடியுமா? அல்லது மறைக் கத்தான் முடியுமா? மறுக்கவும் முடியாத உண்மைகள் அல்லவா நண்பா!

நண்பா உனது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல ஈழத்துத் தில்லைக் கூத்தன் பாத கமலங்களை வேண்டி நிற்கும் அன்பு நண்பன் நேரு.

(அருளானந்தம் செல்வச்சந்திரன்)

# அஞ்சலி

- எஸ். கே. விக்னேஸ்வரன்

அவரை நான் நேரில் சந்தித்ததில்லை. ஆயினும் அவரைப் பற்றி கடந்த மூன்று ஆண்டுகளாக நிறையவே கேள்விப்பட்டிருக்கிறேன். பரந்தளவிலான வாசிப்பில் ஆர்வமும் ஆழமான புரிதலும் எளிமையும் வெளிப்படைத்தன்மையும் கொண்ட ஒரு அற்புதமான மனிதர் என்று அவரைப் பற்றி நண்பர் அருண்மொழிவர்மன் நிறையவே சொல்லியிருக்கிறார். நண்பர்கள் மத்தியில் உரையாடும்போதும், நிகழ்வுகளில் கருத்துரைக்கும்போதும் தயக்கமின்றி தனது அபிப்பிராயத்தை வெளிப்படையாகவே சொல்லக் கூடியவர் அபார ஞாபக சக்தியும், வரலாற்றுத் தகவல்களை மிகவும் துல்லியமாக சொல்லக் கூடிய ஆற்றலும் கொண்ட அவர் இளம் தலைமுறையினருடனும் கூட சரளமாகப் பழகுபவர் என்று அனேகமாக பல நண்பர்கள் மூலமாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். புதிய சொல்லில் வெளிவந்த அவரது ஒரு சுருக்கமான சுய வரலாற்று அனுபவங்கள், நூலகம் ஆவணகத்திலிருக்கும் அவரது வாய்மொழி ஆவணம் என்பவற்றைப் படித்தும் கேட்டும் என்னுள் அவர்மீது நிறைய மதிப்பும் நேரில் சந்திக்கும் ஆர்வமும் வளர்ந்திருந்தன. அடுத்தமுறை இலங்கை செல்லும்போது கட்டாயம் அவரைச் சந்தித்து உரையாட வேண்டும் என்று ஆர்வமாக இருந்தேன். ஆனால் திடீரென்று அவர் மறைந்துபோன செய்தி எனது இந்த ஆசையை நிராசையாக்கிவிடுவதாக வந்து சேர்ந்தது. மிக நெருக்கமாக நீண்ட நாள் பழகிய ஒருவரின் மறைவுச் செய்தியைப் போல் அது பேரதிர்ச்சியூட்டுவதாக அமைந்திருந்தது. அவரைச் சந்தித்தால் நான் பேசவேண்டும் என்று பல விடயங்களை மனதில் நினைத்து வைத்திருந்தேன். செய்தி தவறான செய்தியாக இருக்காதா என்ற தவிப்பில் நண்பர் அருண்மொழிவர்மனுக்குப் போன் செய்து உறுதிப்படுத்திக் கொண்டேன். என்னைவிடவும் வயது குறைந்த அவருக்கு என்ன சாகிற வயதா என்ற நினைப்பால் எழும் தவிப்பை ஆற்ற முடியவில்லை. மீண்டும் அவரது குரலை வண்ணி இலக்கியச் சந்திப்பு வீடியோவிலும், நூலக வாய்மொழி ஆவணக ஒலிப்பதிவிலும் கேட்டு மனதை ஆறுதற்படுத்தினேன். இலக்கிய உலகுக்கு பரவலாக அறிமுகமாகத் தொடங்கிய கடந்த நாலைந்து ஆண்டுகளிலேயே பரவலாக அறியப்பட்டுவிட்ட, மதிப்புக்குரிய ஓர் ஆளுமையாக, இளம்தலைமுறை படைப்பாளிகள், சமூக செயற்பாட்டாளர்கள் மத்தியில் இணைந்து செயற்பட்ட ஒரு செயற்பாட்டாளருமாக தன்னை அடையாளப்படுத்திய குமாரதேவன் ஐயா என்று இளைஞர்களால் அன்புடன் அழைக்கப்பட்டு வந்த அந்த அருமனிதன் இன்று இல்லை என்பது தரும் துயரம் பேரிழப்பின் பெருந்துயரம். குறுகிய காலமாயினும் உங்கள் உறவால் உங்களுடன் பழகிய புதிய சொல், விதை குழுமம் என்பவற்றைச் சார்ந்த இளைஞர்களான செயற்பாட்டாளர்களுட்பட பல இளைஞர்களிடம் உங்களிடமிருந்த அற்புதமான பண்புகளை நிச்சயமாகப் பற்ற வைத்திருப்பீர்கள். அந்தப் பற்றவைத்தல் அவர்களூடாகப் பற்றிப்படரும்.

உங்கள் எளிமையும், அமைதியான வாழ்க்கை முறையும், ஆழ்ந்த வாசிப்பும் பற்றிய நினைவுகள் அவர்களூடாக என்றென்றைக்குமாக நிலைத்து நிற்கும். உங்களைப்பற்றி அவர்களூடாக நான் கேள்விப்பட்ட ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு உரையாடலும் எனக்கு வள்ளுவனின்

"பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த மாசறு காட்சியவர்"

என்ற குறளை ஞாபகமூட்டிக் கொண்டே இருந்தன. சென்றுவாருங்கள் குமாரதேவன். உங்கள் நினைவுகள் எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஆதர்சமாக இருக்கட்டும்!

எனது மனமார்ந்த அஞ்சலிகளை ஏற்றுக் கொள்ளுங்கள்!

# வாசிப்பிலிருந்து சமூகமனிதருக்கு : குமாரதேவன் என்னும் சகபயணி

- கிரிசாந்

குமாரதேவனை எப்பொழுது முதன் முறையாகச் சந்தித்தேன் என்பது நினைவில் இல்லை. ஐந்து வருடங்களுக்கு முன் என்பது மட்டும் தெரியும். அவர் கொஞ்சம் கொஞ்சமாக எங்களுடன் பழகத் தொடங்கி எங்களில் ஒருவராக ஆனார். இலக்கிய நிகழ்வுகள், சமூகம் சார்ந்த உரையாடல்கள், பயணங்கள் என்று எம்முடன் சக பயணியாகத் திரிந்த அந்த மனிதனை நினைவு கூரும் நேரமிது. வேறு யாரையும் போலவோ, எங்களைப் போலவோ அல்லது அவரே எதிர்பார்த்திராதது போலவோ அவர் மரணித்து விட்டார். இறுதி வரை அவர் நம்பியிருக்கவில்லை, தான் இவ்வளவு வேளைக்கு விடைபெற வேண்டியிருக்குமென்பதை.

குமாரதேவனை எதற்காக நினைவு கூர வேண்டும்? அவரின் சமூக மதிப்பென்ன? அவரின் எதிர்காலப் பங்களிப்பென்பது என்ன?

குமாரதேவனை எதற்காக நினைவு கூர வேண்டும்?

குமாரதேவனை ஒரு வாசகராக இந்தச் சமூகம் அறியும். இது பிறிதொருவருக்கு நம் காலத்தில் கிடைக்க அரிதாயிருந்த இடம். வாசிப்பவர்களில் அரைவாசிப் பேர் எழுத்தாளர்கள், மிச்சமிருக்கும் வாசகர்களும் பத்திரிகை வாசிப்பதோடு சரி. அதற்கு மிஞ்சிய இலக்கிய, சமூக வாசிப்பென்பது ஒன்றாகக் கலந்த முதிர்ந்த வாசகர்களைக் காண்பது அரிது. இந்த நாட்டின் கடந்த காலமென்பது படுகொலைகளும் வாதைகளும் நிரம்பியது, இழப்புக்களையும் அவநம்பிக்களையும் பலருக்கும் தந்துவிட்டுப் போயிருப்பது. ஆனால் இவ்வளவற்றையும் கடந்து வந்த ஒரு முதிய மனிதர், இறுதி யுத்தத்திற்குப் பிந்தைய காலத்தில், வாசகத் தரப்பின் முதன்மையான குரல்களில் ஒன்றாகத் தன்னுடையதை மாற்றினார். தன்னுடைய

இருப்பிற்காகவோ அடையாளத்திற்கா கவோ தான் அவர் இதெல்லாம் செய்-தாரா என்றால், இல்லவே இல்லை. அவர் அந்தச் செயற்பாடுகளில் முழு முற்றான மனதுடன் பொருந்தியிருந்தார். அது வொரு வாழ்வு முறை. குமாரதேவன் நம் சமூக இருப்பிற்குள் நிகழ்ந்த நெகிழ்ச்சி. அனைத் துத் தரப்பினருடனுமான இணை விற்கும் கருத்தைப் பகிர்வதற்குமான வாய்ப்பிற்குமாக மாற்றிக் கொண்ட ஒருவர், அவர் யாருடன் இருக்கிறாரோ அவர்களுக்கெல்லாம் பலமாயிருக்கும் முதிர்ந்த ஆத்மா அவருடையது. அவர் வழிகாட்டி மட்டுமல்ல, அவர் ஒரு சக பயணியும் என்பதே இங்கு மிக முக்கிய-மானது, அவர் தன்னுடையதல்லாத பிற




யோசித்துப் பார்த்தால், பள்ளிக்-கல்வியை இடையிலே விட்டவர். கல்வி என்பது அறிதல் என்பதை உணர்ந்த-வர். தீரா அறியும் ஆர்வம் கொண்ட-வர். குடும்பப் பின்னணியால் வியாபா ரத்திற்கும் வந்து, பின்னர் நாட்டின் கலவரங்களால் விரட்டியடிக்கப்பட்டு, முப்பத்தி ஐந்து வருடங்களாக சண்மு-கம் கடையில் இருந்து, வாழ்ந்து, தன்னு டைய இறுதிக்காலம் முழுவதையுமே வெளிகளையும் இணைக்கும் சக்தியாக இருந்தார்.

வயது முதிர்ந்ததும் வீட்டில் ஓய்வாக இருப்பதோ, அல்லது பழைய காலங்களை இரை மீட்டிக்கொண்டிருக்கவோ, அதைத் திரும்பத் திரும்பச் சொல்லவோ அவர் முயலவில்லை. மாறாக அவர் நிகழ்கா லத்திற்குரியமனிதர். கடந்த காலத்திலி ருந்து நிகழ்காலத்திற்கு எது தேவையோ அதை மட்டும் தான் உரையாடலுக்குள்

எடுத்து வருவார். அவருடனான உரையாடல்கள் எங்களை சமூகம் பற்றி வேறு கோணங்களில் இருந்து சிந்திக்கத் தூண்டியிருக்கிறது. அவருடைய வாதங்கள் அடிப்படை நிறைந்தவை. அதை எதிர்ப்பதென்பது உழைத்தே செய்யப்பட வேண்டியது. அவர் எந்த வாதங்களினதும் நிலைப்பாடுகளினதும் உழைப்பை வலியுறுத்தியவர். " நீங்கள் சும்மா சொல்லிப்போட்டுப் போகேலாது தானே" என்பார். சமூகத்தில் எந்த ஒன்றை முன் கொண்டு செல்வதற்கும் தேவையான அறிவுழைப்பை அவர் கொண்டிருந்தார். தெரியவில்லை என்றால் யாரிடமும் கேட்டு அறியத் தயங்க மாட்டார். மற்றவர்களை மதிப்பதென்பதை சடங்காகச் செய்பவரில்லை. அவரது உள்ளத்தின் இயல்பு அது. அது நம் காலத்தில் நாம் இழந்து கொண்டிருக்கும் முக்கியமான பண்புகளில் ஒன்று. புதிய தொழிநுட்பங்களும் இந்த வாழ்க்கை முறையும் பெருமளவில் மாறிவிட்டிருக்கின்ற சூழலில், ஒவ்வொரும் தனித் தனி ஆளாக மாறிக்கொண்டு வரும் போது, தனக்கென்ற தனி உலகில் மூழ்காமல் அதிலிருந்து மீண்டு கூட்டு வாழ்க்கையையும் சேர்ந்து செயலாற்றுவதையும் அவர் நம்பினார். அவர் தன்னுடைய இறுதிக்காலம் வரை ஒரு சமூக மனிதராகவே தன்னை நிறுத்திக் கொண்டார். இப்போதிருக்கின்ற காலச் சூழலில் வேறு சமூக அடையாளங்களுடன் ஒருவர் இந்த இடத்திற்கு வந்து சேர்வதற்கு பல வழிகள் இருக்கலாம். அவர் வாசிப்பின் வழியும் அறிதலின் வழியும் வந்து சேர்ந்திருக்கிறார். அதன் சம கால அடையாளமாக மாறியிருக்கிறார்.

விதை குழுமம் அல்லது புதிய சொல்லைத் தெரிய முதலே அவருக்கு வேறு பல சமூக அமைப்புகளையும், அரசியல் தரப்பினரையும் தெரியும். யாருடனும் எங்களுக்கு அருகில் இருந்து சேர்ந்து பயணித்ததை போல் அவர் செல்லவில்லை. இதில் நான் அவதானிப்பது பிற அமைப்புகளை விட பண்பாட்டு இயக்கங்களின் மீதே அவரின் ஆர்வம் இருந்தது. அவ்வகையான செயல்கள் மீதே அவர் அதிக கரிசனத்துடன் எதிர்வினையாற்றினார். அந்த வழியில் வாசிப்பு அவரை எங்களுக்கு அணுக்கமாக்கியிருந்தது.

மூத்த தலைமுறையினருக்கு அவருடைய இருப்பும் வாழ்வுமென்பது, இன்னும் சேர்ந்து பயணிக்கும் வாய்ப்பும், காலமும் இருக்கிறது என்பதைச் சொல்வதாகவே நான் பார்க்கிறேன். அவநம்பிக்கையுடன் வாழ்க்கையை அணுகுவதற்கு வாசிப்பு எங்களை நகர்த்துகிறதென்றால், நாங்கள் சரியானதை வாசிக்கவில்லை, தேர்ந்தெடுத்து வாசிக்கவில்லை, வாசித்ததைத் திறந்த மனதுடன் உரையாடவில்லை. தன்னுடைய அபிப்பிராயங்களை மாற்றுவதற்கு தயாராயில்லை என்றே எண்ணுகிறேன். குமரதேவன் இத்தனைக்கும் எதிரானவர், பரந்து பார்ப்பார், ஆனால் தேர்ந்தே வாசிப்பார். இன்று அநேகமான நம் பள்ளிக்கூடங்களும் கல்வி நிலையங்களும் வாசிப்பதை ஒரு கடமையாகவும், நிர்ப்பந்தமாகவும் வலியுறுத்தி மேம்போக்கான வாசிப்பையே புதிய தலைமுறையினருக்குக் கையளிக்கின்றனர். குமாரதேவன் ஏன் வாசிக்க வேண்டும் என்பதற்கு சாட்சியாக வாழ்ந்த ஒரு உதாரணம். அவருடைய இறுதிக்காலத்தில் முன்னெப்

போதையை விடவும் அதிகமாக, பலரும் அவரின் அறிவைப் பகிர்ந்து கொள்ள அவருடன் உரையாட ஆரம்பித்திருந்தனர். ஆனால் அவர் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. அவரை நம் குழந்தைகள் அறிய வேண்டும். இப்படி ஒருவர் வாழ்ந்தார், நிரம்ப வாசித்தார். ஜனநாயக பூர்வமாக உரையாடினார், முதுமை என்பது உடலுக்குத் தான் என்பதை நிரூபித்தார். சிந்தனையில் சமகாலத்தில் வாழ்ந்தார். தான் கற்றதை அறிந்ததை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டேயிருந்தார். தான் நம்பிய வற்றுக்காகச் செயலாற்றத் தயங்கவில்லை. அதற்காகத் தன்னுடைய நம்பிக்கைகளிலேயே அடைபட்டுக் கொண்டிருக்கவும் இல்லை. இப்படியாக, ஓர் நல்ல ஆசிரியருக்குரிய பண்புகள் அவரிடமிருந்து பரவிக்கொண்டேயிருந்தன. எப்படிக் கற்பது, கற்றதை எப்படிப் பயனுள்ள ஒன்றாக மாற்றிக்கொள்வது என்பதை அவர் எங்களுக்கு கற்பித்திருக்கிறார். அதை அவர் வாயால் சொல்லவில்லை. வாழ்ந்தே சொன்னார். அழுத்தும் தொனியிருக்காது குரலில், சுவாரசியம் குறையாது. தான் சொல்லும் சொற்களாகவே முழுதாக மாறி உடலும் உயிருமாக அவர் விபரிக்கும் கதைகள் சலிப்புத் தட்டுவதேயில்லை. அவரின் உடல்மொழி ஒரு நடனம் போலிருக்கும். அது உரையாடும் பெருவிருப்பின் நடனம்.

நாங்கள் உடல் களைக்கும் தூரங்களைக் கடந்து பயணம் போகும் போதெல்லாம். மனம் களைக்காத குமாரதேவன் என்ற சக பயணி எம்முடன் இருப்பது எங்கள் பயணங்களின் ஆழங்களை விரிவாக்கிக் கொண்டே சென்றது.

குமாரதேவனின் சமூக மதிப்பென்ன?

மேலே எழுதியிருப்பவற்றைத் தொகுத்து, ஒரு வாசகராக, மூத்த தலைமுறையினராக, அறிவையும் வாசிப்பையும் செயலையும் தனக்கானதாக மாற்றிக் கொள்ளாமல், அதனைப் பணப்பெறு மதியாகக் கணக்கிடாமல், சமூகத்திற்கானதாக மாற்றியிருப்பது அவருடைய முதன்மையான பங்களிப்பு. அவர் கைக்கொண்டிருந்த சமூக அறம் அது. மற்றவர் பயனுற வாழ்வதற்கான வாசிப்பு அது, மற்றவர்களில் தன்னைக் கண்டதன் அறிதல் அளித்த பரவசம். இப்படியொரு வாழ்வும் சாத்தியமாகியிருக்கிறது என்பதே அவர் தனது இருப்பின் மூலம் சமூகத்தில் நெகிழ்த்திய இடைவெளி.

அவர் பணியாற்றிய இடம், குடும்பம், தனது நண்பர்கள் என்று எல்லா இடங்களிலும் அவர் தன்னுடைய வாசிப்பையும் சமூகத்தின் அசைவியக்கங்களையும் பகிர்ந்து கொண்டேயிருந்தார். பல எழுத்தாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் தாங்கள் பணியாற்றும் இடத்தில் ஒருவராகவும், வீட்டில் ஒருவராகவும், சமூகத்தில் இன்னொருவருமாக பிளவுண்டு வாழும் வாழ்க்கையையே வாழ நேர்கிறது. இவ்விடத்தில் இதன் மூலம் எந்த அடையாளமும் கிடைக்காதென்ற போதும் வாசகராக, சக மனிதரை நேசிக்கும், நேசத்தைப் பரப்பும் ஒருவராக தன்னுடைய எல்லா வெளிகளிலும் தன்னுடைய நம்பிக்கைகளை அவர் விதைத்து விட்டுச் சென்றிருக்கி றார். சண்முகம் அண்ணையுடன் கதைக்கும் போதோ அல்லது அவருடைய உறவினர்களுடன் கதைக்கும் போதோ



அவர்களுக்கு அவரின் செயல்பாடுகள் பற்றித் தெரிந்திருந்தது, அவருடைய இரசனை, வாழும் முறை, சேர்ந்து திரியும் நண்பர்களின் பெயர், அவர்களுடனான சில நினைவுகள் என்று எங்களையும் அவரின் குடும்பத்துடன், பணியாற்றும் இடத்துடனும் இணைத்திருக்கிறார். இதை ஒருவர் ஒருநாளில் செய்துவிட முடியாது. அதற்கான பயணமும் அக்கறையும் நீண்டது. என்னளவில், அவர் வாழ்க்கையின் இழைகளைப் பின்னத் தெரிந்த ஒரு நெசவாளி. சமூகத்தையும் குடும்பத்தையும் வேலையையும் பிணைத்திருக்கிறார். அவரது குடும்பப் பின்னணி மரபான ஒன்றாக இருந்தாலும் அவர் அவற்றிலிருந்து விலகியே இருந்தார். இதுவொரு முக்கியமான புள்ளி. இன்று இருக்கும் யாருமோ, பணியையோ, குடும்பத்தையே வேறொன்றாகவும், சமூகத்தை இன்னொன்றாகவும் அணுகும் இடத்திலிருந்து, எல்லாவற்றையும் இணைக்கும் கூட்டு வாழ்க்கையை அவர் பின்னியிருக்கிறார். அதை அவர் சாத்தியமாக்கியிருக்கிறார். நாம் அவரிடமிருந்து கற்க வேண்டிய அறிதல் அது.

அவரின் எதிர்காலப் பங்களிப்பென்பது என்ன ?

குமாரதேவன் மட்டுமல்ல, யாரையும் நாம் ஏன் சமகாலத்தில் நினைவு கூரவோ, ஆவணப்படுத்தவோ, அடுத்த தலைமுறைக்குக் கடத்தவோ வேண்டுமென்றால், சுகுமாரனின், "சொல்லித் தந்ததோ கற்றுக் கொண்டதோ போல இல்லை வாழ்க்கை" என்ற கவிதை வரியைப் போல், அது புதிதாக, முற்றிலும் புதிதாக வாழ்க்கையை வாழ முடியும் என்பதை வாழ்ந்து நிரூபிக்கிறவர்களை நினைவு கூர்வதனூடாக அதற்கான சாத்தியத்தினை மற்றவர்களுடன் பகிர்கிறார்கள்.

அதன் மூலம் நம் சமூக அறங்களை ஒழுங்குபடுத்துகிறார்கள். விழுமியங்களை ஆழப்படுத்துகிறார்கள். அதன் மூலமாக எதிர்காலத்திற்கானவர்களாகத் தங்களை ஆக்கிக் கொள்கிறார்கள். குமாரதேவன் அப்படி ஆகிய ஒருவர்.

வாசிப்பிலிருந்து ஒருவர் சமூக மனிதராக மாறும் பாத்திரம் அது.

மனிதர்கள் தனித்தனி ஆட்களாகச் சுருங்கி கொண்டு போகும் காலத்தில் குமாரதேவன் சேர்ந்து பயணிக்க அழைக்கும் குரலாயிருப்பார். மனிதர்கள் கருத்துக்களால் துருவங்களாகும் போது உரையாடலாம் என்று நம்பிக்கையளிப்பார். அறிவையும் வாழ்வின் சமூக அடைவுகளையும் பணத்தின் மூலம் அளவிடும் ஒரு சமூகத்தில் அதற்கு மாற்றான வேறொரு வாழ்விருக்கிறது, அதற்கு மேலான கொண்டாட்டங்கள் மிச்சமிருக்கிறதென்பதன் அடையாளமாக அவர் இருப்பார். மனித சமூகம் இன்றளவும் வந்து சேர்ந்திருக்கும் எல்லா நன்மைகளின் வழியிலும் குமாரதேவன் போன்றவர்களின் பங்களிப்பும் பயணமும் இணைந்தே இருக்கிறது. அவர் ஒரு விடுபட்ட உயிரினம். தன் வாழ்வைத் தானே தீர்மானிக்கும் ஒரு நம்பிக்கை. நம் சமூகங்களிற்கு அவர் அளித்திருக்கும் பங்களிப்பை நம் வாழ்வாக ஆக்கிக் கொள்வதும், தொடர்ந்து வாசிப்பதும் செயற்படுதலும் தான் நாம் குமாரதேவனுக்குச் செய்யும் சிறந்த அஞ்சலியாகவிருக்கும்.

---

# அஞ்சலி

-கருணாகரன்

இடையறாத வாசிப்பு, அது பற்றிய உரையாடல், பயணம், அபிப்பிராயங்களை வெளிப்படையாகப் பகிர்தல், சிநேகம், தொடர்பாடல், இளைய தலைமுறையுடனான நட்பு, எந்தக் கூட்டத்திலும் தன்னுடைய கருத்துகளை முன்வைக்கும் திராணி என நம் காலத்தில் வாழ்ந்து செயற்பட்ட நல்லதொரு மனிதர் குமாரதேவன்.

குமாரதேவனைப்பற்றிய சித்திரத்தை மஹாகவியின் வார்த்தைகளில் சொன்னால், "ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம்" என்பதாகவே இருக்கும்.

அவருக்கு ஏராளம் நண்பர்கள், ரசிகர்கள், அன்பர்கள். சிறிய காலமாயினும் ஒரு நட்சத்திரமாக ஒளிர்ந்தவர்.

புத்தகங்களைப் பற்றி, தான் வாசித்ததைப்பற்றி வாரத்தில் இரண்டு மூன்று நாட்களாவது தொலைபேசியில் கதைப்பார். யாராவது எழுத்தாளர்கள் நோய் வாய்ப்பட்டிருந்தால், அல்லது எவரையாவது இழந்திருந்தால் அந்தச் செய்திகளை முதலில் கூப்பிட்டுச் சொல்வது குமாரதேவனாகவே இருக்கும்.

நம்பவே கடினமாக இருக்கிறது.

# வாசிக்கிறவர்கள் தனித்தே இருக்கிறார்கள்

- பாலசுப்பிரமணியம் காண்டீபராஜ்

'அவரோட பழகியிருக்கிறன்' எண்டுறதை சொல்லுறதுக்கான சந்தர்ப்பம்தான் இந்த பகிர்வு. வேறையொண்டுமில்ல் யாருக்கும் தெரியாத அவருடைய இயல்பெண்டு நான் எதைச்சொல்ல இருக்கு, அவர் எல்லோருக்கும் அணுக்கமான நேர்மையான ஆளாதான் இருந்திருக்கிறார். எனக்கு குமாரதேவன் ஆரெண்டு கேட்டால் ஒரு நல்ல " ஃபிரண்ட்பெடியன்" அதுவும் வாசிக்கிற தரப்பில இருக்கக்கூடிய ஒரு 'போறடிக்காத ஃபிரண்ட்'! அவர் அவ்வளவு வெளியைதரக்கூடிய, கதைக்கக்கூடிய மனிசன். ஒரு தயக்கமும் இல்லாமல் முதலாவது "மீற்றிங்கிலயே 'கொழும்பு ரெஸ்டோரன்டுல' செட்டாகக்கூடிய 'மச்சான்தான்' அவர். நானும், கிரியும், குமாரதேவனும் இலக்கியம் பேசிய முதல் இடம் கொழும்பு ரெஸ்டோரன்தான், அவர் குடிச்சா எப்பிடி இருப்பார் எண்டு பாக்கோணும் எண்டு சொல்லி இருக்கிறன், அதைப்பற்றி அவரோடையும் கதைச்சிருக்கிறன் எண்டு நினைக்கிறன். ஆனால் என்ன குடிக்கிறதை நிப்பாட்டியிருந்தார், ஆனா குடிக்கிற இடத்தில இருந்து வளைச்சு கதைச்சுக்கொண்டிருப்பார் அவ்வளவு ஆத்தலை குடுக்கக்கூடிய ஆள். அவர் அப்பிடித்தான் எல்லோரோடையும் இருந்தார். "என்ன கவனிக்கிறியள் இல்லை" எண்டுற உரிமையோடு வதைக்கக்கூடிய நட்புத்தான் அவ்வளவும் போதும்தானே.

அதைவிடுவம்!

தனிய இருக்கிறதும் ,தொடர்ச்சியா வாசிக்கிறதும், அவற்றை நினைவில் வைத்திருத்தலும் இதுவரை காலமும் தனித்திருக்கிற நான் செய்ய முடியாமல் தடுமாறுகிற விசயங்கள். அவை எவ்வளவு கடினமானவை என்பதை அனுபவத்தில் உணர்ந்திருக்கிறேன். விருப்பமான விசயமொன்றை தொடர்ச்சியாகச் செய்வதற்கு அது குறித்த அக்கறையும், அதை மற்றவர்களோடு பகிர்வதும், தன்னால் முடிந்தவரை அடுத்தவர்களுக்கும் அதை கொண்டு செல்வதும், தன்னுடைய அனுபவத்தை நேர்மையாக பொதுவில் வைப்பதுமே அந்தவிசயத்துக்கு நாம் எவ்வளவு உண்மையாக இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்துபவை. அங்கதான் நிக்கிறார் குமாரதேவன்!

அவருடைய அறையை நகுலன், கோபி கிருஸ்ணன் போன்றவர்களது வசிப்பிடங்கள்

போன்றதொரு படிமத்தில்தான் உருவம் செய்து வைத்திருக்கிறேன் அதுவொரு எளிமையான தனித்த விலங்கொன்றின் வாழ்விடத்தைப்போல இருக்கக்கூடும். 'அது அப்படியிருக்கிறது' இது இப்படியிருக்கி



றது' என்றெல்லாம் கவலைப்படுவதற்கு அங்கே யாரும் இருப்பதில்லை, அவரும் அதைக்குறித்து குறைப்பட்டுக்கொண்ட-தில்லை. ஆக! உனக்கு விருப்பமானதை நீ வாழலாம், அதில் யாருக்கும் ஒரு பிரச்சனையும் இருக்கப்போவதில்லை! அதிலும் வாசிப்பதும் உரையாடுவதும் உங்களுக்கு விருப்பமானவை எனில், நீங்கள் வாழ்கிற இந்த உலகத்துக்கு உங்க-ளால் எதையாது கொடுத்துவிட்டு போகலாம் எனில், நீங்கள் அதனைச்செய்வதற்கு ஒரு போதும் தயங்காதீர்கள்! காலம் தாமதமா-னாலும் உண்மையும் உழைப்பும் ஒருபோதும் வீணாகிவிடுவதில்லை. குமாரதேவனைப்போல நம்மிடையேகூட இருக்கிற மனிதர்களைக்கண்டு கொள்வோம் அவர்களது அனுபவங்களை நாம் ஆவணங்களாக மாற்றுவோம்

இந்தக்குறிப்பு வரப்போகும் இந்த பிர-சுரத்தினூடாக வாசிக்கிற தரப்பிலிருக்கும், இந்த உலகத்தைக்குறித்த குறைந்தபட்ச கருணையோடிருக்கும் எல்லோருக்குமான ஒரு தொடக்கமாகவும் ஆவணமாகவும் நாம் குமாரதேவனை நிறுத்துவோம்.

சந்திக்கலாம் குமாரதேவன், நீங்கள் எப்போதும் எங்களோடே இருப்பீர்கள்!

# ஆழ்ந்த இரங்கல்கள் குமாரதேவன் தோழர்!

- சிராஜ் மசூர்

தேர்தல் நாள் எழுந்து முகநூலைத் திறந்தபோது, நீங்கள் மறைந்து விட்ட செய்தியால் நெஞ்சு கனத்து விட்டது.

யாழ்ப்பாணம் திருமறைக் கலா மன்றத் தின் கலைத்தூது கலையரங்கில் நான் வடக்கு முஸ்லிம்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். பேசிமுடிந்து விட்டு இறங்கி வருகிறேன். சாறன் சேட் அணிந்து கையில் ஒரு பையுடன் நிற்கிறீர்கள். அப்போது நீங்கள் யாரென்று தெரியாது. அதுதான் முதல் சந்திப்பு.

என் கையைப் பிடித்து அழுகிறீர்கள். வடக்கு முஸ்லிம்களை பலவந்தமாக வேளியேற்றியது பொறுக்காமல் அழுதவாறே என்னிடம் மன்னிப்புக் கேட் கிறீர்கள். ஒரு கணம் நான் அதிர்ந்து போனேன். அப்போது உங்கள் பெயர் தெரிந்திருக்கவில்லை. இந்த சம்பவத்தை முகநூலிலும் பதிவு செய்தேன்.

பின்னர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி வந்தால் அநேகமாக எல்லாக் கூட்டங்களிலும் உங்களை சந்தித்துப் பேசுவதுண்டு. எனது பேச்சினை ரசித்துக் கேட்பதாய் எப்போதும் சொல்வீர்கள். எனக்குத் தெரிந்து எத்தனையோ நல்ல எழுத்தாளர்களைப் பாராட்டி ஊக்குவித்திருக்கிறீர்கள். இது நம்மவர்கள் மத்தியில் குறைவாக உள்ள ஒரு பண்பு. அதேநேரம், குறையை சுட்டிக் காட்டும் தெளிவும் துணிவும் உங்களுக்கு இருந்தது.

நல்லதோ கெட்டதோ எதையும் துணிந்து பேசும் வெள்ளை மனசுக்காரர் நீங்கள். எப்போதும் இளம் தலைமுறையினருடன் நெருக்கமாக இருந்தவர் நீங்கள்.

பல விடயங்களை ஆழப் புரிந்து கொண்டிருந்தீர்கள். அதை அடிக்கடி பகிரவும் செய்தீர்கள். நான் கண்ட தீவிர வாசகர்களுள் பலர் எழுத்தாளர்கள். எழுத்தாளன் அல்லாத ஒரு தீவிர வாசகனாக கண்டவர்களுள் ஒருவர் நீங்கள்.

ஒரு சாதாரண மனிதனின் எளிமையான தோற்றத்திற்குள் இவ்வளவு படிமங்களையும் பொதிய வைத்திருந்தீர்கள்.

யாழ்ப்பாணம் காரைநகரை பிறப்பிடமாகக் கொண்ட ஒரு பிரமச்சாரிக்கு, தென்கிழக்கின் அக்கரைப்பற்றிலிருந்து. ஆழ்ந்த இரங்கல்கள்.

அற்புதமான மனிதர் நீங்கள். இனி உங்களை சந்தித்துப் பேச முடியாது. கடைசியாக நடந்த கிளிநொச்சி இலக்கியச் சந்திப்பின்போது பேசிய நினைவுகள் நெஞ்சை அரிக்கின்றன.

# அஞ்சலி

-குப்பிழான் சண்முகன்

ஐந்தாறு வருடங்களுக்கு முன்னர் யாழ் கலை இலக்கிய வெளியில் 'குமாரதேவன்' என்ற பெயரை, புதிதாகக் கேள்விப்பட்டேன். அவர் யாரென இன்னோர் நண்பரிடம் விசாரித்தேன். 'உமக்குத் தெரியாதா? 'இயக்கத்தில்' முக்கிய ஒரு புள்ளியாக இருந்து வந்தவரென நண்பர் சொன்னார். அப்படியொருவரை நான் கேள்விப்பட்டிருக்கவில்லை. இரண்டொரு மாதத்தின் பின்னர், கலைத்தூது மண்டபத்தில் நடந்த நிகழ்வொன்றில் குமாரதேவன் எனக்கு அறிமுகமானார். நண்பர் எனக்கு கதைவிட்டிருக்கிறாரென அப்போது தான் அறிந்தேன்.

முதல் அறிமுகத்தின்பின் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த கலை - இலக்கிய நிகழ்வுகளில் சந்தித்துக் கொள்வோம். அபிப்பிராயங்களைப் பகிர்ந்து கொள்வோம். வாசிப்பதற்கான நூல்களைப் பரிமாறிக் கொள்வோம். அவரது இயங்குதளமான சண்முகம் கடையிலும் சந்திப்பதுண்டு.

பழகுவதற்கு இனிமையானவர் அன்பானவர் எளிமையானவர் எல்லாரையும் அனுசரித்துச் செல்லும் பண்பு வாய்ந்தவர். ஆனால் தனது கருத்துக்களை ஆணித்தரமாக வலியுறுத்துபவர். ஒரு 'தகவல் களஞ்சியமாக' இயங்கியவர்.

திடீரென யாழ் கலை - இலக்கிய வானில் தோன்றியது போலவேறு எதிர்பாராதவ-ிதமாக திடீரென எம்மை விட்டு பிரிந்து சென்று விட்டார்.

தனிப்பட்டமுறையில் அவரது இழப்பு எனக்கு பேரிழப்பாகும். கலை - இலக்கிய நிகழ்வுகளில் நான் பங்குபற்ற முடியாமல் தனிமைப்பட்ட சூழலில், யாழ் கலை இலக்கிய நிகழ்வுகளை பற்றி, சலசலப்புகள் - சண்டைகள் பற்றியெல்லாம் எனக்கு அறியத் தந்தவர். எனது, அவரது சுகநலங்கள் பற்றி தொலைபேசியில் பரஸ்பரம் நலம் விசாரிப்போம். எனது தேகாரோக்கியம் குறித்து அறிவுரைகள் ஆலோசனைகள் வழங்குவார். மொழி, கலை இலக்கியம் தொடர்பான தனது சந்தேகங்களைச் சொல்லி தெளிவுபெற முயல்வார்.

அவரது இறுதி அஞ்சலி நிகழ்வில் பங்குபற்ற என்னால் முடியவில்லை. அவரது குடும்பத்தவரோடும் உற்றார் உறவினர் நண்பர்களோடும் நானும் துயர் பகிர்கிறேன்.

அவருக்கு எனது ஆத்மார்த்த அஞ்சலிகளை செலுத்துவதோடு, ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றேன்.

> "இயற்கை மற்றும் சமூகச்சூழமைப்பில் மனிதர்கள் இயங்கும் முறையும் அவர்களின் நடத்தை முறையும்தான் உளவியலின் அடிப்படைகள்."
>
> -மிக்காயிறுல் பக்தின்



# உங்களிடம் குமாரதேவனுடன் எடுத்துக் கொண்ட செல்பி ஒன்றேனுமுள்ளதா?

- யதார்த்தன்

அன்பை ஒரு செயல்வடிவமாக, செயலூாக்கத்துடன் இணைத்து நிகழத்தக்க கலையாக அணுகுவதையே விரும்புகிறேன். ஒவ்வொருத்தரின் இருப்பையும் அவர்களுக்கும் சமூகத்திற்கும் இடையில் இருக்கின்ற கொடுத்து வாங்குகின்ற பண்பையும் அவர் வாழ்ந்த சூழலில் அவர்தம் செயல்களை வைத்துப் பிரக்ஞை பூர்வமாக புரிந்துகொள்வதே பொருத்தமானது. குமாரதேவன் பற்றிய ஞாபகங்களையும் அவருடைய பங்களிப்பையும் அவ்வாறு அணுகுதலே அவர் மீதிருக்கும் அன்பின் ஆகக்கூடிய செயலாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

அவருடைய மரணச்சடங்கலிருந்து திரும்பிய பிறகு நண்பர்கள் கூடியிருந்தோம். ஒவ்வொருத்தராக அவரைப்பற்றிப் பகிர்ந்துகொள்ளும் போது உள்ளூார உணர்வுவசப்பட்டிருந்தேன். அவருடனான பழக்கங்களில் அவரின் சிறு

சிறு விருப்பங்களையும் மகிழ்வையும் நான் அவதானித்த வகையில் நண்பர்களுடன் பகிர்ந்துகொண்டேன். இந்த நினைவுக் குறிப்பின் ஊடாகச் சென்று சேரக்கூடிய இடங்களுக்கு அவர் பற்றிய உணர்வுப்பாங் கான என்னுடைய சிறு அவதானிப்புக்களை தொகுத்திருக்கிறேன்.

எங்களுடைய காலத்தில் அவருடைய வயதுக்காரர்கள் அல்லது அவரது தலை முறையிலிருந்த மனிதர்களில் இளைஞர்களுடன் இத்தனை நெருக்கமாகவும் அவர்தம் மற்றமைகளையும் நியாயங்களையும் முற்கற்பிதமும் கொள்ளாமல், மாற்றுக்கருத்துக்களை தனிப்பட முரண்களாகக் கருதாமல், எல்லாச்சூழலில் இருந்தும் உரையாடத்தக்க, வயதை ஒரு பொருட்டாக எடுக்காத மனிதர் அவர். சொல்லப்போனால் யாழ்ப்பாணத்தின் சகல தரப்பையும் சமரசமற்று விமர்சன பூர்வமாக அணுகக்கூடியவராயும் தன்னுடைய கருத்தியலை நியாயங்களுடன் முன் வைக்கக்கூடியவராயும் அனைவரையும் இணைக்கக்கூடியவராயும் செயலூக்கத்துடனும் அன்புடனும் இருந்த சீவன் அவர்.

"அதென்ன குமாரதேவன் ஐய்யா எண்டுறியள் குமாரதேவன் எண்டு கூப்பிடுங்கோ" என்பார். நானும் சில நண்பர்களும் முடிந்தவரை அவரைக் குமாரதேவன் என்றே அழைத்தோம். இந்தக்கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் போது அவருடைய தமக்கையாரின் வீட்டிற்குச்சென்று அவரை ஆவணப்படுத்துவதற்காக அவர் பற்றிய ஆவணங்கள், போட்டோக்களைப் பெற்றுக் கொள்ளச்சென்றிருந்தோம். குமாரதேவன் அவருடைய சிறுபிராயத்தில் கொழும்பு வில் இருந்த நாட்களில் எடுத்துக்கொண்ட படமொன்றிருந்தது. சிறுவன் குமாரதேவன் ஒரு சிறு அரைக்காற்சட்டையும் நன்கு அயன் செய்த அரைக்கைச் சேட்டும் டையும் கட்டி ஸ்டூடியோ ஒன்றில் எடுத்துக்கொண்ட புகைப்படம். புகைப்படத்தின் பின்னால் **25.8.1971** என்று இடது மேல் மூலையில் பேனாவாலும், LAKSHMI FOTO,53 KOTMALE ROAD, NAWALAPITIYA என்று குறித்த ஸ்டூடியோவின் பெயர் சீலும் செய்யப்பட்டிருந்தன.

நான் பழைய போட்டோக்களில் பெரும்பாலானோர் கமராவைப் பார்த்து விறைத்துப்போய் நிற்பதைப்பார்த்துச் சிரித்திருக்கிறேன். காரணகாரிய அடிப்படையில் புரிந்துகொள்வதென்றால் கமரா தரும் அதூசையும் புது உணர்வும்காலனியம் எடுத்துவந்த புகைப்படத்திற்கு இப்படித்தான் உடலை நிகழ்த்த வேண்டும் என்ற கற்பிதங்களும் பழைய கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களின் உடல்மொழிகளில் வெளிப்படுவதுண்டு. ஆனால் சிறுவன் குமாரதேவன் தன்னுடைய உடலின் மொழியை நிகழ்த்தியிருக்கும் விதத்தை நீங்கள் பார்க்க வேண்டும். பார்வையை வேறொங்கோ நிறுத்தி ஒரு கையை பொக்கற்றினுள் வைத்துக்கொண்டு ஒரு "தோரணை".

இங்கே இதைக்குறிப்பிட்டதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு, குமார தேவன் போட்டோக்களை எடுத்துக் கொள்வதில் பிரியமுள்ளவர். அவருக்கு எந்த சமூக ஊடகங்களையும் பயன்படுத் தத்தெரியாது. அவர் எழுதியதும், அவரின் படங்கள் அதிகமாகப் பிரசுரமானதும் பத்திரிக்கைகளில் தான். ஆனால் அவர் தன்னுடைய போட்டோக்களை நாங்கள் யாரும் பதிவேற்றினால் யாரிடமாவது கேள்விப்படுவார். சண்முகம் கடைக்கு வரும் அவருடைய நண்பர்கள் யாரும் காட்டினால் எங்களுக்கு உடனே அழைப்பு வரும் அல்லது நேரில் கண்டவுடன்,

"என்ன படமெல்லாம் போட்டிருக்கி-

றியளாம் சொல்லவும் இல்லை காட்டவும் இல்லை " என்பார் மகிழ்ச்சியாக. நான் பகிடியாக

"யாழ்ப்பாணத்தின்ர மோஸ்ட் வொண்டட் செலிபரட்டி நீங்கள், மக்கள் போட்டோ போடத்தானேசெய்விணம்"என்பேன் சிரிப்பார். ஏதேனும் நிகழ்வுகளின் முடிவில், நிகழ்வுக்கு வெளியே அன்றைய நாளைப் பத்தியப்படுத்துதற்காக நடக்கும் உரையாடல்களின் போது, கூப்பிடுவார். அவர் முன்பு வாசித்த அவர் நேசித்த எழுத்தாளர், அரசியல்வாதிகள், பத்திரிக்கையாளர்கள் என்று பல்வேறு வயதுகளில் இருப்பவர்களுடனும் அவர் போட்டோக்களை எடுத்துக்கொள்ள விரும்புவார். எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் ஏதோ ஒரு பத்திரிகையில் ஒரு நல்ல கதையை எழுதிவிட்டு அங்கீகாரமோ சன்மானமோ இன்றிச் சலித்துப் போய் நாட்களை நகர்த்திக்கொண்டிருக்கும் ஒருவரை குமாரதேவன் "இத்தினியாம் ஆண்டு இந்த திகதிலை இந்தக்கதை இந்தப்பேப்பர்ல வந்தது" தானே என்று அந்த நபரே வாயடைத்துப் போகும் அளவிற்கு ஆச்சரியமும் நெகிழ்ச்சியும் ஏற்படுத்திக்கொண்டே யதார்த்தனையோ கிரிசாந்தையோ தனுசையோ கூப்பிட்டு போட்டோ ஒண்டு எடுங்கோ என்பார். இந்த சமூகம் விளிம்புக்குத் தள்ளிவிட்டு வாழ்வு மீது சலிப்பேறியபடியே இலக்கியக்கூட்டத்திற்கு வந்து சென்றுகொண்டிருக்கும் எழுத்தாளரை ஒரு முதிர்ந்த வாசகராக உறைந்து போன அவருடைய காலத்திலிருந்து மீட்டுக்கொண்டு வந்து சமகாலத்தில் நிறுத்தி உரையாடுவதன் மகத்தான கணத்தை சிறுவன் குமாரதேவன் தன்னுடைய கடைசிக்காலம் வரை புகைப்படங்களில் நிகழ்த்தினான். என்னுடைய நண்பர்களைப் பார்த்து குமாரதேவன் பற்றிய உரையாடலில் "நீங்கள் செல்பி எடுத்துக்கொள்ள விரும்பக்கூடிய ஒரு மூத்த தலைமுறையாள் யார் யார் ?" என்று கேட்டேன். எங்களில் பெரும்பாலான நண்பர்களின் செல்பிக்களில் குமாரதேவன் இருப்பார். அவருக்கு அது மிகவும் பிடிக்கும். "இப்ப எல்லாப்பெடியளும் உப்பிடித்தான்" என்று சலித்துக்கொள்ளும் மூத்த தலைமுறையும் "பெரிசுகள் புறணிவிடும்" என்று விலகிச்செல்லும் இளைய தலைமுறையும் கொண்டிருந்த தூரத்தைக் குமாரதேவன் மிக இலகுவாகக் கடந்தார்.

இறுதியாக அவர் என்னை ஆச்சரியப்படுத்திய நிகழ்வொன்று, சிறகுகள் அமையம் என்ற அமைப்பில் இயங்கும் பிறேமிஷா என்னுடைய நெருக்கமான நண்பர்கள் வட்டத்தில் இருப்பவள். ஆயினும் இலக்கியம் சார்ந்தோ எங்களுடைய செயற்பாட்டு வடிவங்கள் சார்ந்தோ நெருக்கமில்லாத நண்பி. குமாரதேவன் இறந்த அன்று தகவலைப் போஸ்ட் செய்துவிட்டு இருந்த போது அழைத்தாள். நான் எடுத்து விபரம் கேட்க, "நீ ஓகேதானே ?" என்றாள். எனக்கு சட்டென்று அவளையும் குமாரதேவனின் மரணத்தையும் தொடர்புபடுத்த முடியவில்லை. "ஏன் என்ன உடம்புக்கு ஒண்டுமில்ல, நண்பர் ஒருத்தர் இறந்திட்டார் போகோணும் " என்றேன் அவள் "ஓம் அதுதான் கேட்டனான், எனக்குக் கஸ்ரமா இருக்கு" என்றாள். "அவரை உனக்கென்னெண்டு தெரியும்?" இலகியச்சந்திப்பு ஏதோ செய்தனியள்தானே? அண்டைக்கு முதல்நாள் நீங்கள் வரல்லை அமைப்பால புத்தகம்கலக்பண்ணப் போனான், எங்கடை வேலையள பற்றியும் புத்தகம்அன்பளிப்புச்செய்யுங்கோ எண்டும்

நிகழ்விலை கதைச்சனான். நிகழ்வு முடிய என்னைத்தேடிவந்து கதைச்ச விசயங்கள் நல்லா இருந்தது எண்டு விசாரிச்சவர். நிறைய விசயங்கள் சொன்னவர். அந்நிய உணர்வு கொஞ்சமும் வராமல் கதைச்சவர்" என்றாள். அவளுக்கு குரல் தழுதழுத்தது. எனக்கு தலை விறைத்தே போனது.

"நண்பர்களே உங்களிடம் குமாரதேவ-னுடன் எடுத்த செல்பி உள்ளதா?"

குமாரதேவனின் உடல் நிலை அவரு-டைய ஐம்பதுகளின் பிற்பகுதியில் இத்-தனை மோசமடைய இடையில் அவர் குடித்தது ஒரு காரணம் என்று அவரும் சரி குடும்பத்தாரும் சரி அடிக்கடி சொல்வ-துண்டு. வாழ்க்கை, மானுடத்தெரிவு , சொந்தத் தத்துவங்கள் போன்ற பின்னணி-களை குமாரதேவன் குடித்ததால் அழிந்-தார் என்றும் இரண்டாவது நிலையில் அவரின்மேல் உள்ள அன்பும் அவருடைய இருத்தலின் பயன்பெறுமதியின் மேல் கொண்ட அக்கறையாலும் நானும் கவலை-லப்படுவதுண்டு. நண்பர்கள் மது அருந்-தும்போதும், சிகரெட் புகைக்கும்போதும் அருகில் இருப்பார். "சிகரட் ஒரு கெட்ட சாமான்" என்பார். ஆனால் நீ குடிக்காதே புகைக்காதே என்ற தொனியிருக்காது. அவருக்கு அவற்றைப்பற்றியதான புரி-தல்கள் இருந்தன. அவர் ஒரு கலாசாரக் குடிகாரராக இருந்தவர். மிக நுட்பமான சில விசயங்களை நகைச்சுவைகளை நிறையப்பகிர்ந்துகொள்ளக் கூடியவர். "கள்ளுக்கு கதை புருசன்" என்ற சொலவ-டையை அடிக்கடி அவர் சொல்லித்தான் கேட்டிருக்கிறேன்.

குமாரதேவனுக்குச் சுவையான உண-வுகள், குறிப்பாக புதிய சிற்றுண்டிகள் பிடிக்கும். நாற்பது வருடங்களுக்கு மேலே சண்முகம் கடையில் வேலை செய்தவர். மிகப்பழைய உணவகங்களில் ஒன்று. உபசரிப்பிற்குப் பெயர்பெற்றதாக



இருப்பதோடு குறைந்தவிலையில் தரமான உணவை இன்றுவரையும் தரும் உணவகம். கண்முன்னே கொதிக்கும் சுத்தமான பாலில் போட்டுத்தரும் தேனீர் அற்புதமாகவி ருக்குமங்கே. குமாரதேவன் அந்தக்கடை யில் பலவருடங்களாக வேலை செய்தார். சண்முகம் கடை முதலாளி குமாரதேவன் பற்றிச் சொல்லும் போது, நானும் மாடும் குமாரும் ஒண்டாச் சாகோணும் எண்டு இருந்தனான். மாடும் செத்திட்டு குமாரும்

போட்டான் நான் மட்டும்தான் இருக்கிறன் என்றார் என்று அவரின் ஊழியர்கள் சொல்லிக்கொண்டிருக்கக் கேட்டேன். சண்முகம் கடைக்கு, தமிழிலக்கியத்தில் மட்டுமில்லை, யாழ்ப்பாணத்தின் உணவுப்பண்பாட்டிலும் ஒரு ஆற்றுகைப்பங்கு இருக்கும் என்றால் குமாரதேவனுக்கும் இருக்கத்தான் போகிறது. கடைசிக்காலத்தில், அதன் பக்கத்தில் இருந்த ஸ்ரோலில்தான் குமாரதேவன் வாழ்ந்தார்.

இலக்கியக்கூட்டங்களிலோ, உரையாடல்களிலோ சில இடங்களில் மேலைத்தேசப்பாணியிலான தமக்குத் தாமே உணவு, சிற்றுண்டி பரிமாறிக் கொள்ளும் முறை இருக்கும். தேனீரையும் நாமே ஆக்கிக்கொள்ள வேண்டும். குமாரதேவன் அவ்விடங்களில் கொஞ்சம் அசூசைப்படுவார், வயதும் நோயும் அவருடைய கைகளை வேறு நடுங்க வைத்திருந்தன. எனவே அப்படியான சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் அவருக்குத் தேனீர் போட்டுக்கொடுத்துவிட்டுத்தான் நாங்கள் தேனீருக்கோ சிற்றுண்டிக்கோ போக வேண்டும் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்வோம். நாற்பதுவருடம் ஒரு பிரபல தேனீர்க்கடையில் இருந்த குமாருக்கு தேனீர் போட்டுக்கொடுத்திருக்கிறோம் என்ற அலாதியை மரணச்சடங்கு முடிந்து வந்து அவரைப்பற்றி ஒவ்வொருதராகப் பகிர்ந்துகொள்ளும்போதுதான் என்னையறியாமல் தன்னுணர்வில் வந்த சொற்களில் இருந்து கண்டுகொண்டேன்.

அவர் பயணங்களை அதிகம் விரும்பினார் நோயும், கால் நோவும் வீக்கமும் இருந்த போதும், மட்டக்களப்பு, மலையகம் என்று நாட்டின் பல்வேறு பாகங்களில் நடந்த இலக்கிய நிகழ்வுகளுக்கு பயணப்பட்டு வந்திருக்கிறார். தன்னுடைய வாசிப்பில் நின்று ஒவ்வொரு பயணத்திலும் தன் கருத்தையும் விமர்சனத்தையும் தட்டிக் கொடுப்பையும் சொல்லிவந்திருக்கிறார். மலையக நண்பர்கள், முஸ்லீம் நண்பர்கள், சிங்கள நண்பர்கள் அவருக்கு நாடுமுழுவதும் இருப்பதற்கு அவருடைய பயணங்களில் அவர் நிகழ்த்திய உரையாடல்கள் தான் முதன்மையான காரணம். இலக்கியம், சினிமா அரசியல் என்று பல துறைகளிலும் செயற்படுபவர்கள் அவரை அறிந்திருந்தனர், உரையாடியிருக்கின்றனர். இலக்கிய விழாக்கள், சினிமா திருவிழாக்கள், மரபுரிமை நடை, பசுமை நிகழ்வுகள் என்று பல்வேறு செயற்பாட்டியக்கங்களுடன் சேர்ந்து பயணித்திருக்கிறார்.

நோய் நிலைமை முற்றிய நாட்களில் கொஞ்சம் மாறாட்டமும் மறதியும் இருந்தாலும் அவருடைய கூரான ஞாபகமும் அதை மீட்டு தற்காலத்துடன் தொடர்புபட்டதாக வாதிக்கக்கூடிய புரிதலும் கொண்டிருந்தார். அவருடைய தலைமுறையின் பெரும்பாலான இலக்கியக்காரர்களும் செயற்பாட்டாளர்களும் , வாசகர்களும் சிக்கிக்கொண்ட 'காலத்திற்குள் உறைந்து போதல்' என்பதை குமாரதேவன் தன்னுடைய வாசிப்பாலும் புரிதலாலும் கடந்து வந்தார். தொண்ணூறுகளைத் தொண்ணூறுகளில் சென்றும், எண்பதுகளை எண்பதின் கருத்தியல்களோடு நின்றும் வாதிடாமல் நாட்களில் வளர்ச்சியையும் வரலாற்றையும், பண்பாட்டின் நெகிழ்வையும் பின்புலங்களையும் அவர் நுட்பமாகப் புரிந்துகொண்டிருந்தார். அவரின் வார்த்தையில் "எந்த இசங்களுக்கும் சிக்கவில்லை" என்பதை அவர் குறித்த கருத்தியல்

சட்டகங்களினுள்ளும் காலத்தினுள்ளும் சிக்கவில்லை, தன்னை விழிப்புணர்வு கொண்ட ஒரு மனிதராகவே கண்காணித்து வந்துள்ளார் என்றே விளங்கிக்கொள்ளலாம். மாறாக அவருக்கு இசங்கள் மீது வெறுப்போ புரிதலின்மையோ இல்லை என்று கருதவில்லை. கடுமைப் படுத்தப்பட்ட மொழியில் எப்போதும் அந்நியத்தை உணர்வது போல அவற்றின் சொல்லாடல்களில் அந்நியப்பட்டிருந்தாலும் எல்லாவற்றினதும் அடிப்படையான சாரம் சிந்திப்பதிலும் வாழ்வைப் புரிந்துகொள்ளுதலிலும் இருந்ததை அவர் அறிந்திருந்தார்.

குடும்பத்தினர் இன்றுவரை வருந்துவது அவர் தனக்கென்று ஒரு வாழ்வை அமைத்துக்கொள்ளவில்லை, குடும்பத்தை, ஒரு வீட்டை அவர் தனக்கெனக் கொண்டிருக்கவில்லை என்பது. அந்தக் கவலை அவருக்கு நெருக்கமான பலருக்கும் இருந்தது. ஆனால் என்னைப் பொறுத்து அவர் தன் வாழ்வை முன்னிட்டு முடிவெடுக்கும் சுதந்திரத்தைக் கொண்டிருந்தார் என்பதும் எல்லா மானுட பலவீனங்கள், கீழ்மைகளின் பின்னணியில் தன்னுடைய வாழ்வை அறிவுக்கும் தெரிவுக்கும் ஏற்படுத்திக்கொண்டார் என்று நினைத்துக்கொள்வேன். அவருக்கு நோய் நிலைமை முற்றிய நாட்களில் அவருக்கு என்று ஒரு அறையோ வீடோ எடுப்பதற்கு அவருடைய மருமகன் கௌதமன் கிரிசாந்துடன் கதைத்திருந்தார், குமாரதேவனும் சண்முகம் கடையில் கடைப்பொருட்களுக்கு மத்தியில் அட்டைப்பெட்டிகளில் தன்னுடைய புத்தகங்களையும் தன்னையும் வைத்துக்கொள்ள முடியாது தனக்கொரு இடம் பார்க்குமாறும் சொல்லியிருந்தார். "தூரம் போகாமல் கூட்டங்களுக்கு வந்து போகக்கூடிய மாதிரி டவுனச்சுத்தி பாருங்கோ" என்றார். வீடு பார்த்து முடிவதற்குள் எல்லாம் நடந்து முடிந்து விட்டன.

குமாரதேவன் எளிமையானவர், சொந்த பந்தங்கள் இருந்தும் தனக்கென காரை நகரில் வீடு இருந்தும் ஒரு கடையின் குடோனுக்குள் எளிமையாக வாழ்ந்தார் என்று அவரை "எளிமையானவர்" என்று மனோரதியப்படுத்து விட்டு கடந்து போக நான் விரும்பவில்லை. ஆடம்பரங்களிலோ தனக்குரிய வெளியில்லாத இடங்களில் வாழ்வதையோ அவர் விரும்பாவிட்டாலும். அவருடைய எளிமையில் இருந்தது துயரமும் கூடத்தான். அவர் ஒரு சில உடைகளையே வைத்திருந்தார். தளர்ந்த உடலால் தன்னைப்பாரமரிக்க முடியாமலும் இருந்தது. அதே நேரம் யாரிடமும் எதுவும் கேட்காத ஓர்மையையும் அவர் பிடித்துக்கொண்டே இருந்தார். மிகவும் நெருக்கமாகவிருந்த சசியண்ணரும் சரி கிரிசாந்தும் சரி அவருக்கு ஒரு சேட்டையோ வேட்டியையோ ஒரு தொலைபேசியையோ வில்லங்கப்படுத்தியே கொடுக்கவேண்டியிருந்தது. அவர் சில குணங்களை எங்களுக்காகத் தளர்த்திக் கொண்டார்.

இறுதி நாட்களில் அவருக்கு கிடைத்த அங்கீகாரமும் உரையாடக்கூடிய வெளியும் அவரின் இயலுமான காலத்தின் விளிம்பிலேயே அவரை நிறுத்திவிட்டது. ஏதோ ஒரு கட்டத்தில் தனிமையால் அலைக்கழிக்கப்பட்டிருக்கிறார். அவரைக் குலைத்துப்போட்ட குடி அவருக்கு வெறும் போதைக்கு மட்டும்தான் உதவியது எனலாமா? எங்களுக்கு அறிமுகமான

நான்கைந்து வருடங்களில் நடைபெறும் பெரும்பான்மையான அரசியல் கலை இலக்கிய ஒன்று கூடல்களில் இடைவிடாது பிரசன்னமாகியபடியிருந்தார். அரசியல் கலை இலக்கியச் செயலூக்கம் தன்னுடைய சலிப்பையும் தனிமையுணர்வையும் கடக்கவும் மகிழ்ந்திருக்கவும் உதவக்கூடியன என்ற புரிதலை அடைந்து அதை வாழ்கை முறையாக மாற்றிக்கொள்வதற்கு முன்னதான அவருடைய பல்லாண்டு வாழ்வு பற்றி நாம் ஒருவரும் அவ்வளவாக அறிந்திருக்கவில்லையல்லவா? அவர் தன்னுடனும் சமூகத்துடனும் ஆற்றிய இடைவினைகளின் வடிவம்தானே நாம் கண் கூடப்பயணப்பட்ட குமாரதேவன்.

சிறுவர்கள், புலியெதிர்ப்பாளர்கள், அதிகப்பிரசங்கிகள், பின்னநவீனத்துவம் பேசுபவர்கள், ஷோகாட்டுபவர்கள் என்று ஈழத்தின் அரசியல் கலை இலக்கிய சமூகங்களின் பெரும்பான்மைப் பொதுப்புத்தியால் விமர்சிக்கவும் வசைபாடவும் ஏளனப்படுத்தப்படும் போதும், கலை இலக்கியச்செயற்பாடுகளில் ஈடுபடவும் கருத்து, செயற்பாட்டு பலவீனங்களை சரிசெய்யவும் வளர்த்துக்கொள்ளவும் முயன்று கொண்டிருந்த ஒரு இளைஞர் தலைமுறையான எங்களுடன் இருந்தார், இவற்றையெல்லாம் சொன்னார் என்று வெறும் நினைவுகளால் மட்டும் கடந்து போகக்கூடியவராகக் குமாரதேவனை நான் பார்க்கவில்லை. அவர் எங்களுக்கு வெளியே நின்று கற்பிக்கும் அறிவுரைசொல்லும் புறம் பேசும் ஒருவராக இருக்கவில்லை. குமாரதேவன் எங்களில் ஒருவராக இருந்தார். எந்த அடையாளங்களையும் இசங்களையும் பூணாத குமாரதேவன் இறுதிநாட்களில் தன்னை எங்கேனும் அடையாளப்படுத்தும் போது "விதை குழுமம் எண்டு போடுங்கோ" "புதிய சொல் எண்டு போடுங்கோ" என்று அவராகவே சொல்லும் போது தனிப்பட்டு எங்களுக்குள் எழுந்த மகிழ்வையும் கொண்டாட்டத்தையும் நண்பர்களிடம் பகிர்ந்துகொண்டிருக்கிறோம்.

மூத்த எழுத்தாளார்கள் செயற்பாட்டாளர்களோடும் சரி இளைய எழுத்தாளர்களுடனும் சரி பிரதியை வாசித்துக் கொண்டு உரையாடும் போது அவருடைய உரையாடல்கள் கதைகளுக்குச் சொல்லும் கதைகள் என்று சுவாரஸ்யமாயிருக்கும். எங்களுடைய தலைமுறையில் எழுத வந்த கிரிசாந், யதார்த்தன்,ஆதிபார்த்தீபன், கபில், பிரிந்தன், அனோஜன் பாலகிருஷ்ணன், தர்முப்பிரசாத் போன்றவர்களின் பிரதிகளை விரும்பி வாசிக்கவும் அபிப்பிராயங்கள் கூறவும் செய்வார். "இப்போது வாசிப்பதை நிறுத்திக்கொண்டேன்" என்பதை கண்டடைதலைப் போலச் சொல்லும் அவருடைய தலைமுறைக் காரர்களில் பெரும்பான்மையோரால் இளையசமூகத்தை புரிந்துகொள்ளவும் சேர்ந்து வேலை செய்யவும் முடியாது போனதற்கும் குமாரதேவனால் அதைச் செய்ய முடிந்ததற்கும் இதுவும் ஒரு காரணம். எழுத்தாளராகப் பிரபலமாக அறியப்படுவதைவிட ஆத்மார்ந்து அவர் தன்னை "வாசகர்" என்று அழைப்பதைப் புரிந்துகொள்வதில் இருந்து நாம் வாழ்கையின் இன்னொரு துண்டை கண்டெடுத்துக்கொள்கிறோம் இல்லையா?

தன்னுடைய சொந்த நிலமான காரைநகர் தொடர்பில் இருந்த ஞாபகங்களை அவர் மிகவும் நேசித்தார். பிரதேசவாதமாகவன்றி தனக்குப் பரிச்சயமான நேசமான

நிலம் என்ற அக்கறை அவரிடமிருந்தது. அவருடைய பிறந்த வீட்டிற்குச்சென்றிருக்கி றோம். கோவளம் வெளிச்சவீட்டில் நின்றும் கடற்கரையில் இருந்த பெரிய வீட்டிலும் நின்றும் படங்கள் எடுத்தோம். வீட்டின் முன்புறம் பழைய வீட்டின் படிக்கட்டு ஒன்று மட்டும் விடப்பட்டிருந்தது. அங்கே அழைத்துச்சென்று அது விவேகானந்தர் மிதித்த இடம் என்று காட்டினார். நிறை யச்சுவாரஸ்யமான கதைகளை அங்கே வைத்துத்தான் சொன்னார். அவர் மிகுந்த சுவாரஸ்யமாயும் சிரித்துக்கொண்டும் சொன்ன கதைகளில் ஒன்று பனி வண்ண அழகி (snow white) எனப்பட்ட ஊரின் அழகான பெண்ணொருத்தியின் கதையை என்னுடைய நாவலில் "றோஸ்மேரி" என்ற பெண்ணின் பெயரில் எழுதியிருப்பதா-கச்சொல்லியிருந்தேன். சந்தோசப்பட்டார். அடிக்கடி நாவல் எப்ப வரும் நாவல் எப்ப வரும் என்று கேட்டுக்கொண்டேயிருப்-பார். அவருடைய கையினால் வெளியிட வேண்டும் என்றேயிருந்தோம்.

சிலநேரங்களில் அவருடைய அழைப்புக் களை எடுக்காமல் இருந்திருக்கிறேன். சில இடங்களுக்கு அவருடன் வருகிறேன் என்று விட்டு போகாமல் விட்டிருக்கிறேன். சில நேரம் நியாயமான காரணமிருக்கும் சில நேரம் என்னுடைய சோம்பேறித்தனமும் மறதியும்காரணாமகவிருக்கும் எனினும்எங்க-ளுடைய எல்லா மற்றமைகளையும்கீழ்மை-களையும்தாண்டி அன்பு கொண்டிருந்தார், இணைந்து செயற்பாட்டார், கருத்துக்களைப் பரிமாறினார். ஒரு பெரிய வாசகனின் வாழ்க்கைச்சருக்கங்களுக்கு வெவ்வேறு வழிகள் இருக்கும். வெவ்வேறு கதைகள் இருக்கும். அவருடன் பழகிய ஒவ்வொருத்-தரின் ஞாபகங்களும் புரிந்துணர்வும் பகிர்ந்-துகொள்ளப்படும் நினைவும் அவருடைய எழுத்துகளும் பேச்சுகளும், அவரைப்பற்றிய ஆவணப்படுத்தல்களும் தலைமுறைகளுக் குக் கடத்திச்செல்லப்படும். சமூக உற-வுநிலைகளின் மூலம் மனம் உருவாகின்றது, பிரக்ஞையும் தன்னுணர்வும் கருத்துரு வாக்கம் செய்கின்றன. கருத்துகள் சமூகத்தை வழிநடத்துகின்றன. வரலாற்றையும் காலத்தையும் அசைக்கின்றன. ஓடுகின்ற வாழ்வுப்பெருநதியில் சொந்தக்கருத் தோடும் கண்டடைதல்களோடும் இருந்த மானுடர்கள் அவர்களின் செயலாலும் சிந்தனையாலும் கலைஞர்களாகவும் சிந்த னையாளர்களாகவும் நினைவுகொள்ளப் படுவார்கள். ஆனால் தமிழிலக்கியத்தில் கலையுணர்வும் சிந்தனையும் கொண்டிருந்த ஒருவர் தன்னை "வாசகர்" என்றே அழைத் துக்கொள்ள விரும்பினார்.

# அஞ்சலி

- தமயந்தி



சமூக, இலக்கியச் செயற்பாட்டாளர் குமாரசாமி குமாரதேவன் ஐயா மரணித்-துப்போனார் என்ற செய்தியை நண்பன் அருண்மொழிவர்மனின் பக்கத்தில் கண்ட-தும் ஒருகணம் அதிர்ந்துதான் போனேன்.

நூல் வெளியீடுகள், இலக்கிய விமர்சனக் கூட்டங்கள், சமூகப் போராட்டங்கள் என மிகப் பிரதானமான சமூக செயற்பாட்டு நடவடிக்கைகளில் நாம் தவறாமல் சந்திக்கக்கூடிய மிகச்சில நபர்களில் குமார தேவன் ஐயா அவர்கள் குறிப்பிடத்தக்கவர். அப்ப-டியான பல சந்தர்ப்பங்களில்தான் நான் அவரைச் சந்தித்து வந்திருக்கின்றேன்.

இலக்கிய, வரலாற்று நூல்கள் பற்றிய ஏகப் பட்ட தகவல்களை கால அட்டவணைப்படி மண்டைக்கண்ணுக்குள் நிறைத்து வைத்துக் கொண்டலைந்தார்.

"குமாரதேவன் ஐயாட்ட ஏகப்பட்ட தகவல்கள் இருக்குதண்ண, ஒரு நாளைக்கு ஐயாவைக் கூப்பிட்டுப் பதிவு செய்வம்" என தம்பி சத்தியதேவன் பல தடவைகள் சொல்லிக்கொண்டே இருந்தான். திட்ட மிட்டிருந்தோம். ஆனால் நாம் வாய்க்கப் பெறாதவர்களானோம் ஐயா.

வல்லினம் குழுமத்தார் யாழ் வந்த சமயம் ஈழத்தைச் சேர்ந்த படைப்பாளிகளின் இலக்கியப் படைப்புக்கள் மலேசியாவில் இல்லை என்ற அவர்களது ஆய்வுக் கூற்றை அந்த இடத்திலேயே மறுப்புத் தெரிவித்-ததோடு, அத்தகைய பணியில் உழைத்த சில படைப்பாளிகள், படைப்புக்கள், காலங்கள் போன்ற தகவல்களை அந்த இடத்திலே-யே முன் வைத்தார். மிகவும் ஆச்சரியமாக இருந்தது

அவர் என்னிடம் கேட்டது "தமயந்தி, உன்ர அந்த ஏழுகடல்கன்னிகள்ள வாற புளியாணம் சாப்பிட வேணும் தமயந்தி ஒரு நாளைக்கு"

ஏழாற்றுத்திடல் தொன்மயாத்திரைப் பயணத்தின்போது பிரண்டையாற்றுத்தீவில் அவரது கோரிக்கை நிறைவேற சந்தர்ப்பம் வாய்க்கப் பெற்றது.

உடன் வேட்டையாடிய விளைமீனில் புளியாணமும் புழுங்கலரிசிச் சோறும் சமைத்து விருந்தாடிக் கொண்டோம்.

பிரிவுத்துயர் மிகுந்த இவ்வேளையில் அந்த அழகான நினைவுகளையும் அரவணைத்து விடை தருகிறோம் நேசத்துக்குரியவரே.

இறுதி வணக்கமும், அஞ்சலியும் ஐயா.

# அஞ்சலி

- எஸ். சத்தியதேவன்

குமாரதேவன் ஐயாவுடன் நான் நெருக்கமானதற்குக் காரணம் எனக்கு மிகப்பிடித்த நான் எப்போதும் எனதானதாகக் கொண்டிருக்க விரும்பிய அடையாளத்தை அவர் இயல்பாகக் கொண்டிருந்தார். அதுவே அவரை எல்லோருக்கும் பிடித்ததற்கான காரணமாகவும் இருந்தது என நான் நம்புகிறேன்.

ஆம், அவர் வாசகராக இருந்தார். வாசகராகவே வாழ்ந்தார். வாசகராகவே அடையாளப் படுத்திக்கொண்டார்.

வாசகரும் எழுத்தாளர்களும் ஒன்றேயான, எழுத்தைச் சந்தைப்படுத்துவதற்காகவும் எழுத்தினூடான அங்கீகாரத்திற்காகவும் தம்மை வாசகராகத் கொண்டிருந்தவர்கள் மத்தியில், படைப்பாளிகள் ஏங்கிக் கொண்டிருந்த ஒரு வாசகராக அவர் இருந்தார்.

வாசிப்பு என்பது பொழுதுபோக்கு என்ற பொதுப்புத்தி பெருகியிருந்த தலைமுறையைச் சேர்ந்த அவர் அந்த எல்லையைத்தாண்டி வந்து வாசிப்பு என்பதைத் தமக்கான சமூக அதிகாரத்திற்கான வழியாகக் கருதியிருந்த, பெரும்பாலும் அரச உத்தியோகத்தர்களாகப் பணியாற்றியபடி இலக்கியப்பரப்பிலும் கோலோச்சிய இலக்கியகாரர்களுடன் சமதையானவராகவும் அவர்களுக்குள் ஆட்படாத வாசகராகவும் இருந்தார்.

வெகுசனங்களுடன் புழங்கிய இலக்கிய வாசகனாகவும் பாட்டாளி வர்க்க வாசகராகவும் அவர் இருந்தார். இறுதிவரை தினசரிகளை நம்பியபோதிலும் எழுத்துக்கள் மீது பெரும திப்பு கொண்டிருந்த போதிலும் இலக்கிய வாசகருக்குரிய சிந்தனையும் கூருணர்வும் கொண்ட வாசகனாக அவர் இருந்தார்.

தமிழ்த் தேசியத்தின் பால் தீவிர பற்றுக் கொண்டிருந்த போதிலும் உரையாடல்களுக்கு இலகுவானவராகவும் தனது நினைவோடும் வாசிப்போடும் சார்போடும், இணங்க மறுத்த எல்லா இடங்களிலும் எதிர்வினைகளை ஆற்றுவதற்கும் என்றுமே தயங்காத வாசகராக அவர் இருந்தார்.

தேர்வுகளையும் பரீட்சையையும் நோக்காகக் கொண்ட வாசிப்பைத் தாண்டி அகலாத, குறிப்பாக சிற்றிதழ்களைக் கண்டுகொள்ளாத, அவற்றோடு உறவிருந்தாலும் தம்முடன் நெருங்கியவற்றைதவிர ஏனையவற்றை கருத்தில் எடுக்காத காலத்தில் ஈழத்தில் வெளியாகும் சிற்றிதழ்களில் வெளியாகும் பிரதிகள் அனைத்தையும் வாசிப்பவராக, வாசித்த உடனேயே கூடுமானவரையில் அந்த ஆக்கங்களின் படைப்பாளிகளுக்கு அது குறித்து தனது மதிப்பீடுகளையும் அது குறித்துக் குறித்த படைப்பாளி விரிவடைவதற்கான திசைவழிகளை வழங்குகின்ற, அப்படைப்பாளிக்கு தேவையானவற்றை தான் எங்கு கண்டாலும் அதனை அவரது கவனத்திற்கு கொண்டு செல்லக்கூடிய வாசகராகவும் அவர் இருந்தார்.

வரலாறுகள், வழக்காறுகள், மரபுரிமைகளில் பற்றுறதியும் பயணங்களில் குழந்தைகள் போல் பெருவிருப்பும் கொண்டிருந்த வாசகராக அவர் இருந்தார். பேராசியர்கள் இலக்கிய ஜாம்பவான்கள் ஆகியோரோடு தொடர்புகள் இருந்தபோதிலும் இளையவரோடு அவர்களுக்கு சலிப்பேற்படுத்தாத அவர்களுக்கு உந்துதல் தந்த மூத்த தலைமுறை வாசகனாக இருந்தார்.

இந்த குறிப்பில் அனேக தடவை அவர் வாசகராக இருந்தார் என்று மீண்டும் மீண்டும் பிரக்ஞையுடனேயே குறிப்பிட்டுள்ளேன்.

ஆம் அவர் வாசகராக இருந்தார். அதனால்த்தான் அவரின் இழப்பின் வெற்றிடம் பெரிதாகிறது.

# வாசிப்பின் அவதாரம் – குமாரதேவன்

-பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா,
கணிதப் பேராசிரியர்,
யாழ். பல்கலைக்கழகம்.

அறிவுத் தாகமதனை (Thirst for knowledge) ஒரு பற்றியெரியும் கானகத்திற்கு ஒப்பிடுவார்கள். அறிவுத் தாகம் உள்ளார்த் தமானதும் (Innate), ஒருவரின் பிறப் புரிமையானதுமாகும். சத்தியத்தைத் தேடு என்பது வேதவாக்கியமாகும். பற்றியெரியும் கானகத்தை ஒரு சில கொள் கலன்களில் கொண்டு வரும் நீரினைக் கொண்டு அணைக்க முடியாது. அதே போன்று ஒருவரின் அறிவுத்தாகமும் ஒரு சில கற்கைநெறிகளைக் கற்பதன் மூலமும் பட்டங்களைப் பெறுவதன் மூலமும் தணிக்க முடியாது. அதனால் தான் எம்முன்னோர்கள் ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் என்றுரைத்தார்கள். இக்கூற்றுக்கு வரைவிலக்கணமாகவும் உதாரணமாகவும் அமைந்தவர் அமரர் குமாரதேவன் அவர்கள். யாழ்ற்றன் கல்லூரியில் ஆரம்பக் கல்வியினை முதல் மாணவனாக பயின்று வந்த சிறு பராயத்திலேயே ஒவ்வொரு நாளும் மதியவேளையில் பாடசாலையிலிருந்து வீடு திரும்பும்போது அவரது உறவினரும் எனது மனைவியின் பேரனுமாகிய டாக்டர் சின்னதம்பி ஐயாவின் வீடு சென்று, அவர் படித்து முடித்த முதல் நாள் வீரகேசரி, ஈழநாடு பத்திரிகை களைப் பெற்று வாசிப்புப் பழக்கத்தினை இளமையிலேயே செழுமைப்படுத்தி யவர் அமரர் குமாரதேவன் அவர்கள். Hear to forget, Read to remember என்பார்கள். குமாரதேவனின் இணைபிரியாத, இடைவிடாத வாசிப்பு ஈடுபாடு அவரை பலவிடயங்களைத் தன்னகத்தே கொண்ட நடமாடும் அறிவுத் தகவல் களஞ்சியமாக பரிணமிக்க வைத்தது. இதன் காரணமாக இலக்கியம், சிறுகதை. அரசியல், சொற்பொழிவு, விமர்சனம், திரைப்படம், கண்காட்சிகள் எனப் பலதரப்பட்ட பயன்தரு விடயங்களின் ஆர்வலர்களும் கர்த்தாக்களும் குமார தேவனால் கவரப்பட்டனர். அவ்வாறு கவரப்பட்டவர்கள் பலரும் குமார தேவனிடம் பல விடயங்களைப் பகிர்ந்து கொள்ளவும், கலந்து பேசவும், தமக்குத் தேவையான காலத்தால் முந்தைய செய்-

தித் தொகுப்புக்கள், நூல்களைப் பெற வேண்டியும், ஐயம் நீங்கி தெளிவு பெ-றவும் வைத்தீஸ்வரன் முன்றலில் (சிவன் கோவில் சந்தியில்) தினமும் மாலை வேளையில் கூடுவார்கள். இக்கூட்டத்தில் பெரியோர்கள், அரசியல் ஆர்வலர்கள், இலக்கிய முனைப்புடைய இளைஞர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், அறிவுத் தேடல் கொண்ட மாணவர்கள் எனப் பல்வகையினரும் வயது வேறுபாடின்றி, கட்சி வேறுபாடின்றி, கொள்கை வேறுபாடின்றி, அனுபவ வேறுபாடின்றி, அதிகார வேறுபாடின்றி கலந்து கொண்டு குமாரதேவனின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட அறிவுரூபமான, அனுபவப் பகிர்வுகளையும் ஆலோசனை-களையும் எதிர்வுகூறல்களையும் பெற்றுக் கொள்கின்றமையை காண்கின்ற எமக்கெல்லாம் ஒரு புத்துணர்வை தந்தது. மேலும் அவர் தம்பால் உன்னத மதிப்பை-பயும் மரியாதையையும் ஏற்படுத்தியது வியப்பதற்கில்லை.

நாம் முன்பு குறிப்பிட்டது போன்று Hear to forget, Read to re-member என்பதற்கு மேலாக Do to understand என்பார்கள். ஒரு நைத்திய பிரம்மச்சாரியாக வாழ்ந்து, வாசிப்பிற்கும் கலந்துரையாடலுக்கும் மேலாக, சண்முகம் கடைத் தொகுதியில் தனது வாசஸ்தலத்தைக் கொண்ட அவர் எப்படி இரவு வேளையில் ஒரு பசு தான் பகல் வேளையில் உட்கொண்ட புல்லையும், இதர உணவுகளையும் மீளவும் இரைமீட்டு அரைத்துப் பாலாக்குமோ அதுபோல் தான் வாசித்தவற்றை இரவு வேளைக-ளில் மீளவும் இரைமீட்டு அவ்விடயங்களிலுள்ள தவறுகளையும் மாசுக்களையும் நீக்கி ஒரு அன்னம் போல் நல்லவற்றைப் பிரித்தெடுத்து தம்மை நாடி வருவோருக்கு ஒரு செறிவான, காத்திரமான, தெளிவான கருத்துப் பகிர்வை மேற்கொள்வார். எவ்விடயத்தையும் தட்டிக் கழிக்காமல் எல்லாவற்றையும் வாசித்து அவற்றை நினைவுபடுத்தி, உரியவற்றைப் பிரித்தெடுத்து உரியவர்களுடன் பகிர்ந்தளிப்பதையே தனது வாழ்வின் நோக்கமாகக் கொண்டு வாழ்ந்த அரிய பண்புடைய தியாக சிந்தையுடைய குமாரதேவனுடன் சமகாலத்தில் வாழவும் பழகவும் பயிலவும் கிடைத்தமை எமது பூர்வீக புண்ணியமாகும்.

குமாரதேவன் போன்று எமது கலை, இலக்கிய, அரசியல், கலாசார பரி-மாணங்களுடன் ஒன்றிப்போன ஒரு வாசகரை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியுமா என்பது விடையின்றிய கேள்வியாகத்தான் அமைகின்றது. உண்மையி-லேயே குமாரதேவனை வாசிப்பின் அவ-தாரம் என்றே போற்றத் தோன்றுகின்றது. அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் அன்புத் தாயார் மற்றும் சகோதரர்கள் பிரிவுத்துயரை தாங்கிக் கொள்ளவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

# எங்கள் குமாரதேவன் ஐயா

- அருண்மொழிவர்மன்

ஈழத்தில் நான் வாழ்ந்த போர் சூழ்ந்த **1990** முதல் **97** வரையான காலப்பகுதியில் என் பதின்மங்களிலும் பதின்மங்களை ஒட்டிய பருவங்களிலும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த அன்றைய வாழ்வை, அதை எதிர்கொண்ட விதங்கள் பற்றிய நினைவுமீட்டல்களாக யாழ் உதயன் பத்திரிகையின் வார இறுதிச் சிறப்பிதழான சூரிய காந்தியில் தொடரொன்றை **2014** ஆம் ஆண்டின் இறுதியில் எழுதிவந்தேன். சில வாரங்கள் மட்டுமே வந்த இந்தத் தொடர் அன்றைய யாழ்ப்பாணத்து உணவகங்கள், சிற்றுண்டிச் சாலை, தனியார்கல்வி நிலையங்கள் பற்றிய நினைவுகள், யாழ்ப்பாண வெளியேற்றத்துக்குப் பின்னரான தென்மராட்சி வாழ்க்கை, கையெழுத்துப் பிரதிகள் எழுதிய காலப்பகுதி போன்ற பல்வேறு விடயங்கள் பற்றிய நினைவுமீட்டல்களாக அமைந்தது. தனிப்பட அந்தத் தொடரை எழுதிய காலம் எனக்கு முக்கியமானதோர் காலப்பகுதி. கடுமையான மன அழுத்தம் என்னை முழுமையாக ஆக்கிரமிக்கத் தொடங்கி நான் அதிலிருந்து வெளியேற மிகக் கடுமையான போராட்டங்களை முன்னெடுத்துக்கொண்டிருந்த காலப்பகுதி.

இந்தக் காலப்பகுதி தான் பின்னாளில் கிட்டத்தட்ட அனைத்துச் செயற்பாட்டுகளிலும் இணைந்து பணியாற்றிய விதை குழுமத் தோழர்களுடனான உறவேற்பட்டதும், புதிய சொல் என்கிற இதழுக்கான சிந்தனை எழுந்ததுமான காலப்பகுதியுமாகும். நாடோறும் மணித்தியாலக் கணக்கிலான உரையாடல்களும், அறிமுகங்களும், கனவுகள் பற்றிய பகிர்தல்களும் செயல்நோக்கிய உரையாடல்களும் தொடர்ந்துகொண்டிருந்தன. இந்த உற்சாகத்தாலும் ஊக்குசக்தியாலும் நானும் மன அழுத்தத்திலிருந்தும் மனச்சோர்விலிருந்தும் மீண்டுவந்தேன். சூரியகாந்தியில் நான் எழுதியதாக இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட தொடரில் :**185** ஆம் கட்டை, மீசாலை வடக்கு - நினைவுகள்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் யாழ்ப்பாண வெளியேற்றத்தின் பின்னர் நாம் இடம்பெயர்ந்து மீசாலை வடக்கில் இடம்பெயர்ந்திருந்த காலப்பகுதியிலான சமூக பண்பாட்டுச் சூழல்களைப் பின்னணியாக வைத்து என் நினைவுகளைப் பகிர்ந்திருந்தேன். அதில், அப்போது சங்கத்தானையில் தற்காலிகமாக இயங்கிவந்த சண்முகம் அண்ணையின் உணவகம் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். அந்தத் தொடரைத் தொடர்ந்து வாசித்து வந்த குமாரதேவன் ஐயா, சண்முகம் அண்ணையின் கடையிலேயே வேலைசெய்தும் வந்தார்.

தொடரில் சண்முகம் அண்ணையின் கடை பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்த்து உற்சாகமடைந்த குமாரதேவன் ஐயா, அதை எழுதிய அருண்மொழிவர்மன் யாரென்று தேடத்தொடங்கியிருக்கின்றார். இந்தக் காலப்பகுதியில் கிரிஷாந், யதார்த்தன், சதீஸ் உள்ளிட்ட நண்பர்கள் சண்முகம் அண்ணையின் கடைக்கு வழமையாகப் போவதையும் அங்கிருந்து அரட்டையடிப் பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர். சாதாரண அறிமுகத்திலிருந்து தொடங்கி வாசிப்பு, அரசியல், இலக்கியம், கலை என்று வெவ்வேறு தளங்களிலான உரை யாடல்களால் குமாரதேவன் ஐயாவுக்கும் நண்பர்களுக்குமான நெருக்கம் அதிகரித்து வந்த அந்தக் காலப்பகுதியில், குமாரதேவன் ஐயா கிரிஷாந்திடம், சூரியகாந்தியில் தொட-ரெழுதுகின்ற அருண்மொழிவர்மனைத் தெரியுமா என்று கேட்டிருந்தார். கிரி ஷாந்தும், அவர்களுக்கும் எனக்குமிடயி லான நட்பினைக் குமாரதேவன் ஐயாவிடம் தெரிவித்துவிட்டு என்னிடம் பேசும்போது குமாரதேவை ஐயா பற்றிக் குறிப்பிட்டார். உண்மையில் அந்த முதல் சந்தர்ப்பத்தில் அதை வெறும் தகவலென்று மட்டுமே நான் எடுத்துக்கொண்டேன்.

தொடர்ந்து இயங்கவும் கூடி உரையாட-வும் செயற்படவுமாக நாம் எமது உரை யாடல்களைத் தொடங்கியிருந்தத ஆரம்ப காலப்பகுதி அது. அப்போதுதான் ஒருமுறை கிரிஷாந் சொன்னார், நாங்கள் குமாரதேவன் ஐயாவுடனும் ஒருக்கா கதைக்கவேண்டும் என்று. அவருடன் பேச முன்னர் அவரைப் பற்றிக் கொஞ்சமாவது அறியவேண்டும் என்பதற்காக கிரிஷாந்திடம் அவரைப் பற்றிக் கேட்டுக்கொண்டேன், கிரிஷாந் அவரைப் பற்றிச் சொன்ன அறிமுகம் அவரை மதிப்புக்குரியவராகக் காட்டியது. ஆயிரம் கனவுகளுடன் இருந்த, அனுபவத்திற் குறைந் தவர்களான எமக்கும் தன் அனுபவங்களை ஞானமாகத் திரட்டிவைத்திருந்த, அரசி யல், வாசிப்பு, திரைப்படங்கள், அரசியல் என்று பல்வேறு துறைகளில் ஆழ்ந்தகன்ற பார்வை கொண்டவருமான குமாரதேவன் ஐயாவுக்கும் இடையிலான அழகான ஓர் உறவு அங்ஙனம் ஆரம்பமாயிற்று.

வாசிப்பு, தேடல் என்பவற்றுக்கு அப்பால் நேர்படப் பேசுதல், வெளிப்படைத் தன்மை, மாற்றுக் கருத்துகளுக்கான வெளியை கொடுத்தவாறே தனது கருத்துநிலையில் இருந்துகொண்டு ஜனநாயகபூர்வமான உரையாடலைத் தொடர்தல் என்பன நாம் அவரிடமிருந்து கற்கவேண்டிய பண்புகள். கடந்த ஐந்தாண்டுகளில் யாழ்ப்பாணத்-தில் இடம்பெற்ற அனேக கலை இலக்கிய நிகழ்வுகளிலும் யாழ்ப்பாணத்துக்கு வெ-ளியே இடம்பெற்ற சில நிகழ்வுகளிலும் குமாரதேவன் ஐயா பங்கேற்றபோதெல்லாம் உரையாடல்களை உயிர்த்துடிப்புடனும் கருத்துச் செறிவுடனும் ஜனநாயக ரீதி யில் முன்னெடுத்தவராக அவர் இருந்தார். அக்காலப்பகுதியில் நாளுக்கு நாள் அவர் நண்பர்கள் வட்டம் பெருகிக்கொண்டு போனதுபோலவே அவரது பண்புக-ளால் அவர் நிறையப் பேரால் மதிக்கவும் விரும்பவும்பட்டார்.

தமிழ்ச் சூழலில் தீவிரமான வாசிப்புப் பழக்கம் மெல்ல மெல்லக் குறைந்துவருகின்ற இன்றைய காலப்பகுதியில் வாசகர் தரப்பின் அடையாளமாகவும் நம்பிக்கையாகவும் திகழ்ந்தவர் குமாரதேவன் ஐயா. நூல்க-ளாக வாசிப்பதற்கு அப்பால், நாளாந்தம் வருகின்ற பத்திரிகைகளில் இருந்து இணைய இதழ்களில் இருந்து தனக்கு அறிமு-கமானவர்களின் வலைப்பதிவுகள், சமூக

வலைத்தளங்கள் என்று அனைத்தையும் படித்துவிடுவது குமாரதேவன் ஐயாவின் வழக்கம். எளிமையின் சின்னமாக வாழ்ந்தவர் குமாரதேவன் ஐயர் அவரிடமிருந்த செல்லிடபேசி மிக அடிப்படையான, இணைய இணைப்பில்லாத சாதாரணமானதாக இருந்தது. குமாரதேவன் ஐயாவுடன் மிக நெருக்கமாகப் பழகியவர்களில் தொடர்ச்சியாகவோ, புதியதோர் உரையாடலின் தொடக்கமாகவோ, முன்னைய உரையாடல் ஒன்றின் நீட்சியாகவோ தான் அவர் முன்னெடுப்பது வழக்கம். எந்த ஒரு விடயம் குறித்தும் வெறும் அபிப்பிராய உதிர்ப்பைச் (Opinion Droping) செய்கின்ற வழக்கம் அவரிடம் அறவே கிடையாது. ஒன்றை வாசித்துவிட்டால் அது சம்பந்-




ஒருவரான நண்பர் சசீந்திரனின் கடைக்குக் கிட்டத்தட்ட ஒவ்வொருநாளும் செல்கின்ற குமாரதேவன் ஐயா, அங்கிருந்தே இணைய இணைப்பினூடாக பத்திரிகைகள், வலைத்தளங்கள் என்பவற்றைப் பார்ப்பது வழக்கம். குமாரதேவன் ஐயாவைப் பொறுத்தவரை வாசிப்பது என்பது வாசித்துவிட்டுப் போவது என்பதல்ல, அவரைப் பொறுத்தவரை வாசிப்பென்பது உரையாடலின் ஒரு பகுதி. அவர் வாசிக்கின்ற ஒவ்வொரு விடயத்தையும் ஏதோ ஒரு உரையாடலின் தப்பட்ட எழுத்தாளர்கள், பத்திரிகை ஆசிரியர், வெளியீட்டாளர்கள், அந்த விடயத்துடன் தொடர்புடைய செயற்பாட்டாளர்கள் என்று அனைவரையும் தொலைபேசியிலோ அல்லது நேரேயோ சந்தித்து உரையாடிவிடுவது குமாரதேவன் ஐயாவின் வழக்கம்.

பதின்மூன்று வயது மட்டுமே தான் பாடசாலைக் கல்வியைப் பெற்றதாகவும் தனக்கு ஆங்கிலப் புலமை அவ்வளவு போதாதும் என்றும் பல்வேறு பதிவுகளில் குறிப்பிட்டுள்ளார் குமாரதேவன் ஐயா. ஆனால்

தனது வாசிப்பினாலும் தேடல்களினாலும் பல்கலைக் கழகக் கல்வியாலும் பட்டங்களினாலும் கூட பெற்றுத் தரமுடியாத அளவுக்கு அறிவுச்சுடர் கொண்டவராக அவர் விளங்கினார். ஆங்கிலப் புலமை போதாது என்று அவர் குறிப்பிட்டார் என்றாலும் ஆங்கிலப் பத்திரிகைகள், ஆங்கில வார இறுதிப் பத்திரிகைகள் என்பவற்றைக் கூர்மையாக வாசிப்பதுடன் அவற்றை உள்வாங்கி அவை குறித்தும் அவர் தொடர்ச்சியாக உரையாடியே வந்தார். அவருடன் நெருங்கிப் பழகியவர்களில் ஒருவரான சசீந்திரனிடம் கேட்டால் இவைபற்றிச் சுவையான பல நிகழ்வுகளைக் குறிப்பிடுவார்.

தனக்குக் கிடைக்கக் கூடிய சில நிமிடங்களைக் கூட தன் தேடல்களையும் வாசிப்பையும் விரித்துச் செல்வதற்காகவே கர்மமே கண்ணாகப் பயன்படுத்தியவர் குமாரதேவன் ஐயா. 2018ஆம் ஆண்டு நவம்பரில் நான் இலங்கை சென்றிருந்த போது நண்பர் சத்தியன் என்னை அழைத்துச் சென்று பாசாம் எழுதிய "வியத்தகு இந்தியா" நூலினை வாங்கித்தந்திருந்தார். நண்பர் காண்டீபராஜ் நிர்வகித்து வந்த D' Villa Garden இல் நான் குடும்பத்தினருடன் தங்கியிருந்தேன். நண்பர்கள் தொடர்ந்து வந்து அங்கே நிறைந்திருந்த மிக மிக நெகிழ்வாகவும் அன்பாகவும் இருந்த நாட்களவை. நாம் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிக்கிடுவதற்கு முதல்நாள் நண்பர்கள் அனைவரும் சந்தித்து D' Villa Garden இற்கு முன்னதாக இருந்த கூடத்தில் இருந்து பேசிக் கொண்டிருந்தோம். குமாரதேவன் ஐயா எம்முடனே இணைந்து பயணித்துக் கொண்டிருப்பவராக மாறியிருந்த காலப்பகுதி அது. அங்குவந்திருந்த குமாரதேவன் ஐயா, வியத்தகு இந்தியா புத்தகத்தைப் புரட்டிப் பார்க்கத் தொடங்கி கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் புத்தகத்தில் இலயித்துப் போய்க் கருத்தூன்றி வாசித்துக்கொண்டிருந்தார். அவர் அந்த வாசிப்பில் காட்டிய ஆர்வமும் ஈர்ப்பும் எனக்கு ஆச்சரியத்தை ஊட்டுவதாக இருந்தது. "வர்மனோட நான் போனில கதைக்கலாம் தானே, இது முக்கியமான புத்தகம், வர்மன் கொண்டுபோகோனும். அதற்கும் முதல் நான் வாசிக்கேலுமானத வாசிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு வாசித்துக்கொண்டே இருந்தார். சத்தியன் ஊடாக அந்தப் புத்தகத்தின் பிரதியொன்று அவருக்குக் கிடைக்க வழிசெய்திருந்தேன். அதற்குப் பிறகு தொலைபேசியூடாக அவருடன் கதைத்த சில சந்தர்ப்பங்களில் அந்தப் புத்தகத்தில் முக்கியமானவையென்று பட்ட சில விடயங்களைப் பகிர்ந்து கொண்டிருந்தார்.

குமாரதேவன் ஐயா பற்றிக் கூறும்போதெல்லாம் நாம் நன்றியுடன் நினைவுகூரவேண்டியவர் சண்முகம் உணவகத்தின் உரிமையாளரான சண்முகம் அவர்கள். அந்தக் கடையில் குமாரதேவன் ஐயா பணியாற்றினாலும் கூட சண்முகம் அண்ணைக்கும் குமாரதேவன் ஐயாவிற்கும் மிகநெருக்கமான தோழமை இருந்ததென்றே சொல்லவேண்டும். சண்முகம் அவர்களின் வீட்டிலும் சண்முகம் உணவகத்திலுமே குமாரதேவன் ஐயா தங்கிவந்தார். அங்கு பணியாற்றிய அனைவரதும் அன்பையும் மதிப்பையும் பெற்றவராக இருந்ததுடன் குமாரதேவன் ஐயாவின் நிமித்தம் கலை இலக்கிய ஆர்வலர்களின் சந்திப்புப் புள்ளியாகவும் சண்முகம் உணவகம் மாறிவந்தது. அதற்கான வெளியையும் சண்முகம் அவர்கள் கொடுத்தே வந்தார். என்னுடம் கதைத்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சண்முகம் அவர்கள் குறித்து நேசம் நிறைந்த ஏதோவொரு விடயத்தைத் தன்னும் குமாரதேவன்

ஐயா குறிப்பிட்டுவந்தார்.

குறுகிய வட்டமொன்றுக்குள் அடைபட்டுவிடாமல் வெவ்வேறு தலைமுறைகளைச் சேர்ந்த பல்வேறு எழுத்தாளர்கள், ஆளுமைகளுடன் அவர் தொடர்ச்சியாக உறவுகளைப் பேணியே வந்தார். ஐ. சாந்தன், வித்தியாதரன், அ, யேசுராசா, குப்பிழான் ஐ. சண்முகன் உள்ளிட்ட பலருடன் அவர் தொடர்ச்சியாகப் பேசியும் உறவைப் பேணியும் வந்தார். அவரது நட்புவட்டம் மிகப் பெரியது. விதை குழுமம், புதிய சொல் ஆகிய எங்கள் வட்டத்தில் குமாரதேவன் ஐயா பெருமதிப்புக்கும் தோழமைக்கும் உரியவராக விளங்கியதுடன் எமக்கான ஆலோசகராவும் ஆதாரசக்திகளில் ஒன்றாகவும் செயற்பட்டவர். அவரது தலைமுறையைச் சேர்ந்தவர்களில் எம்முடன் நெருக்கமான தொடர்புகளை அவரளவு பேணியவர்கள் மிக மிகச் சிலரே. புதிய சொல்லுக்காக அவருடனான சந்திப்பினை நிறைவு செய்வதாக "கடும் சுகவீனத்திலிருந்து மீண்டு தற்போதைய வாழ்க்கையை மேலதிக போனஸாக உணர்கையில் இசங்கள், கோட்பாடுகள், சுமைகள் எதுவுமின்றி வெள்ளைமனதுடன் நவீன இலக்கியத்துக்குள் பிரவேசிக்கும் புதிய இளந்தலைமுறையினருடன் சேர்ந்து பறக்க என்னில் சிறகுகளை உருவாக்க முயற்சி செய்கின்றேன்" என்று நிறைவு செய்திருப்பார். அப்படித்தான் அவர் பயணித்தார். எங்கள் கனவுகளை அவர் தூக்கிச் சுமந்தார், அவை நிறைவாக அவரும் செயற்பட்டார்.

குமாரதேவன் ஐயாவை யோசித்துப் பார்க்கின்றபோது எதிலும் பற்று வைக்காது அனைத்தையும் காதலுடன் நேசித்த ஒரு பேரன்புவாழ்க்கையை வாழ்ந்தவராகவே, ஒரு சித்தர் வாழ்வு வாழ்ந்தவராகவே எண்ணத்தோன்றுகின்றது. வேட்டி அல்லது சாரத்தினை அள்ளிக் கட்டியபடி சட்டையில் ஓரிரு பொத்தான்களை மட்டும் அணிந்தபடி ஒரு பையுடன் அவர் நடந்துவருகின்ற தோரணை மிகவும் கம்பீரமானது.

எங்கள் வட்டங்களில் ஆளுமை மிக்க ஒருவராகவே அவரை மதித்துக் கொண்டாடினோம். ஓரிரு மாதங்களுக்கு முன்னர் எனக்கு சத்தியனிடம் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. என்னவென்று கேட்டேன், வர்மன், கந்தரோடையில் நிற்கிறோம், குமாரதேவன் ஐயாவும் நிற்கிறார். உங்களோட கதைக்கோனுமாம் என்றார். கதைத்தேன். அன்று சத்தியனைச் சந்தித்துக் கதைக்கும்போது யதேச்சையாக, இவ்வளவு பக்கத்தில இருந்தும் தான் ஒருமுறையும் கந்தரோடைக்குப் போய்ப்பார்க்கவில்லை என்று சொல்லியிருக்கின்றார் குமாரதேவை ஐயா. இப்பவே போவோம் என்று சொல்லி அழைத்துச் சென்றிருக்கின்றார் சத்தியன். அதையிட்டு மிகவும் நெகிழ்ந்துபோயிருந்தார் குமாரதேவன் ஐயா. குமாரதேவன் ஐயாவுக்கும் கிரிஷாந்துக்கும் இடையிலான நட்பு மிகவும் அணுக்கமானது. கிரிஷாந் - பிருந்தாவின் மரபுகளை மறுத்த திருமணத்தினை குமாரதேவன் ஐயாவே தலைமைதாங்கி நடத்திவைத்தார். இதுபோல குமாரதேவன் ஐயாவுடன் நெருங்கிப் பழகிய அனைவருக்குமே அவர் பற்றிச் சொல்ல எத்தனையோ இருக்கும். அவற்றையெல்லாம் நிச்சயமாக அவர்கள் பதிவுசெய்வதனூடாக மானுடத்தின் பேரன்புடன் வாழ்ந்த ஒருவரை நாம் இன்னும் தெரிந்துகொள்ள ஏதுவாகலாம். எங்களுடன் பயணித்தவர்களை நாம் இழக்கும்போதெல்லாம் அவர்கள் கனவுகளையும் நாம் சேர்ந்தே சுமப்போம். கனவுகள் மெய்ப்படும்.

# இலைமறை கனியாக வாழ்ந்த குமாரதேவன் என்றொரு வியத்தகு ஆளுமை

அ. சர்வேஸ்வரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
சட்ட பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

கல்விச்செல்வமும் பொருட்செல்வமும் அருட்செல்வமும் நிறைந்த காரைநகரில் இயற்கை வளங்களால் சூழப்பட்ட அழகிய கிராமம் கோவளம். கோவளத்திலே புகழ்பூத்த மணியர் கந்தையா பரம்பரையின் நான்காம் தலைமுறையில் பிறந்தவர் அமரர் குமாரதேவன். எனது நெருங்கிய உறவினராகவும் சிறுவயதிலிருந்து அன்னாரின் பிரிவு வரை எனது சிறந்த நண்பராகவும் இருந்து வந்தவர் குமாரதேவன்.

குமாரதேவனின் தந்தையார் குமாரசாமி அவர்கள் நாவலப்பிட்டியில் ஒரு பிரபல வர்த்தகர். குமாரசாமி அவர்கள் நிமிர்ந்த உயர்ந்த அழகிய தோற்றம் கொண்டவராகவும் எவருக்கும் அஞ்சாதவராகவும் பன்முக ஆளுமை கொண்டவராகவும் இருந்தார். பிரபல உதைபந்தாட்ட வீரராக இருந்த அவர் சிறந்த ஆங்கில புலமையையும் கல்வியறிவையும் நகைச்சுவை உணர்வையும் கொண்டிருந்தார். குமாரதேவனின் தாயார் கமலாதேவி அவர்களும் புகழ்பெற்ற சைவப் பாரம்பரியமுள்ள குடும்பத்திலே பிறந்து கல்வி கேள்விகளில் சிறந்த ஆழமான இலக்கிய மற்றும் சமய அறிவுள்ளவராக உள்ளார்.

குமாரதேவன் பாடசாலையில் கல்வி கற்றபோது கல்வியில் சிறந்து விளங்கியதுடன் வகுப்பிலே முதனிலை மாணவனாக பரீட்சைகளில் சித்தி பெற்று வந்தார். இவருடன் கல்விகற்ற பலர் இன்று வைத்தியர்களாகவும் பொறியியலாளர்களாகவும் உள்ளார்கள். ஆனால், கல்விப் பயணம் பாதி வழியில் நின்றது. அன்னாரின் தந்தையார் இளவயதில் இறந்தபோது, குடும்பத்தின் மூத்த புதல்வரான இவர் நாவலப்பிட்டி நகரின் மத்தியிலிருந்த தந்தையாரின் வர்த்தக நிறுவனத்தின் நிருவாகத்தைப் பொறுப்பேற்றார்.

மிக இளம் வயதிலிலேயே தினமும் தவறாமல் பத்திரிகைகளை வாசிப்பவராகவும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செய்திகளைக் கேட்பவராகவும் இருந்தார். பத்திரிகைகளும் வானொலிகளும் அவரது வாழ்க்கைத் துணைகளாகின. குமாரதேவன் அவர்கள் சிறுவயதினராக இருந்தபோது, கோவளத்தில் அவரது வீட்டிற்கு அயலில் மலாயன் பென்சனரும் வைத்தியருமான அமரர் அ. சின்னத்தம்பி அவர்கள் வசித்து வந்தார். அமரர் சின்னத்தம்பி எனது தாய்வழிப் பாட்டனாரும் குமாரதேவனின் உறவுமுறை

மாமனாரும் ஆவார்.

அமரர் சின்னத்தம்பி தினமும் பத்திரிகைக-ளை பத்திரிகை விநியோகத்தர் மூலம் பெற்று வந்தார். குமாரதேவன் தனது மாமனாரின் வீட்டிற்கு வந்து அப்பத்திரிகைகளை எடுத்துச் சென்று தவறாமல் வாசித்து வந்தார். குமாரதேவனின் தந்தையார் தனது மகனின் பத்திரிகை வாசிக்கும் ஆர்வத்தை ஊக்குவிப்பதற்காக கோவளத்தில் கிடைக்காத பத்திரி கைகளை நாவலப்பிட்டியிலிருந்து தினமும் தபாலில் அனுப்பி வந்தார். ஊடகச்செய்தி-களை வெறுமனே செய்திகளாக ஏற்காது அச் செய்திகளை அவர் பகுப்பாய்வு செய்வதுவும் அவைகள் மீதான அவரது பிரதிபலிப்புகளும் அவருடன் பழகியவர்கள் அறிந்த விடயம். இன்று பத்திரிகைகளும் பெறுமானமுள்ள ஒரு வாசகரை இழந்து விட்டன.

அரசியலமைப்புச் சட்டத்தைக் கற்றவனா-கவும் கற்பிப்பவனாகவும் நான் உள்ளேன். அரசியலமைப்பு என்பது வெறுமனே ஒரு சட்டமா-கப் பார்க்கப்படாது கடந்த கால, நிகழ்கால மற்றும் எதிர்கால அரசியல் பின்னணியுடனும் சேர்த்துப் பார்க்கப்பட வேண்டிய ஒன்று. இவ்வாறான ஓர் அணுகுமுறையில் எனக்குச் சந்தேகங்கள் ஏற்படுகின்றபோது அவைகளைப் பற்றி பேசி அபிப்பிராயங்களைப் பெறுகின்ற மிகச் சிலரில் ஒருவராக குமாரதேவன் இருந்-தார். பல்கலைக் கழகம் சென்று கல்வி கற்காது பத்தாம் வகுப்புடன் தன் கல்வியைப் பாதி வழியில் கைவிட்ட ஒருவரிடமிருந்து நான் அரசியலமைப்புச் சட்டம் பற்றியும் அரசியல் பற்றியும் கற்றவைகள் பல.

அப்பொழுது நிலவிய சூழ்நிலையில் பலர் இடம்பெயர்ந்தார்கள், இன்னும் பலர் புலம்பெ-யர்ந்தார்கள். அவர்கள் சேர்த்து வைத்த பெறுமதியான புத்தகங்களையும் விட்டுச் சென்றார்கள். இதன் காரணமாகக் கிடைத்தற்கரிய பெறுமதியான அரசியல் மற்றும் இலக்கிய புத்தகங்கள் பல நூற்றுக்கணக்கில் பழைய போத்தல்கள் மற்றும் பத்திரிகைகள் சேகரிப்பவர்களின் கடைகளைச் சென்றடைந்-தன. இவைகளை மிகக் குறைந்த விலைகளில் குமாரதேவனும் நானும் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி வைத்திருந்தோம். தமிழ் தலைவர்கள் சிறைகளில் இருந்தபோது எழு-திய புத்தகங்கள், சுதந்திரன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு என்று பல புத்தகங்கள் இருந்தன. இவைக ளெல்லாம் பின்னர் இந்திய இராணுவத்தி-னரின் தேடுதலின் போது தீக்கிரையாகின.

எங்கள் வீட்டு மதிலுக்கு முன்னாலுள்ள வேப்பமரம்தான் அன்றைய காலத்தில் அரசியல் ஆய்வரங்கம். வேப்பமரத்தின் கீழ் குமார தேவன் வந்து நின்றால் படிப்படியாக தானா-கச் சேர்ந்த ஒரு பெருங்கூட்டம் கூடி விடும். குமாரதேவனின் அரசியல் கருத்துக்களும் அரசியல் விமர்சனங்களும் பலருக்குச் சிறந்த அரசியல் அறுவடையாகும். சில வேளைக-ளில் காரசாரமான வாதப்பிரதிவாதங்களும் ஏற்படுவதுண்டு. இவைகளின்போது குமார தேவன் ஆத்திரமடையாது தர்க்க ரீதியாக தன் கருத்துக்களை முன்வைத்து வாதிடுவார். தலைவிதி அமைந்திருந்தால் ஒரு சிறந்த அரசியல்வாதியாக அல்லது சட்டத்தரணியாக ஆகியிருக்க வேண்டியவர்.

அரசியலில் நுனிப்புல் மேய்ந்து விட்டுப் பிரபல அரசியல்வாதிகள் ஆகிவிட்ட பலர் இருக்கின்றார்கள். இவர்களுடன் ஒப்பிடும் போது தமிழ் மக்களின் அரசியல், தேசிய அரசியல், பிராந்திய அரசியல் மற்றும் சர்வதேச அரசியல் பற்றிய குமாரதேவனின் ஆழமான அறிவானது வியக்கத்தக்கது. பொதுவாக ஒரு விடயத்தை குமாரதேவன் பார்க்கின்ற பார்வையானது மற்றையவர்களின் பொதுவான பார்வையிலிருந்து விலகி வேறுபட்டதாக

இருக்கும். அவைகளில் நகைச்சுவையான விடயங்கள் இருந்தால், அவைகளை மிக நுணுக்கமாகத் தேர்ந்து பிரித்தெடுத்துத் தானும் இரசித்து மற்றையவர்களையும் இரசிக்க வைப்பார்.

குமாரதேவன் மற்றையவர்களுடன் குரோதமின்றி விரோதமின்றி பொறாமையின்றி எப்பொழுதும் அன்புடன் பழகினார். அவர் தனது உடல்நிலை ஆபத்தான நிலையில் உள்ளது என்பதனை அறிந்தே இருந்தார். ஆனால், அவர் அதனைப் பற்றிக் கவலைப்பட்டதோ பேசியதோ இல்லை. இலைமறை கனியாக நீண்டகாலமாக வாழ்ந்து வந்த குமாரதேவன் படிப்படியாக இலைகளை விலக்கி கடந்த சில வருடங்களாக வெளித்தோன்றினார். தமிழ் ஊடகங்களும் அவரது புலமையையும் ஆற்றலையும் அண்மைக் காலத்தில் அடையாளங்காண ஆரம்பித்தன. இலைகளை விலக்கி வெளித்தோன்ற ஆரம்பித்தபோது உதிர்ந்து விட்டார்.

2019 ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருந்தபோது அவரைச் சுற்றிச் சேர்ந்த ஒரு கூட்டத்துடன் காத்திரமான பயனுள்ள விமர்சனங்களைச் செய்து கொண்டிருக்க வேண்டியவர் அன்றைய தினம் அவர்களையும் எங்களையும் விட்டு விலகி விலகி தொலை தூரம் சென்று கொண்டிருந்தார். அன்னாரின் இழப்பானது அவரது குடும்பத்தவருக்கு மட்டுமல்லாது எல்லோருக்கும் குறிப்பாக யாழ்ப்பாண சமூகத்திற்குப் பேரிழப்பாகும். இன்றைய யாழ்ப்பாண சமூகத்தில் கருத்துருவாக்கத்திற்கு ஆரோக்கியமான பங்களிப்பை வழங்க வேண்டிய ஒருவர் இன்றில்லை. அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

# அஞ்சலி

- மீராபாரதி

போரின் பின்னர் இலங்கைக்கு வர ஆரம்பித்தபின், கடந்த இரண்டு மூன்று வருடங்களாக குமாரசாமி குமாரதேவன் அவர்களை சந்தித்து உரையாடி இருக்கின்றேன். அதன்பின் வீதிகளில் சந்திக்கும் பொழுதும் தவறாது உரையாடி சென்றிருக்கின்றோம்.

ஒருமுறை இரவு உணவு சாப்பிட நேரமாகிவிட்டது. வண்ணார்பண்ணை சந்தியிலுள்ள கடையில் மட்டுமே சாப்பாடு இருந்தது. சாப்பிட இருந்தபோது இவர் வந்து உரையாடினார். இங்கு என்ன செய்கின்றீர்கள் எனக் கேட்ட போது இங்குதான் வேலை செய்கின்றேன் என்றார். அன்று தோசையும் சுவையான பச்சைச் சட்டினியும் சாப்பிட்டேன். அடுத்த முறை சென்றபோது இவர் இருக்கவில்லை. சாப்பிட்ட பின் அன்று குமாரதேவன் அவர்கள் இருந்த போது சுவையான பச்சை சட்டினி தந்தார். இன்று அந்தளவு சுவையில்லை என்றேன். அப்பொழுது அங்கு இருந்தவர் சொன்னார் அது அவர் வீட்டிலிருந்த சாப்பிட கொண்டவந்தது என. அவரது நல்ல உள்ளத்தைப் புரிந்து கொண்டேன். இந்த வருடம் எனக்குத் தனிப்பட பல இழப்புகளின் வருடம். அதில் இவரும் ஒருவரானார்.

எனது அஞ்சலிகள்.

# குமாரதேவன்
# தீராத் தேடலொன்று தீர்ந்து போனது

R.J.பிரகலாதன்.
உடுவில்.

சிவன் கோவிலடி சண்முகம் கடையில் குமாரதேவன் ஐயாவை முதன்முதலில் சந்திக்கிறேன். எங்கள் முதல் சந்திப்பு சிரிப்போடு கடக்கிறது. என்னைப்போல் அவரும் கடைக்கு சாப்பிட வந்தி ருப்பார், சரியான பசியில் என்னை யாரோ என்று நினைத்துச் சிரித்திருப்பார் என்று நினைத்தபடி கடக்கின்றேன்.

தேசிய கலை இலக்கிய பேரவை ஒழுங்கு செய்த கூட்டத்தில் இரண்டாவது சந்திப்பு. அங்கும் அதே சிரிப் போடு கூடுதலாய் இரண்டொரு வார்த் தைகளோடு முடிகிறது.

தொடர்ந்தும் தேசிய கலை இலக்கி யப் பேரவை ஏற்பாடு செய்யும் பெரும்பாலான நிகழ்வுகளில் இவரின் தரிசனம் கிடைக் கிறது. அருகில் இருந்து அளவளாவும் வாய்ப்பும் கிடைக்கிறது.

பரந்துபட்டளவில் அவர் தன்னுள்ளே கொண்டிருந்த வரலாற்றுத் தகவல்கள், அரும்பெரும் நிகழ்வுகளின் சாட்சி யக்கை- தகளையெல்லாம் கேட்கின்ற தருணத்தில் என் மனதிற்குள் இவர் மிகச் சாதரண- மாக உலவித்திரியும் பழைய பெரிய ஆளுமையாக இருக்கலாம். ஏதேதோ காரணங்களிற்காக அவற்றை கைவிட்டு விட்டு இப்படி எளிமையாக திரிந்துகொண்டிருக்கலாம் என்றும் எண்ணியி- ருக்கிறேன்.

குமாரதேவன் ஐயாவின் இயல்புகளில் எணைப்பாதித்தவை இவைகள்தான்எதிர்ப்படும் போதெல்லாம்இலகுவாய் புன்னகைத்துவி டுவார், சரியாய் நினைவு வைத்து திகதி, நாளை குறிப்பிட்டு அந்த கூட்டத்திற்கு காணவில்லை என்று விசாரித்து அன்று நடந்தவற்றையும் சுருக்கமாய் சிலாகித்து பேசிவிடுவார்.

தொடர்ந்து கலந்து கொள்ளும் இலக் கிய, ஈழத்து திரைப்பட திரை யிடல் சந்- திப்புக்களில் எல்லாம் கண்ணில் படும் வெள்ளைமுடி சொல்லும் குமார தேவன் ஐயா வந்திருக்கிறார் என்று. சாரமும் மேலிரண்டு பொத்தான்கள் பூட்டப்படாத சேட்டும் அணிந்து கொண்டு எளிமையாக இருப்பார். எந்தத் துறை சார்ந்து கலந்து ரையாடல் நிகழ்ந்தாலும் ஐயா வின் பங்களிப்பு அதிலிருக்கும். அத்தனை பெரிய பொக்கிஷம்.

இறுதியாய் ஜெரா அண்ணனின் 'நந்- திக்கடல் பேசுகிறது' வெளியீட்டில் சந்- தித்தேன். சுகம் விசாரித்துவிட்டு முதல் சந்திப்பில் தந்த புன்னகையோடு என்னை கடந்துசென்றவர். இனி சந்திக்கவாய்ப் பில்லை என்ற செய்தி பொய்யாக கூடா- தோ என்று ஏங்குகிறது மனம். இறைவன் சந்நிதியில் இளைப்பாறுங்கள் ஐயா.

# குமாரதேவன் அஞ்சலி

- இராகவன்

-அமிர்தம் ஏயெம்

வாசிப்பும் நயப்பும் விமர்சிப்பும் இவரது அன்றாடச் செயற்பாடுகளாயிருந்தன. அநேகமான இலக்கிய நிகழ்வுகளில் வழமையாகத் தென்படும் முகம் இவருடையதாயிருந்தது. இலக்கிய முனைப்புடைய இளம் தலைமுறையினருடன் ஆழ்ந்த நட்பும் நேசமும் கொண்டிருந்தார்.

தொலைபேசியில் அழைத்தால் உடனடியாகப் பதிலளிக்கும் நற்பண்பினைக் கொண்டிருந்தார்.

தனது உடல் நலன் குறித்து கவனமெடுக்காத தன்மையுடையவராக இருந்தார். சில நேரங்களில் சில சம்பவங்களை நினைவு கூர்ந்து கண்ணீர் விட்டழும் சமூக அக்கறையும் இவருக்கிருந்தது.

தனது மறைவின் போது உள்ளார்ந்து இரங்கித் துக்கித்து நினைந்தழக் கூடியவர்களை இவர்பெற்றிருந்தார். இறுதியாகக் கலந்து கொண்ட இலக்கிய நிகழ்விலேயே மரணத்தின் தூதுவனையும் சந்தித்திருந்தார்.

தீவிர வாசகராகவும், இலக்கியச் செயற்பாட்டாளராகவும் இருந்தவர். எந்தவொரு இலக்கியச் சந்திப்பிலும் நீண்ட பயணங்களை மேற்கொண்டு கலந்து கொண்டு, கலந்துரையாடல் களை உயிர்ப்பாக்குபவர். என்னையும் எனது எழுத்துக்களையும் கொண்டாடியவர். கடந்தவாரம் சி. ஜெயசங்கர், பா. அகிலன் எங்கள் வீடு வந்தபோது அவரைப் பற்றியும், அவரின் வல்லபங்கள் பற்றியும் உரையாடினோம். யாழ்ப்பாணம் செல்லும்போதெல்லாம் எப்படியாவது சந்தித்துவிடுவேன். கடைசியாக செப்ரம்பரில் கிளிநொச்சியில் இலக்கியச் சந்திப்பில் சந்தித்துக் கொண்டோம். ஒக்டோபரில் யாழ்ப்பாணம் சென்றபோது எனது அன்பைத் தெரிவிக்கக் காத்திருந்தேன். ஆனால் சந்திக்க முடியவில்லை. இனி சந்திக்கவும் முடியாது. காரைநகர், கோவளத்தைச் சேர்ந்த குமாரசாமி குமாரதேவன் (வயது 59), யாழ்ப்பாணத்தில் காலமானார். குணங்களால் ஆடம்பரமாக இருந்த எளிமையான மகா மனிதன். அவருக்கு ஆழ்ந்த அஞ்சலிகள்.

# அஞ்சலி

-கலையரசன்

யாழ்ப்பாணத்தை சேர்ந்த குமாரதேவன் காலமானார்என்ற அதிர்ச்சியான செய்தி கிடைத்துள்ளது. நான்மூன்று வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் சென்றிருந்த நேரமும் அவரைக் கண்டு உரையாடி இருக்கிறேன். சுகவீனமாக இருந்து, தனது 59 வது வயதில்திடீரென எங்களை விட்டுப் பிரிந்து சென்றுள்ளார் என்பதை நம்ப முடியாமல்உள்ளது.

யாழ் இலக்கிய வட்டங்களில் "குமாரதேவன் ஐயா" என இளைஞர்களால்அன்போடு அழைக்கப் பட்டவர். வயது வேறுபாடின்றி இளைஞர்களில் ஒருவரைப் போன்று கலந்து பழகக் கூடியவர். அதற்குக் காரணம் அவரது எளிமை என்றால் அது மிகையாகாது. எந்த நேரமும் ஒரு சாதாரண சட்டையும் வேட்டியுமாக ஒரு விவசாயிக்கோலத்தில்காட்சியளிப்பார். ஆனால் உரையாடலில் ஆழ்ந்த அறிவு வெளிப்படும். இலக்கியம், அரசியல், சமூகம் என்று எதிலும் ஆய்வு செய்யும் திறனுடையவர்.குமாரதேவன் பள்ளிப்படிப்புடன்கல்வியை நிறுத்திக்கொண்டவர். ஒரு தொழிலாளியாக இருந்தாலும்முழுநேர இலக்கிய ஆர்வலராக இருந்தவர். முதலாளிகளுக்கு அடிமைகளை உற்பத்தி செய்யும்கல்விச்சமூகத்தில்மேற்கொண்டு படிப்பதற்கு எதுவும்இல்லை என்று சொன்னாலும் அதில்தவறில்லை.

நான் முதல் தடவை நான் அவரை சந்தித்த நேரம், என் கண்களுக்கு அவர்ஒரு "பாட்டாளிவர்க்க அறிவுஜீவி" போன்று காட்சியளித்தார். உண்மையும் அது தான். யாழ்ப்பாணத்து பாட்டாளிவர்க்க இளைஞர்களுக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்தவர்.

சென்று வாருங்கள்குமாரதேவன்ஐயா! அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

# அஞ்சலி

-மதி சுதா

ஈழத்தின் பத்திரிகைப் பொக்கிசம் ஒன்று தன் பயணத்தை முடித்துக் கொண்டது.

78 ம் ஆண்டு 10 ம் மாதம் பத்திரிகை செய்தியில் முக்கிய இடம் பிடித்தது எது ஐயா? என்றால் கூடப் போதும் ஒவ்வொரு பத்திரிகையின் பெயரை யும் சொல்லி அடுக்கிக் கொண்டே போவார்,

ஆவணச் சேகரிப்பாளரில் பலருக்கு இவர் உதவி இல்லாமல் இருந்திருக்காது.

எல்லாவற்றையும் விட எனது நல்ல தொரு விமர்சகரும் ரசிகரும் ஆவார். எங்கு என் படம் போட்டாலும் குமாரதேவன் ஐயாவின் தலை, இறுதியில் பேசுவதற்காக காத்துக் கொண்டிருக்கும்.

இந்த ஆண்டு கிளிநொச்சியில் இடம் பெற்ற இலக்கியச் சந்திப்பில் அவர் ஒலிவாங்கி வைத்திருந்த கணங்கள் மிகப் பெரியது.

உங்கள் இழப்பு இளைய தலைமுறைக்கு ஒரு பேரிழப்பு ஐயா.

# அஞ்சலி

- இரகுவரன் பாலகிருஷ்ணன்

நண்பர் கு.குமாரதேவன் அவர்களை நாலைந்து வருடங்களுக்கு முன்னால்தான் எனக்குத்தெரியும். தொன்மயாத்திரை குழுவினரான கிரிசாந், யதார்த்தன்...... ஆகியோரின் நட்பெனும் வழியில் குமாரதேவன் அறிமுகமானார். பின்னர் பருத்-தித்துறையில் நடந்த இலக்கியக்கூட்டங்களிலும் இவர்களோடு வருகை தருவார். ஆடம்பரமற்ற எளிமையான தோற்றம் எவரையும் அவர்பால் கவனம் செலுத்தத் தூண்டும். இவர் சிறந்த வாசகன் என்றும் அறிந்து கொண்டேன். ஆனாலும் இவருடன் ஆறஅமரக் கதைக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அல்லது நான் சென்று இவருடன் கதைக்கவில்லை. இப்பொழுது இவருடன் கதைக்கமுடியா-மல், கதைக்காமல் இருந்துவிட்டேனே என்று வருந்துகிறேன். நண்ப குமாரதேவா! நான் உந்தன் முகமறிந்து கொண்டது போல நீயும் எந்தன் முகமறிந்திருப்பாய். என்னைப் பற்றியும் ஏதாவது நினைத்திருப்பாய். நான் உன்னுடன் கதைக்காமல் இருந்ததையிட்டு சிலவேளை வருந்தியும் இருப்பாய். நண்ப நானறிவேனா நீ இப்படி இடைநடுவில் எமைப் பதைக்கக்கவிட்டுப் போய்விடுவாய் என்று? உன்இழப்பை எண்ணி எண்ணி இன்று மனத்தால் மிகவாடி நிற்கிறேன். மன்னித்து விடு தேவனே.

உன் எளிமை இனிது
உன் மௌனம் இனிது
உன்தோள் துவாய்துண்டும் இனியது
வெற்றிலை விளையாடிய வாயும் இனியது
தொன்மயாத்திரைப் பதாகையைஏந்தியபடி
போட்டோவில் நிற்பதும் இனியது
நீ இறந்தபோது என்முகநூலெல்லாம்
உன்னைப்பற்றிய ஏராளமானோரின் பதிவுகள்-
என்னை வியக்கவைத்தன.
இத்தனை பெரியோனா நீ
இத்தனை பேரின் அன்பனா நீ?
நீ என்றென்றும் நண்பர்
எம் மனதில்வாழ்வாய்
பேசப்படுவாய்
உன்கீர்த்தி என்றென்றும் நிலைக்கும்.

# குமாரதேவனின் எழுத்துக்கள்

*(புதிய சொல் இதழிலிருந்து)*

# நடந்து முடிந்த 3 ஆவது யாழ் சர்வதேச சினிமாத் திருவிழா சம்பந்தமான சில குறிப்புக்கள்

- குமாரதேவன்

விழா ஆரம்பிக்க முன்னரே ஏராளமான விமர்சனங்கள் வந்தபோதிலும் நாங்கள் சற்று பொறுமை காத்திருந்தோம். இந்த விமர்சனங்கள் முதலாம் இரண்டாம் திரைப்பட விழா காலத்திலிருந்தே திகதி, விழா விருதுகள் மற்றும் ஒழுங்கமைப்பு தொடர்பான சர்ச்சைகள் தொடங்கியிருந்தன. ஆனாலும் முதல் இரண்டு விழாக்களிலும் இந்த ஆட்சேபனைகளுக்கு மத்தியிலும் உள்ளூர் திரைப்பட ரசனையாளர்கள் இந்த விழாவிற்கு ஆதரவினை வழங்கியிருந்தனர்.

முதலிரண்டு விழாக்களிலும் வைக்கப் பட்ட விமர்சனங்கள் சீர்செய்யப்படாத நிலையில் அது மூன்றாம் விழாவில் உச்ச-கட்டத்தை அடைந்திருந்தது. உண்மையில் Agenda 14, Mrs Anoma Rajakaruna குழுவினர் யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறையினருடன் இணைந்து திட்டமிட்டிருந்தனர். அவற்றிற்கு வேறு அனுசர-னையாளர்களும் தனிபநபர்களும் ஒத்துழைப்பை வழங்கி யிருந்தனர். இவற்றில் யாழ் திரைப்பட செயற்ப்பாட்டளர்கள் முக்கிய-மானவர்கள். இவர்கள் விழாக் குழுவிலும் இடம்பெற் றிருந்தனர். இம்முறை மேற்குறித்து செயற்ப்பாட்டளர்களின் ஒத்துழைப்பை பெறத் தவறிவிட்டனர்.

யாழ்ப்பாண மனநிலை அரசியல் தொடக்கம் ஏனைய எல்லாத்துறைக-ளிலும் கொழும்பே தீர்மானிக்கிறது என்ற அதிருப்தியுடன் இருந்தது. இந்த அதிருப்தி நிலையினை விழாக் குழுவினரும் அவர்களை உள்ளூர் செயற்பாட்டாளர்களை சரிவரப் புரிந்து கொள்ளத் தவறி விட்டனர். இவற்றின் விளைவாக முதலிரண்டு விழாக்களிலும் காணப்பட்ட ஆர்வ எழுச்சி இம்முறை குறைவடைந்தது.

இனிவருங் காலங்களில் இத்தகைய விழாக்கள் சிறப்புறுவதற்கும் அதன் உண்மையான நோக்கங்களை முழு மையாக அடைவதற்கும் சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

ஏற்கனவே உள்ள உள்ளூர் செயற் பாட்டாளர்களுடன் திரைப்பட ரசனை சார்ந்த மற்றும் சமூகம் சார்ந்த ஒரு காத்-திரமான குழுவின் செயற்பாடு அவசியம். இக் குழுவானது விழாத் திகதி தொடக்கம், திரைப்பட தேர்வுகள், விருதுகள் வரை சிபா ரிசுகளை அளிக்ககூடிய அதிகாரம் கொண் டதாக இருக்க வேண்டும். வெறுமனவே விழாவை நடத்தினோம் திரைப்படங்களை திரையிட்டோம் என்றில்லாமல் நல்ல திரைப்பட ரசனையை வளர்ப்பதற்கும் குறும்படம் உட்பட தயார்ப்பாளர்களை ஊக்குவிக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். இந்த யோசனைகள் இவ்விழாவை தொடங்கி நடத்துபவர்களுக்கும் அவர்க-ளுடைய உள்ளூர் அனுசனையாளர்களுக்கும் இந்த திரைப்பட விழாவினை தொடர்ந்து அனுபவித்து வருபவன் என்ற முறையில் முன்வைக்க விரும்புகிறேன். மிகுந்த பி-ரயத் தனத்துடன் நடக்கும் இவ்விழா அதி காரங்களை ரசனையாளர்களுடன் பகிர்வ-தினூடாக வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

# தொன்ம யாத்திரை

ஒரு குறிப்பு

யாத்திரை எனும் சொல் ஆன்மீகத்தலங்களுக்கான பயணங்களைக்குறிப்பிடினும் அச்சொல்லின் அர்த்தம் நடைமுறையில் பல அர்த்தங்களில் பயன்பட்டு வருவது குறிப்பிடத்தகது , அந்த வகையில் யாத்திரை எனும் சொல் ,ஒரு இலக்கை நோக்கிய பயணமாகக் கொள்ளலாம், கடந்த நூற்றாண்டில் மாவோ சேதுங் தலைமையில் சீனக்கம்யூனி சக்கட்சி நடாத் திய பெரும்பயணம் (long march) முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் குறிப்பிடுவர் இலங்கையில் **1956** ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா தலைமையில் ஆட்சிக்கு வந்த மக்கள் ஐக்கிய முன்னனி அரசு தனிச்சிங்கள மொழியை நாடு முழுவதற்கும் ஆட்சி மொழியாக்கியது இதற்கு எதிராக தமிழ் பேசும் மக்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி செல்வ நாயகம் அவர்கள் தலைமையில் இலங்கை தமிழரசுக்கட்சி திருமலை யாத்திரை அப்போது பிரபலமாக அறியப்பட்ட ஒரு இயக்கத்தை நடத்தியது , வடக்குக் கிழக்கு எங்கனும் இருந்து தொண்டர்கள் திருகோணமலையில் திரண்டனர், தமிழ் பேசும் மக்களின் இந்த எழுச்சியை அடுத்து பிரதமர் பண்டாரநாயக்கா தமிழரசுக்கட்சியை பேச்சுவார்த்தைக்கு அழைத்து , பண்டா - செல்வா எனும் பிரபலமடைந்த ஒப்பந்தத்தை உருவாக்கினார்.

கதிர்காம யாத்திரையும் ஆன்மீக ரீதியில் நீண்ட காலம் தொடங்கி தற்போதும் நடைபெற்றுவரும் ஒன்றாகும் வடக்கில் தொடங்கி முல்லைத்தீவு - திருகோணமலை - மட்டக்களப்பு - உகந்தை போன்ற தமிழ்ப்பிரதேசங்களின் காடுகளை ஊடறுத்துச்சென்று கதிர்காம ஆலயத்தில் இந்த யாத்திரை நிறைவு பெறும் அந்த வகையில் தொன்ம யாத்திரை ,செயல் திட்டமானது அதன் பெயருக்கேற்ப தொன்மையான இடங்களுக்கு விஜயம் செய்வதுடன் அத்தகைய இடங்களில் வசிப்போருக்கும் , ஏனைய பிரதேச மக்களுக்கும் , அவை பற்றித் தெரியப் படுத்தி அவற்றினைப்பாதுகாக்க வேண்டிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டக்குழுவில் விதை குழுமம், அக்கினிச்சிறகுகள் , ஜப்னா டு டே ஆகிய அமைப்புகள் அமைகின்றன ,

இந்த திட்டத்தில் முதலாவதாக பருத் தித்துறையில் உள்ள தெருமூடிமடம் கவனம் பெற்றது , யாத்திரை என்ப-தன் பாதையில் மடம் எனப்படுவது முக்கியத்துவம் மிக்கது ,யாத்திரையில் ஈடுபடுபவர்கள் தங்கி இளைப்பாறவும் வெயில் மழை போன்ற காலநிலை சார்ந்த பாதிப்புகளில் இருந்து தங்களைப்பாது காக் கவும் மடங்கள் உதவுகின்றன, மடங்கள் அனேகமாக உணவு சமைத்து பரிமாறக் கூடிய கூடங்களையும் கேணி கிணறு போன்ற நீர் வசதிகளைக் கொண்டன வாகவும் கோவில் போன்ற வழிபாட்டு இடங்களை அருகாகக் கொண்டும் அமையப்பெற்றிருந்தன . இயற்கையா-கவும் கவனிப்பாரின்றியும் வீதியமைப் பின் போதும் அழிந்தவை போக சில மடங்களே தற்போது குடாநாட்டில் எஞ்சியுள்ளன , யாழ்ப்பாணக்குடா நாட்டின் மரபுரிமையாக மிஞ்சி நிற்கும் இத்தகைய மடங்கள் பேணிப்பாதுக்காக்க வேண்டிய அரும் பொருளாகும்

இத்தொன்ம யாத்திரைத்த்திட்டத்-தில் இரண்டாவதாக கவனம் பெற்றது சரசாலையில் அமைந்துள்ள குருவிக் காடென அழைக்கப்படும் பிரதேசமாகும் தென்மராட்சியில் மட்டுவில் பகுதியில் இருந்து வடமராட்சி செல்லும் திசையில் சரசாலையில் மிக விலாசமான பிரதே சத்தில் சதுப்பு நிலங்களையும் கண்டல் தாவரங்களையும் கொண்டமைந்து பூமிக்குப்போர்வையாக விளங்கும் குருவிக்காடுப் பிரதேசம் பாதுகாக்கப் படவேண்டிய இயற்கை வளமாகும்.

மேற்படி திட்டத்தில் மூன்றாவதாக இடம்பெற்ற நெடுந்தீவு யாத்திரை மிகவும் முக்கியத்துவம் , பிரயோசனம் உள்ளதாக அமைந்தது .

யாழ் பஸ்நிலையத்தில் இருந்து காலை யில் குறிகட்டுவான் துறைக்குச்செல்லும் பஸ்வண்டியில் பிரயாணம்செய்து நயினாதீவு நெடுந்தீவென படகுக்காக இரு பிரிவாக குறிகட்டுவான் துறையில் காத்து நிற்கை யில் நாகபூசணி அம்மனிடம் செல்லும் இந்துக்களாலும் நாகவிகாரைப்புத்தரிடம் செல்லும் பௌத்தர்களாலும் நயினா-தீவு செல்லும் வரிசை , பல பிரிவுகளாக நிறைந்து வழிந்தது நீள் நெடு நகரென நெடுந்தீவு செல்பவர்கள் அத்தீவுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்பு பட்ட-வர்களும் சில சுற்றுலாப்பிரயாண ஆர்-வலர்களும் மட்டுமே.

நெடுந்தீவினை நாம் சென்ற படகு அண்மிக்க மாவிலித்துறையில் எம்மை வரவேற்றது அநுராதபுரத்தை ஆண்ட வசப மன்னனின் பெயரினைத்தாங் கிய கடற்படையினரின் மிகப்பெரிய கட்டிடமாகும் , அங்கு இறங்கிய பின் முதலில் பெருக்கு மரம் உள்ள இடத்தை நோக்கி சென்றோம் . அந்த ஒழுங் கற்ற கரடுமுரடான நீண்ட பாதையில் மக்கள் எவரையுமோ குறைந்தபட்சம் கால்நடைகள் ஒன்றைகூட காணவில்லை, ஒரு சில குடிமனைகள் இருந்த அடை யாளங்கள் காணப்பட்டன. அழிந்து போன வடுக்கள் வேலிகள் , மற்றும் தேவைக்கு தோண்டி எஞ்சிய கற்களென அப்பிரேதேசம் முழுவதும் விதைத்தது போன்று கற்கள் காணப்பட்டன , பூமியில் பரந்து நிறைந்துள்ள கற்களி-னால் மாரி காலங்களில் இயற்கையாக வளர்க்கூடிய புற்களோ மற்றும் எதுவித

தாவரங்களோ வளர்ச்சி யில்லாமல் நிலம் காணப்படுகின்றது. இதனால் கால்நடைகள், நடமாட்டமும் இல்லாமல் உள்ளது. பெருக்கு மரமுள்ள பகுதி சிறிது நம்பிக்கையளித்தது. அப்பகுதி நிலம் வரை யறுக்கப்பட்டு கல் வேலி என அழைக்கப் படும், கல்வேலி மிக ஒழுங்காக சிற்பம் வடித்ததைப் போன்று அமைக்கப்பட்டு பூரணப்படுத்தாமல் காணப்பட்டது. பின்னர் வந்த தகவலின் படி மாகாண சபையினால் தொடங்கப்பட்ட அத்-திட்டம் பூரணப்படுத்தப்பட்டது. சூரிய மின்கலம் நிறுவப்பெற்று மின்னொளியும் அளிக்கப்பட்டுள்ளது. சுற்று வட்ட நடை பாதை முதலானவையும் இவற்றுள் அடக்கம். மாகாண அமைச்சர் ஐங்கர நேசனால் முன்னெடுக்கப்பட்ட இத்-திட்டம், மேலும் முன்னெடுக்கப்பட்டு அப்பிரதேசம் எங்கும் காணப்படும் கற்களைச்சேகரித்து ஒரு முகப்படுத்தி, தாவர வளார்ச்சிக்கு இடமளிக்கப் படவேண்டும், மாவலித்துறைப்பகுதி யில் இருந்து பெருக்கு மரமுள்ள பகுதிக் குச்செல்ல செப்பமான வீதியொன்று பகுதி பகுதியாகவேனும் அமைப்ப-தற்கு நிதிகள்செலவிடப்படவேண்டும். நெடுந்தீவின் முக்கிய அடையாளம் அங்கு காணப்படும் குதிரையினமாகும். இலங்கையில் வேறெங்கும் காணப்ப டாத அரியவிலங்கு, இனமான குதிரை பாதுக்கக்கப்படவேண்டிய தீவிலிருந்து எவராலும் எடுத்துச்செல்லப்பட தடைவி-திக்கப்பட்டதாகும், ஆனாலும் அண்மைய வருடங்களில் அதிகார த் தரப்பினரால் இக்குதிரைகள் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு நட்சத்திர விடுதிகளில் சுற்றுலாப்பிரயாணிகளைக் கவரும் காட்சிப்பொருளாகப் பயன்படுத் தப்படுவதாக சொல்லப்படுகின்றது. இக்கட்டுரை எழுதப்படும் போது யாழ் தினக்குரல் பத்திரிகையில் பிரசுரமான ஒரு செய்திக்கருத்தினை உறுதி செய்கி றது. 28.09.2016 யாழ் தினக்குரல் பத்-திரிக்கையில் பிரசுராமான செய்தியை முழுவதுமாகப் பார்க்கலாம்.

நெடுந்தீவின் மரபுரிமைச்சொத்தாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள் குதிரைகள் சட்ட விரோதமாக அங்கிருந்து கடத் தப்பட்டு, காங்கேசன் துறைப்படை முகாம் களில் வைக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. பாதுகாக்கப் பட்ட மரபுரிமைச்சொத்தாக தேசிய மரபுரிமைத்திணைக்களத்தால் பிர-கடனப்படுத்தப்பட்டுள்ள இக்குதிரை களை வேறு இடங்களுக்கு கொண்டு செல்வது, சட்ட விரோதமாகும். இந்நிலையில் இவை கடத்தப்பட்டு, காங்கேசன் துறை படை முகாம்களில் வைக்கப்பட்டுள்ளமை ஆதாரங்களுடன் அம்பலமாகியுள்ளது. காங்கேசன் துறை படை முகாமில் உள்ள குதிரைகளில் காணப்படும் குறிகள் நெடுந்தீவில் குதிரை வளர்ப்போரால் பரம்பரை பரம்பரையாக பேணப்பட்டு வரும் குறிகள் எனவும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆராய்ந்த பொழுது நெடுந்தீவு மேற்குப் பகுதியில் உள்ள ஒருவரால் பாராமரிக் கப்பட்டு வந்த குதிரைகள் சிலவும் இவற்றில் அடங்கியுள்ளமையும் தெரிய வந்தது. இவரது குதிரையில் இடது காலில் மேல் நோக்கிய சூலக்குறியீடு உள்ளது கடந்து ஐம்பது வருடங்களுக்கு மேலாக இந்தக்குறியீட்டைப் பேணி வருவதாக

அக்குதிரைகளைப் பராமரித்து வந்த நபர் தெரிவித்தார்

(நன்றி - யாழ் தினக்குரல் *28.9.2016* )

இன்னுமொரு பத்திரிகை செய்தியின் பிரகாரம் இவ்வாறு கொண்டுவரப்பட்ட குதிரைகளில் சில வலிகாமம் வடக்கில் மக்கள் மீள் குடியேறிய இடங்களில் கட்டாக்காலிகளாக நடமாடித்திரிவதாகத் தெரிய வருகிறது. நடைபெறு கின்றமையை பார்க்கின்ற போது தொன்ம மாக இன்று இருகக்கூடிய விடயங்களே மீண்டும் பேசு பொருளாக மாறி விடக்கூடியதாகி வருகின்றது.

யாத்திரை ஒரு வகையில் சுற்றுலாவுக்குரிய அம்சங்களையும் கொண்டதாகும், தொன்ம யாத்திரை புராதன இடங்களை அடையாளப்படுத்துவதுடன் புதிய இடங்களைத் தரிசித்து அந்த இடங்களில் இயற்கையை அனுபவிப்பதுமாகும். யாழ் குடாநாட்டு மக்களுக்கு 1983ஆம் ஆண்டுக்கு முந்தய காலப்பகுதியில் கொழும்பு மற்றும் கதிர்காமத்துடன் தெகிவளை மிருகக்காட்சிச்சாலையும் விடுமுறைக்காலங்களில் தரிசிக்கும் புதிய இடங்களாக விளங்கின. கொழும்புக்கு ஒரு போதும் செல்லாதவர்களை கொழும்பு என்ன நிறம் எண்டு தெரியுமோ எண்டு கேலி பண்ணுவது பெருமிதமாக இருந்தது , பாடல் பெற்ற தலங்களான திருக்கேதீச்சரம் கோயிலும் சுனையும் கடலும் சூழ்ந்த திருக்கோணேச்சரம் என்பன கூட யாழ் மக்களுக்கு ஈர்க்கப்படாத இடங்களாக இருந்தன , மட்டக்களப்பும் கொழும்பை விட எம்மக்களுக்குத் தூரமாக இருந்தது. கதிர்காமக் கந்தனும் கதறகம தெய்யோ ஆகி விலகி நிற்பதாய் ஒரு உணர்வு , மிருகங்களை வனங்களிலும் காட்சிச்சாலைகளிலும் கண்டு கழித்த காலம் , தற்போது வேலை மினக்கெட்டவனின் வேலையாகி விட்டது , மிருகங்கள் தொலைககாட்சி சனலில் ஊடாக எங்களைத்தேடி வந்து பார்க்க தொடங்கி விட்டன, என்ன கன நாளாக அந்தப்பக்கம் காணேல்ல என , அவை எங்களிடம் குசலம் விசாரிப்பது போல் கற்பனை உண்டாக்குகின்றது .

எங்களது வாழ்க்கை முறை , ஓடியோடித் திரவியம் தேடி ஓயாத நோயால் கழிப்பதாகிறது . இந்த லட்சணத்தில் கடலில் சற்றுத்தொலைவில் உள்ள நெடுந்தீவு என்பது குடாநாட்டு மக்களுக்கு நினைத்துப்பார்க்கவே தேவையில்லாத ஒன்றாகவுள்ளது. தொன்மையுடன் பிரிக்க முடியாதவாறு இயற்கையும் இணைதல் மூலம் சுற்றுச்சூழல் மேம்படைகிறது. மாரி காலத்தில் உருவாகும் வழுக்கையாறு என வர்ணிக்கப்பட்ட ஆறு முன்னைய அதிக மழைவீழ்ச்சி கிடைத்த காலங்களில் அளவெட்டி அளுக்கை பகுதியில் உருவாகி நவாலி ஊடாக , கல்லுண்டாய் வெளிக்கு அண்மையில் அராலிப்பகுதியில் கடலில் கடக்கும் அதனது நீரேந்து பரப்பில் அதிக நெல் விளைச்சல் மற்றும் விவசாயம் அதனுடன் இணைந்த நீர் வளம் என்பவற்றை அள்ளி வழங்கும் கந்தரோடை புராதன நகரத்தின் உருவாக்கத்தில் வழுக்கையாறு முக்கிய பங்கு வகித்தது , மாரி காலத்தில் உருவாகும் நீரினை கேணி கிணறு ஆகியவற்றில் பேணி அதனுடன் இணைந்த மடங்கள் சுமைதாங்கி ஆவுரஞ்சிக்கல் மக்களும்

கால் நடைகளும் பயன் பெற்றனர் . இந்தப்பகுதியில் யாழ் காரைநகர் 786 பேரூந்து மார்க்கத்தில் காணப்படும் வீதியில் நவாலிப்பகுதியில் களையோடை அம்மன் கோவிலென அலங்கார வளைவு ஒன்று காணப்படும் அதனூடாகச் செல்ல பெரும் பொக்கிசமென தொன்மமும் இயற்கையும் கொட்டிக்கிடக்கின்றது , பிட்டியம்மன் வழங்கப்பெறும் குன்றில் காணப்படும் வழிபாட்டிடத்தில் நடாத் தப்பெறும் பூசையுடன் ஆரம்பமாகி பிரதான கோவிலில் திருவிழாக்கள் இடம்பெறும் . அங்கு காணப்படும் அம்மன் கடவுள் , கண்ணகியென அப்ப-குதி மக்களால் வழிபடப்படுகிறது . மதுரையைத் தீயிட்ட கண்ணகி திரும்பி வரும் பொழுது அந்த வழியால் பயணம் செய்ததாகவும் தாகசாந்திக்காக இயற் கையாக கிணறொன்றை உருவாக்கியதா-கவும் நம்பப்படுகின்றது , அந்தக்கிணறு அதேவடிவில் தற்போதும் காணப்படுகி-றது. இயற்கையாக சிறியதாக தற்போதும் நீருடன் பார்ப்போரைக்கவரும் விதத்தில் காணப்படும் கிணறு அந்தப்பகுதிக்குப் பெருமை சேர்க்கிறது. மதுரையை எரித்து மீண்ட கண்ணகி நீரருந்தித் தாகம் அடங்கியது போல தற்போதும் அங்கு செல்பவர்களை குளிர்மையடைச்செய்யும் சோலையாகவும் தண்மையாகவும் அந்-தப்பிரதேசம் விளங்குகிறது.

தொன்மை என்பதில் அழிவடைந்த கட்டுமானங்களின் எச்சங்கள் எஞ்சி யுள்ள கட்டடங்கள் என்பன , எமது இனத்தின் வரலாற்றைக்கூற வல்லமை படைத்தவை , எமது பண்டைய நாகரி-கத்தை பறைசாற்றுவன , இதை எழுதும் இத்தருணாத்தில் யாழ் பல்கலைக்கழக தொல்லியல் துறையினர் ,மன்னாரில் ஆய்வு செய்து பெற்றுக்கொண்ட நகர மற்றும் வழிபாட்டு இடங்களின் கண்டு பிடிப்புகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப் பட்டு அவை பேணப்பட வேண்டும் .

தற்போது திருக்கேதீச்சரம் நயினாதீவு மற்றும் குடாநாட்டில் உள்ள பிரதான கோவில்கள் தரிசனங்களுக்கு உரிய இடங்களாக விளங்குகின்றன .

# ஐந்தாவது யாழ் சர்வதேச திரைப்பட விழா பற்றிய குறிப்பு

முதலாவது திரைப்பட விழாவிலிருந்து இவ்விழாவைப் பார்வையிட்டு வருகிறவன் என்கிறமுறையில், ஆரம்பத்திலிருந்த சோடனைகள், அலங்காரங்கள், விளம்பரங்கள் வரவரக் குறைந்து செல்வது போன்ற தோற்றப்பாட்டினை அவதானிக்க முடிகிறது. என்ன காரணங்களால் என்று தெரியவில்லை. உள்ளூர்ப் பத்திரிகைகள் தொடக்கம் விழா தொடர்பான எந்தச்செய்திகளும் முதல்நாள்வரை எங்களைப்போன்ற தீவிரமான இரசிகர்கள், நண்பர்களூடாக அறிந்து கொள்பவர்கள் தவிர பொதுவெளிக்குத் தகவல்கள் சென்று சேரவில்லை. விழா நிகழ்ந்து முடியும் வரைகூட தங்களுக்கு விபரங்கள் அறிய முடியவில்லை என்று சொல்லக்கூடியவர்களையும் காணக்கூடியதாகவிருந்தது.

சமூகவலைத்தளங்களில் விவரங்கள் பிரசுரிக்கப்பட்டு இருக்கின்றது, ஆனால் விழா ஏற்பாட்டாளர்கள் ஒன்றைக்கவனிக்கத் தவறியிருக்கிறார்கள், அச்சு ஊடகங்கள் என்பவை இன்னமும் வலிமையானவை., திரைப்படங்களை இளைஞர்கள் தவிர்ந்த நடுத்தரவயதினர், சமூக வலைத்தள தொடர்பற்றவர்கள் அச்சு ஊடகங்கள் மூலமாகவே விபரங்களை அறிகின்றனர். அவர்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். நான் திரைப்பட விழாவின் ஆரம்பம் தொட்டே விழாவினை ஆதரித்து வருபவன். இவ் விழா சர்வதேசத்துடன் யாழ்ப்பாண நகரத்தை இணைக்கும் ஒரு சிறந்த நிகழ்வு. ஆரம்பத்திலிருந்தே பல்வேறு குறைபாடுகள் இருந்தன. நாட்களைத் தீர்மானிப்பதிலிருந்து, ஆரம்பத்தில் தீவிரமாக ஒத்துழைத்தவர்கள் பின்னர் பின்வாங்கத்தொடங்கியமை உட்பட பல்வேறு விடயங்களை அவதானிக்க முடிந்தது.

நுண்கலைத்துறை ஒன்றுதான் யாழ். பல்கலைக்கழகம் சார்ந்து தொடர்ந்து செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. அவர்களையும் குறை சொல்ல முடியாது. தொழில்முறை என்பதைத்தாண்டி அவர்கள் எவ்வளவு தூரம் தீவிரமாகப் பங்கேற்க முடியும்? இது அவர்களைப் பொறுத்தவரையில் ஒரு வெளிக்கள வேலை போன்றது. அவர்களுடைய வளங்களும் சேவைகளும் கூட மட்டுப்பட்டது.

ஒருங்கிணைப்பாளர் என்றவகையில் அனோமாவைப் பாராட்ட வேண்டும். ஓர் இளம் பெண்ணைப்போல சுறுசுறுப்பா-

கவும் ஓடித்திரிந்தும் தற்துணிவுடனும் நிகழ்வுகளை ஒருங்கிணைத்ததைக் காணக்கிடைத்தது.

விழாவிற்கு எதிராகச் சொல்லப்படுகின்ற காரணங்கள் பலமானவை அல்ல. உதாரணத்திற்கு சர்வதேசத் திரைப்பட விழாவில் வந்து, பாலியல் அம்சங்கள் கொண்ட திரைப்படங்களுக்கு ஆட்சேபனை தெரிவிக்கின்றார்கள். எங்களுடைய நாட்டுக்கலாசாரத்தினை மட்டும் அறிவதற்கானதில்லை சர்வதேசத் திரைப்படவிழா. பல்வேறு நாடுகளின் கலாசாரத்தையும் உள்வாங்கிச் செல்லவேண்டும் என்பது முக்கியமானது. சர்வதேச திரைப்படங்களைப் பார்க்கின்ற மூத்தவர்களாக இருப்பவர்களும் இப்படியான கருத்துக்களைச் சொல்வது தெரிவுகளைக் கட்டிப்போடுகின்ற வேலையாக இருக்கின்றது.

அதேநேரம் இம்முறையுள்ள முக்கியமான குறைபாடு இந்தியத் திரைப்படங்கள் குறைவு என்பது. என்னதான் சொன்னாலும் நடுத்தர வயது யாழ்ப்பாணப் பார்வையாளர்களின் ஆங்கில மொழியறிவு போதியதில்லை. எனக்குக்கூட அப்படித்தான். உபதலைப்புகளின் ஊடாக எவ்வாறு கதையை விளங்கிக் கொள்ளலாம் என்கின்ற பிரச்சினையும் இருக்கிறது. இந்தியப்படங்கள் எமது கலாசாரத்திற்கு மிக நெருக்கமானதாக இருப்பதனால், மலையாளப்படங்களும், வங்காளப்படங்களும் கூட மொழி தெரியாவிட்டாலும் கூட கலாசாரத்தினால் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றன. எழுபது திரைப்படங்கள் இம்முறை காண்பிக்கப்பட்டிருக்கின்றன, குறைந்தபட்சம் பத்துப் படங்களாவது இந்தியப்படங்கள் இருந்திருக்கலாம். ஏற்கனவே திரையிடப்பட்டிருக்கும் நல்ல தமிழ்ப்படங்களைக்கூட மீளத்திரையிடுவதில் அக்கறைகாட்டியிருக்கலாம். மேற்குத்தொடர்ச்சிமலை, Tolet ஆகிய திரைப்படங்களைக்கூட நாங்கள் இன்னும் திரையில் காணவில்லை. மக்களை விழாவுடன் இணைக்கும் வரை இம்மாதிரியான திரைப்படங்களைக் காண்பிப்பதை ஒர் உத்தியாகக் கூடக் கையாளலாம்.

உலகம் முழுவதிலும் இதேவகையான பிரச்சினைகள் இருக்கின்றன. அதேநேரம் எங்கள் மக்களும் விழாவைப் பரவலாக்குவதை யாரும் செய்வார்கள் என்று விட்டு விட்டு குறைகண்டுபிடிப்பதில் முதலிடம் வாங்குபவர்கள். ஒன்றுமே செய்ய மாட்டார்கள் ஆனால் எப்படியாவது இதை நிறுத்திவிட்டுத்தான் அடுத்தவேலை பார்க்கப்போவார்கள். ஆகவே, இவர்கள் சொல்லும் குறைகளை நான் நம்பவில்லை. ஐந்து வருடங்களாக நான் அவதானித்த வரையில் அனோமா அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவே தெரிகின்றது

என்னுடைய கணிப்பீட்டின் அடிப்படையில் இம்முறை ஏராளமான மோசமான படங்கள் திரையிடத்தெரிவுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. சில நல்ல படங்களும் வந்திருக்கின்றன. அதிலும் குறிப்பாக போட்டியில் தேர்வு செய்யப்பட்ட மூன்றில் இரண்டு படங்கள் ஈழத்தமிழரால் எடுக்கப்பட்ட படங்கள். நிசப்த நடனம், மௌன காண்டம் ஆகிய திரைப்படங்கள் தெரிவு செய்யப்பட்டமை மகிழ்ச்சிக்குரியது.

அவை போட்டியில் தேர்வு செய்யப்பட்டதும் மகிழ்ச்சிக்குரியது.

கதைப்படங்களை விளங்கிக்கொள்வது மிகவும் சிரமமானதாக இருக்கின்றது. கதைப்படங்களைக் குறைத்து காண்பியத்தின் ஊடாக நகரும் படங்களை அதிகமாகத் தேர்வு செய்வது நல்லது.

இம்முறை திரைப்பட விழாவில் பலரையும் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. உதாரணமாக எனக்கு மொழிப்பிரச்சினை இருந்தாலும் கூட, திரைப்பட இயக்குனர் பிரசன்னவிதானகே மிக எளிமையாகப் பழகினார். அவரை ஒரு பிறவிக்கலைஞன் என்றுதான் சொல்ல வேண்டும். சிங்கள சினிமாவைப்பார்க்கும் போது அதில் உயர்ந்த இடத்தில் இருக்கும் ஒருவர் பிரசன்ன. அவருடைய “முழுநிலவில் ஒரு மரணம்” என்ற திரைப்படத்தைப்பற்றி பலதடவை கேள்விப்பட்டாலும் இம்முறையே பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. குறிப்பாக அந்தப் படத்தில் நடித்திருக்கும் ஜோ அபய விக்கிரம என்ற கண் தெரியாத தகப்பனின் பாத்திரத்தில் நடித்திருப்பவரைப் பற்றி, பெரும் நடிகரென இளம் வயதிலேயே கேள்விப்பட்டிருக்கிறேன். அவருடைய நடிப்புத்திறனை பார்க்கும் வாய்ப்பை இத்திரைப்படம் வழங்கியது. உண்மையிலேயே இத்திரைப்படம் காட்சியின் ஊடாக அற்புதமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அனேகமான ஏனைய நெறியாளர்களுடன் ஒப்பிடும் போது பிரசன்ன விதானகேவைப் பலரும் பாராட்டியதை அவதானிக்க முடிந்தது. பலருட அவர் உரையாடியிருந்தார். திரைப்பட விழாவில் பயிற்சி வகுப்புக் களையும் நடத்தியிருக்கிறார். இதுவும் விழாவின் ஒரு வெற்றி.

இறுதித்திரைப்படமாக காண்பிக்கப் பட்ட விசாகேச சந்திரசேகரத்தின் "பாங்சு" என்ற திரைப்படம் நல்லதொரு படம். ஆனால் அவர் கருத்துப்பரிமாற்றத்தின் போது பூனையை பாக்கிற்குள் இருந்து எடுத்துவிடுவதைப்போன்ற பல கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். குறிப்பாக மன்னிப்பைப்பற்றி அவர் குறிப்பிடும் பொழுது, அதனை ஏற்றுக் கொள்ள முடியும் ஏனென்றால் ஒவ்வொரு மனிதரும் அன்றாடம் செய்யும் குற்றங்களை, பிழைகளை மன்னிக்காமல் வாழமுடியாது. சாதாரணமாக நண்பர்கள் தொடக்கம் குடும்பத்தினர், கணவன் மனைவி வரை எல்லோருமே ஒருவரையொருவர் மன்னித்தே வாழ்க்கை போகின்றது. அதே போல் இனங்களுக்கு இடையில் மன்னிப்பு என்பது பெரிய பிரச்சினையில்லை. ஆனால் அடிப்படையான பிரச்சினை, விடுதலைப்புலிகள் சகாக்களைக்கொன்றார்கள் என்று கிளிப்பிள்ளை சொல்வது போல் சொல்கிறார். அவர்களுக்கு முன்பே இலங்கையில் இருப்பது நூறாண்டு காலப்பிரச்சினை. இந்த அடிப்படைகளை விளங்கிக் கொள்ளாமல் புலிகள் சகாக்களைக் கொன்றார்கள். அதற்கு இது சமன் என்று கணக்கை முடிக்க முடியாது.

இவர் கதையாக்கி இருக்கும் நிகழ்வுகள் முப்பது வருடத்திற்கு முந்தையது. அது முடிந்து சிங்களமக்களிடம் ஒரு புதிய சந்ததி உருவாகி விட்டது. ஆனால் எங்களுடைய மக்கள் இன்னமும் பிரச்சினைகளோடே இருக்கின்றனர். திரைப்படம் என்ற வகையில் அவர் சொல்லியி-

ருப்பவற்றை நான் ஏற்றுக்கொள்கிறேன். நல்ல காட்சிப்படுத்தல்களின் ஊடாக பெண்மை, தாய்மை போன்றவற்றை அவர் படமாக்கியிருக்கிறார். அதற்கு வெளியே அவர் சொல்லும் கருத்துக்கள்தான் சர்சைகளை ஏற்படுத்துகின்றது.

கடந்தகாலத்திலும் புதிய சொல் இதழில் என்னுடைய கருத்துக்களை விரிவாகச்சொல்லியிருக்கிறேன். உள்ளூர் ஆலோசனைக்குழு ஒன்றின் தேவை விழாவிற்கு வலுவாகத் தேவைப்படுகின்றது. எங்களுடைய அடிப்படையான பிரச்சினையே கொழும்புதான் எல்லாவற்றையும் தீர்மானிக்கின்றது என்பதே. திரைப்படத் தெரிவுகளையும் கொழும்புதான் தீர்மானிக்கின்றது எனும் பொழுது இம்முரண்பாடுகள் எழும். ஏற்கா விட்டாலும் கூட உள்ளூர் சினிமா இரசிகர்களின் கருத்துக்களைச் செவிமடுப்பதும், பொறுமையுடன் அவற்றைக் கேட்பதும் முக்கியமானது. உதாரணமாக அ.யேசுராசா, கேதாரநாதன் போன்றோரைக் குறிப்பிடலாம். பல்வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெறுவது போன்றதுதான் இதுவும்.

நேர அட்டவணையை வெளியிடுவதில் குறைந்த பட்சம் இரண்டு வாரத்திற்கு முதலாவது தினசரிகளூடான அறிவிப்பைச்செய்வதின் ஊடாக, திரைப்பட விழாவிற்கான நேரத்தை ஒதுக்குவதற்கு பார்வையாளர்களால் முன்கூட்டியே தயாராகக் கூடியதாக இருக்கும். விளம்பரத்தட்டிகள் சிறு சிறு அறிவுப்புக்களை முன்னரே காட்சிப்படுத்துவது பார்வையாளர்களைத் திரட்டுவதற்கு உதவும்.

நண்பர்கள் சிலர் இம்முறை நிதிப் பற்றாக்குறை இருந்தது என்றார்கள். இவ்வளவு கடும் உழைப்புடன் நடைபெறுகின்ற திரைப்படவிழா போதுமான விளம்பரமின்மையால் பொதுமக்களிடம் சென்றடைய முடியாமல் இருக்குமென்றால் அது கவலைக்குரியது.

பங்களிப்பாளர்களாக இருப்பவர்களுக்கும் பொறுப்பு இருக்கின்றது என்றே நினைக்கிறேன். இந்நிகழ்வு சார்ந்து த. சனாதனன் மிக முக்கியமானவர். அவரைப் போன்றவர்கள் தாங்களாகவே சில கருத்துக்களை அழுத்தமாகக் கூறுவதும் தேவையானது. எங்களைப்போன்ற பார்வையாளர்கள் சொல்வதை விட பங்காளர்களாக இருப்பவர்கள் சொல்லும் பொழுது அழுத்தமாகப் பதியும். இத்திரைப்பட விழாவுடன் இணைந்த, யாழ்நகரத்தில் இருந்த, இருக்கின்ற சினிமா அரங்குகளைப் பற்றிய கதைகளைக் கேட்பதும் இடங்களைப் பார்ப்பதுமான சனதானன் வழிநடத்திய ஒரு நடைபயணத்தில் நானும் பங்குபற்றியிருந்தேன். ஆனால் குறித்த நடைபயணம் பற்றிய அறிவிப்பு, செய்தி எந்தப் பத்திரிகையிலோ சமூக ஊடகங்களிலோ வெளிவந்திருக்கவில்லை. நானும் கூட இவர்கள் நடந்து சென்று கொண்டிருக்கும்போது வழியில் பார்த்தே இணைந்து கொண்டேன். இந்நடைபயணத்தில் கடந்த காலச் சினிமா அரங்குகளின் கதைகளைப்பற்றி உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. இது போன்ற விடயங்களில் விழாக்குழுவினர் ஆலோசனைகளைப் பெற்று இன்னும் சிறப்பாக ஒருங்கிணைத்தால் அதிகமானவர்கள் பங்குபற்றுவார்கள்.

ஐந்து வருடங்கள் இவ்விழாவை தொடர்ந்து நடத்திவருவது பெருமைக் குரிய விடயம். யாழ்ப்பாணம் எப் பொழுதும் நல்லவற்றை வரவேற்றி ருக்கிறது. இவ்வளவு தகவல் தொடர் பின்மைக் குறைபாடுகளுக்கு மத்தியிலும் பல்வேறு அரங்குகளுக்கும் இரசிகர்கள் வந்திருந்தது அதையே குறிக்கின்றது. புதிய இயக்குனர்களான வனிதா சேனாதிராஜா, பவனீதா லோகநாதன் ஆகியோருடைய குறும்படங்களுக்கு விருதுகள் கிடைத்திருப்பது முக்கியமானது. எதிர்காலத்தில் இன்னும்பலரையும் இத்துறையை நோக்கி ஊக்கப்படுத்த அது உதவும்.

இந்தக்குறைபாடுகளைக் கடந்து எல் லாத்தரப்பினரையும் ஒருங்கிணைத்து வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தினை இத்திரைப்பட விழா பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

தலைப்பு : வாசிப்பும் அறிதலும்

வெளியீடு : புதிய சொல்

அட்டைப்படம் : ஜீவா

அட்டைப்பட வடிவமைப்பு : யதார்த்தன்

வடிவமைப்பு : தனுஜன்

காலம் : 15 டிசம்பர் 2019

நன்றி

க.பரணீதரன் (ஜீவநதி)
உதயன்
தினக்குரல்
தீபம்
தாய்வீடு

இந்த நூலின் அட்டையில் இருக்கின்ற குமாரதேவன் அவர்களின் ஓவியத்தினை மிகக் குறுகியகாலத்தில் வரைந்துதவிய ஓவியர் ஜீவா அவர்களிற்கு நன்றிகள்

# பத்திரிகைகளில் வெளிவந்தவை

# குமாரதேவன் குறித்து...

ஒரு நாள் நண்பகல். சிரித்திரன் ஆசிரியர் வீட்டின் முன்னில் ஒரு இனந்தெரியாத நபரின் நடமாட்டம் இருப்பதாக அவர் மைத்துனர் அவருக்குச் சொல்லுகிறார்.

போய் வீட்டுப் படலையைத் திறந்து பார்த்தால் அவரை அங்கு காணவில்லை. மீண்டும் சிறிது நேரத்தின் பின்னர் அதே நபர் வந்து நிற்பதாக அறியப்பட்டு ஆசிரியரின் மனைவி போய் பார்க்கிறார். அங்கே ஒரு சாரம் சேட்டுடன். ஒரு சாதாரண மனிதனாக நின்ற அவர் இவரைக் கண்டதும் மலங்க மலங்க விழிக்கிறார்.

"என்ன விசியம். ஆரைத் தேடிறியள்" ஆசிரியர் மனைவி கேட்கிறார்.

"..... " வந்தவர் மௌனிக்கிறார்.

"..... " வந்தவரிடமிருந்து எதுவித பதிலையும் பெற்றிராத ஆசிரியரின் மனைவி படலையை மூடப் புறப்பட..

"சிரித்திரன் ஆசரியற்றை வீட்டைத் தேடிவந்தனான். இந்தப் பக்கம்தான் அவர் இருக்கிறதாச் சொல்லிச்சினம்.. உங்களுக்குத் தெரியுமோ?" என்ற அவரைப் பார்த்துப் புன்முறுவலோடு ஆசரியரின் துணைவியார் குமாரதேவனை உள்ளே அழைத்துச் சென்றதாக.....சிரித்திரன் ஆசிரியருக்கும் தனக்கும் ஏற்பட்ட ஆரம்ப உறவு பற்றிப் பின்னாளில் ஒரு சமயம் என்னிடத்தில் விவரித்திருக்கிறார் குமாரதேவன்.

ஒரு மனிதன் வாசிப்பினூடாகத் தனது அறிவைப் பெருக்கலாம் என்று பல இடங்களில் எழுதியதை வாசித்திருக்கிறோம். அந்த எழுத்துக்களில் பலரை உதாரணமாகக் காட்டியிருக்கிறார்கள். அவற்றை வாசிப்பின்போது வெறும் எழுத்துக்களாக மட்டும் பாத்தோம். வாசிப்பதால் ஒரு மனிதன் ஒரு அறிவு உலகத்தையே கட்டிப்போடலாம். தன் காலடிக்குக் கீழ் கொண்டு வரலாம் என்றதை நிஜத்தில் எமக்கு அறியத் தந்தவர் குமாரதேவன்

குமாரதேவனிடமிருந்த அறிவுத் தேடலுக்கு ஆயுதமான வாசிப்பின் நேசிப்பு பற்றி வடக்கிலுள்ள இலக்கியவாதிகள் பலர் அறிந்திருப்பார்கள் என்று சொல்லலாம். ஏனெனில் அவர் கலை, இலக்கியம் தொடர்பான எல்லாக் கூட்டங்களுக்கும் சமூகமளிப்பதோடு, சந்தர்பம் வரும்போது மிகவும் ஆணித்தரமாகத் தனது கருத்தை முன்வைத்துப் பேசுவார். சில சந்தர்பங்களில் பார்க்க "இவரா, இப்படி? என மிகவும் ஆச்சரியமாகவும் இருக்கும்.

அவர் வாசிக்காத பத்திரிகைகள் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். தான் படித்த கட்டுரைகள் பற்றி அதை எழு-

தியவரைத் தேடி விவாதிக்கின்ற பழக்கம் அவரிடம் இருந்தது. புதியவர்களாயின் அவர்களைச் சந்திக்கின்ற போது மிகவும் ஆர்வத்தோடு அவர்களைத் தட்டிக் கொடுத்து உற்சாப்படுத்திய ஒரு வாசக-னாகவும் குமாரதேவன் பேசப்படுகிறார்.

கடைசிவரைக்கும் அவரிடமிருந்து கவலை தான் ஒன்றையும் எழுதுவதில்லை என்பதே.. இறப்பதற்கு 5 நாட்கள் முன் என நினைக்கிறேன் அவர் அது பற்றிப் பேசினார். இந்த உலகத்துக்குத் தான் சொல்ல வேண்டிய விடயம் தனக்குள் ஏராளமாக இருப்பதாகவும் யாராவது முன் வந்து தன்னோடு இருந்து அவற்றை எழுதி எடுப்பார்க ளேயானால் தான் அவற்றைப் பத்திரிகைகளில் கட்டு ரையாகவோ அல்லது நூலுருவாகவோ கொண்டு வரலாம் என்று சொல்லி இருந்தார். அதனைக் கேட்டுக் கொண்டு ஒரு நண்பர் அதற்கான ஆயுத்தங்களைச் செய்திருந்தார் என்பது இங்கே குறிப்பிட வேண்டிய முக்கிய விடயம்.

இன்னும் சிறிது காலம் வாழ்ந்திருந்-தால் அவர் எண்ணங்கள், கருத்துக்கள், ஆலோசனைகள், விமர்சனங்கள் என்று பல விடயங்கள் எழுத்துருப் பெற்றிருக்கும். ஏன்? நூலுருவாகவும் வந்திருக்கும். அதற்கான முயற்சி ஒன்று நடைபெற்றது.

இருந்தும் புதிய சொல், உதயன், நூலக நிறுவனத்தினர் அவரைப் பயன்படுத்தி இருக்கின்றனர். அவர் சார்ந்த விடயங்கள் எழுத்துக்களிலும், ஒலி வடிவாகவும், ஒளி வடிவாகவும் சில வெளிவந்திருக் கின்றன. அவரின் முழு ஆளுமையையும் அறிந்தவர்களாக "புதிய சொல்" இதழ் சார்ந்த அவர் நண்பர்கள் வட்டமே அவரை அதிகம் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்-தவர்கள். அவர்களுடன் கை கோர்த்து அதிகம் பயணித்தவர்கள். குமாரதேவன் யாழ். நூலக வாசகர் வட்டத்திலும் தனது முழுமையான பங்களிப்பைச் செய்தவர்.

அவர் எழுத்துக்களை அதிகம் நேசித்-தவர். சதா வாசித்துக் கொண்டே இருந்-தவர். அவர் தனது இறுதித் தருணங்கள் வரையும் வாசித்தவர். அதனை நேசித்தவர். ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் அவர் சார்ந்த துறையில் ஒரு வெற்றிடம் நிரப்பப் படாமலே பல காலம் இருக் கப்போகிறது. அந்த வெற்றிடத்தை உடன் நிரப்பக் கூடிய ஆளுமையுள்ள ஒரு வாசகன் எம் மத்தியில் இருப்ப-தாக எனக்குத் தென்படவில்லை. அப்ப டிப்பட்ட குமாரதேவன் போன்றதொரு வாசகனை உருவாக்கிய இயற்கையே அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கான இன்னுமொரு இரசனை வெறி பிடித்த வாசகனையும் எமக்குத் தந்துதவும் என்ற நம்பிக்கையோடு பயணிப்போம். இந்த எழுத்துக்களில் 'குமாரதேவன்' என்று நான் எங்கும் குறிப்பிடாததற்குக் காரணம் அவர் என்றும் எம் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

நன்றி : தீபம்

# வாசிப்பால் உச்சத்தைத் தொட்டவர் குமாரதேவன்

-கணபதி சர்வானந்தா

காலையில் நூலகம் திறக்கும் போது முதல் ஆளாக உள்ளே சென்று நூலக நேரம் முடிவடைந்தது கூடத்தெரியாமல் தன்னுடைய வாசிப்பில் மெய் மறந்த அம்பேத்கரால்தான் உலகிலேயே சிறந்த அரசியலமைப்புச்சாசனத்தை உருவாக்க முடிந்தது அது போன்று வாசிப்பினூடாக அறிவுத்தேடல் ஒன்றினை நடத்திச் சதா பயணித்துக்கொண்டிருந்தவர் குமார தேவன். அவர் அண்மையில் இயற்கை எய்திவிட்டார். ஒரு நடமாடும் நூல் நிலையத்தை நாம் இழந்து விட்டோம் என்றே என்னால் குறிப்பிட முடிகிறது. வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணமாக்கும் என்றதற்கு உதாரணமாகத் திகழ்ந்த அவர் வாசிப்பினாலேயே பலரால் அறியப்பட்டவர். வாசிப்பின் மகத்துவத்தை உலகுக்கு உணர்த்திய உத்தமர். வாசிப்பதோடு நிறுத்திவிடாது அதனை ஒரு ஆய்வுக்குட்படுத்தி அவை சார்ந்த விடயங்களை மக்கள் மத்தியில் கொண்டு சென்று பல உரையாடல்களை நடத்தியவர். அவரிடம் காணப்பட்ட அரசியல் மற்றும் இலக்கியம் சார்ந்த விடயங்களைப் பகிர பல புத்திஜீவிகள் அவர் இருப்பிடம் வந்து செல்வதைப் பார்த்திருக்கிறேன்.

நாம் கண்டு அறிந்ததைவிடவும் அவர் வேறு ஆளாக இருந்தார். இலக்கியச் செறிவாற்றலில் சிற்றிதழ்களைப் பற்றிப் பேசியவை பேராச்சரியத்தைக் கொடுத்திருந்தது. யுத்தத்திற்குள்ளும் இருந்தே இருந்தது அந்த அக்கறை. இலக்கியத்தின் மூச்சை சிற்றிதழ்களே வெளியேற்றி உள்ளிழுப்பதாய் என்னைப்போல் அவரும் நம்பியிருந்ததாக எண்ணியிருந்தேன். ஆனால் அத்தனை கொடூர கணங்களுக்குள்ளும் ஈழ இலக்கியத்தின் உயிர் மூச்சை தன் வாசிப்பின் மூலமாகஅறிந்து கொண்டிருக்கிறார் ஒருவர் என்று புதிய சொல் நண்பர்கள்அறிமுகப்படுத்தியிருந்தார்கள் எனக்கு.அவருடைய இயல்பான வாழ்வு முறை -அந்த வாழ்வுமுறையிலிருந்து எதிர்கொள்ளும் கருத்தியல்...தான் நினைப்பதனை நேர்படப் பேசிவிடும் சுபாவம் என எதுவும் இன்று நம்மிடையே இருக்கும் பலருக்கு வாய்ப்பற்றுப் போனபோதும் அவ்வாறே வாழ்ந்து வந்த நண்பர் குமாரதேவனை அவர்களுக்கும் பிடித்துப்போனது.49வது வன்னி இலக்கியச் சந்திப்பில் குமாரதேவனின் பேச்சுக்களைக் கேட்டிருந்தேன். கட்டாயம் சந்தித்திருக்க வேண்டிய மனிதன்.

சனியன் "காலம்" எத்தனை தரித்திரமானது. எனது அஞ்சலிகள்

My Respected

Mr. kumarathevan என முகநூலிலே அவருக்கான அஞ்சலிக்குறிப்பொன்று காணப்பட்டது (கற்சுறா).

அத்துடன் குமாரதேவனின் நீண்டகால நண்பரான பிரபல எழுத்தாள் ஐய்யாத்துரை சாந்தன் தனது முகநூல் குறிப்பில்-மெய்யான புத்திசீவி, ஓய்விலா வாசகன், எளிமையின் உருவம், அன்பான நண்பன்-

குமாரதேவன் நேற்றிரவு காலமானார். அவருக்கு எனது அஞ்சலிகள் எனப்பதி விட்டிருந்தார்.

நண்பன் குமாரதேவன் மறைவை-யொட்டி விதை குழுமம் இவ்வாறு தமது அஞ்சலிக்குறிப்பைப் பதிவி செய்திருக்கிறது.

சமகாலத்தின் மிக முக்கியமான வாசகராகவும் நுண்ணுணர்வுடன் கூடிய விமர்சகராகவும் மிகக் கூர்மையான நினைவாற்றலுடன் அரசியல், இலக்கியம், சமூகம், திரைப்படம் என்று பல்வேறு தளங்களிலும் ஆழ்ந்தகன்ற அறிவும் புலமையும் கொண்டவருமான குமாரசாமி குமாரதேவன் அவர்கள் நவம்பர் 15, 2019 அன்று இயற்கையுடன் கலந்தார்.

டிசம்பர் 10, 1960 அன்று காரை நகரிலுள்ள கோவளத்தில் பிறந்த குமார தேவன் அவர்கள் தனது சிறுவயதிலிருந்தே தீவிரமான வாசிப் பிலும் தேடலிலுமாக தன் வாழ்வை வரை யமைத்துகொண்டவர். அண்மைக் காலமாக ஈழத்தில் நடந்த பல்வேறு சமூக, அரசியல், இலக்கியக் கூட்டங்களிலும் உரையாடல்களிலும் தன் வாசிப்பினாலும், புலமையினாலும், நேர்படப் பேசுகின்ற பண்பினாலும் அனைவராலும் மதிக்கப் பட்டு சமகால வாசகர் தரப்பின் முதன்மை அடையாளமாக விளங்கியவர் குமார தேவன் அவர்கள். விதைகுழுமம், தொன்ம யாத்திரை, புதிய சொல் போன்றவற்றின் ஆரம்பம் முதலே உணர்வுத் தோழமையுடன் விளங்கிய தோழர்களில் ஒருவராகவும், வாசகராகவும், பங்கேற்பாளராகவும் சேர்ந்து பயணித்த குமாரதேவன் பல்வேறு சந்-தர்ப்பங்களில் எமக்கான ஆலோசகராக இருந்தும் நெறிப்படுத்தியிருக்கின்றார். அவர் களுக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோழர் சிராஜ்மசூரின் இரங்கல் குறிப்பு இவ்வாறு அமையப்பெற்றிருந்தது, யாழ்ப்பாணம் காரைநகரைப் பிறப்பி டமாகக் கொண்ட ஒரு பிரம்மச்சாரிக்கு தென் கிழக்கின் அக்கரைப்பற்றிலிருந்து ஆழ்ந்த இரங்கல்கள்.

தேர்தல் நாள் எழுந்து முகநூலைத் திறந்தபோது, நீங்கள் மறைந்து விட்ட செய்தியால் நெஞ்சு கனத்து விட்டது. யாழ்ப்பாணம் திருமறைக் கலா மன்றத் தின் கலைத்தூது கலையரங்கில் நான் வடக்கு முஸ்லிம்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். பேசி முடிந்து விட்டு இறங்கி வருகிறேன். சாறன் சேட் அணிந்து கையில் ஒரு பையுடன் நிற்கிறீர்கள். அப்போது நீங்கள் யாரென்று தெரியாது. அதுதான் முதல் சந்திப்பு. என் கையைப் பிடித்து அழுகிறீர்கள். வடக்கு முஸ்லிம் களை பலவந்தமாக வெளியேற்றியது பொறுக்காமல் அழுதவாறே என்னிடம் மன்னிப்புக் கேட்கிறீர்கள். ஒரு கணம் நான் அதிர்ந்து போனேன். அப்போது உங்கள் பெயர் தெரிந்திருக்கவில்லை. இந்த சம்பவத்தை முகநூலிலும் பதிவு செய்தேன்.

பின்னர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி வந்தால் அநேகமாக எல்லாக் கூட்டங்க-ளிலும் உங்களை சந்தித்துப் பேசுவதுண்டு. எனது பேச்சினை ரசித்துக் கேட்பதாய் எப் போதும் சொல்வீர்கள். எனக்குத் தெரிந்து எத்தனையோ நல்ல எழுத்தாளர்களைப் பாராட்டி ஊக்குவித்திருக்கிறீர்கள். இது நம்மவர்கள் மத்தியில் குறைவாக உள்ள ஒரு பண்பு. அதேநேரம், குறையை சுட்டிக் காட்டும் தெளிவும் துணிவும் உங்களுக்கு இருந்தது

நல்லதோ கெட்டதோ எதையும் துணிந்து

பேசும் வெள்ளை மனசுக்காரர் நீங்கள். எப்போதும் இளம் தலைமுறையினருடன் நெருக்கமாக இருந்தவர் நீங்கள்.

பல விடயங்களை ஆழப் புரிந்து கொண்டிருந்தீர்கள். அதை அடிக்கடி பகிரவும் செய்தீர்கள். நான் கண்ட தீவிர வாசகர்களுள் பலர் எழுத்தாளர்கள். எழுத் தாளன் அல்லாத ஒரு தீவிர வாசக-னாக கண்டவர்களுள் ஒருவர் நீங்கள். ஒரு சாதாரண மனிதனின் எளிமையான தோற்றத்திற்குள் இவ்வளவு படிமங்களையும் பொதிய வைத்திருந்தீர்கள். யாழ்ப்பாணம் காரைநகரை பிறப்பிடமாகக் கொண்ட ஒரு பிரமச்சாரிக்கு, தென்கிழக்கின் அக்க ரைப்பற்றிலிருந்து. ஆழ்ந்த இரங்கல்கள். அற்புதமான மனிதர் நீங்கள். இனி உங்களை சந்தித்துப் பேச முடியாது. கடைசியாக நடந்த கிளிநொச்சி இலக்கியச் சந்திப் பின்போது பேசிய நினைவுகள் நெஞ்சை அரிக்கின்றன.

படிப்பை விட்டதாலேயே என்னமோ தெரியவில்லை, எதையாவது வாசிக்க வேணும் என்ற ஆர்வம் இருந்தது, பேப் பர்கள் அதுகள் இதுகள் என்று வாசிப்பன், ஒருவேளை பள்ளிக்கூட படிப்பிற்குப் போயிருந்தால், வேறுமாதிரியும் போயி ருக்கலாம்.

வாசிப்பு உங்களை உருவாக்குவதில் என்ன பங்களிப்பு செய்திருக்கிறதென ஒருவர் கேட்டால், "வாசிப்பு என்னை உருவாக் கியதன் விளைவே என்னை நோக்கிய இந்த கேள்வி" என்பதே எனது பதிலாக இருக்குமோ தெரியவில்லை.

ஆனாலும் நேர்கோட்டில் சொல்வதா-னால், நான் நானாக இருக்கவும் பத்தோடு பதினொன்றாக இல்லாமல் இருக்கவும், என்னில் மூழ்காமல் என்னிலிருந்து மீளவும் வாசிப்பு உதவுகிறது. எனப் பதில் தந்த குமாரதேவன் தற்போது எம்மிடம் இல்லை. ஆனால் அவர் விட்டுச் சென்றிருக்கின்ற வாசிப்புப் பற்றிய மகத்துவம் எம்மால் பல வழிகளில் உணரப்பட்டிருக்கிறது.

ஒரு துறை சாராது, விரிந்து வாசிப்பவன் உண்மைகளை மிகவும் துல்லியமாகப் புரிந்துகொள்கிறான். அவனது பார்வை விரிகிறது. அதுமட்டுமல்ல விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, சகிப்புத்தன்மை மற்றும் அடுத்தவர் கருத்துக்களை மதிக்கும் போக்கும் அவனிடம் விதைக்கப்படுகி-றது. ஒரு பிரச்சினைக்குப் பல முகங்கள் உண்டு என்றும், அவற்றிற்குப் பல தீர்வுகள் காணப்படலாம் என்றும் அவன் புரிந்து கொள்கிறான் அந்த வகையில் கருத்து வேறுபாட்டின் வட்டமும் சுருங்கிப் போகிறது. எனவே வாசிப்பு என்பதனை ஒரு அறிவின் தேடல் என்று கூடக்குறிப் பிடலாம். குறிப்பிட்ட துறையில் குறிப் பிட்ட பாடத்திட்டத்தைப் படிப்பது மட்டுமே முழுமையான கல்வியுமல்ல. வாசிப்பைத் தொடரும் போதுதான் கற்றல் செயற்பாட்டு விரிவு பெறுகிறது. அது ஆழமாகிறது. அந்த வகையில் வாசிப்பை ஒரு கற்றல் தொழிற்பாடாகவே கொள்ள வேண்டும். வெறுமனே பொழுதுபோக் குக்கான வழியல்ல என்ற பல விடயங்களை நம்மத்தியில் விதைத்துவிட்டு எம்மை விட்டகன்ற அன்பர், நண்பர் குமார தேவன் நினைவால் என்றும் எம்முடன் வாழ்ந்துகொண்டிருப்பார்.

நன்றி: தினக்குரல்
***24.11.2019***

# நல்லதொரு வாசகன்

- ஜெ. காயா

"எனக்கு இப்ப அம்பத்தேழு வயசு. எனது வாசிப்புப் பழக்கம் கிட்டத்தட்ட பத்து வயதிலை தொடங்கியிருக்க வேணும். நான் காரைநகரைச் சேர்ந்தவன். எனது கிராமத்தில், சுற்றுச் சூழலில் வாசிப் புத் தன்மை, அதுவும் செய்திப் பத்திரி கைகளை வாசிக்கும் பழக்கம் மிகவும் குறைந்திருந்த காலத்தில் நான் வாசிக்கத் தொடங்கியிருந்தேன். ஊரில் ஒரே ஒரு-வருக்குத் தான் பத்திரிகை வரும். அவர் எனது உறவினர். ஓய்வு பெற்ற மாலயன் பென்சனியர். அவருக்கு பத்திரிகை வந்து சேர மத்தியானத்துக்கு மேலையாகிரும். என்ர வாசிப்பு விருப்பத்தைக் கண்ட அவர். அதை அடுத்தநாள் பின்னேரம் சைக்கிளிலை கொண்டு வந்து எனக்குத் தருவார். சின்ன வயசிலை இப்பிடித் தான் என்ர வாசிப்புப் பழக்கம் தொடங்கினது."

தனது கதையைச் சொல்ல ஆரம்பித்-தார் குமாரதேவன். சாதாரண, அடிநிலை மனிதத் தோற்றம் அவருடையது. உடுத் திருக்கும் ஆடைகளும் மிக எளி மையானவை. சாதாரண பொது மக-னாக இலக்கியக் கூட்டங்களிலும் பொது வெளி களிலும் முகம் கொடுத்து வருவதை அறிந்ததும் அவரை அணுகி னோம். இலக்கியக்காரர்கள் பலருக்கும் அவர் அறிமுகமாகியிருக்கிறார். படித்த மனிதரல்லாவிடினும் நிறைந்த வாசிப்புக் காரணமாக அவர்களுடன் சக விடயங்க-ளில் ஈடுபாடு காட்ட இவரால் முடிகிறது. அவர் தனது கதையைத் தொடர்ந்தார்.

"நான் ஒன்பதாம் ஆண்டு வரைக்கும் தான் படிச்சனான். பாடசாலைக்குப் போட்டு வந்து பேப்பர் வாசிக்கிறது எனக் குப் பழக்கமாப் போட்டுது. அது புது அனுபவம். பிற்பட்ட காலத்தில் காரைநகர் யாழ்ட்டன் கல்லூரியில படிச்சனான். அங்கையும் பத்திரிகைகளை வாசிக்கத் தக்கதாக மேசை போட்டு இருந்து படிக் கிற வசதியளைச் செய்தினம். ஒரு நல்ல நூல் நிலையமும் அங்கை இருந்தது. எனது தந்தையார் மலையகம் - நாவலப்பிட்-டிய எனும் இடத்தில் தொழில் செய்து கொண்டிருந்தார். அவரும் நல்லதொரு வாசகர். என்னுடைய வாசிப்பு ஆர்வத் தைக் கண்ட அவர் தான் வாங்கிப் படித் ததும் அந்தப் பேப்பரை எனக்குத் தபாலில் அனுப்பி வைப்பார். அது அடுத்த நாள் மத்தியானம் பத்து மணி போல இஞ்ச வந்திடும். அப்ப ரெண்டு நேரப் பாட சாலை. மத்தியானச் சாப்பாட்டுக்கு வீட்டை போற நான் அவர் அனுப் பின பேப்பரை எடுத்து உடைச்சு அதை வாசிச்சுக் கொண்டு தான் சாப்பிடுவன். அம்மா பேசுவா," பேப்பர் ஒரு கையிலை. சாப்பாடு ஒரு கையிலை" எண்டு. அது எனக்குப் பழக்கமாகிப் போச்சுது. அப் பிடி வாசிச்சு வாசிச்சு என்ரை வாசி-ப்புப் பழக்கம் கூடீற்று. வாசிப்பதால்

மனிதன் பூரணமடைவான் எனத் தெரிஞ்சு நான் வாசிக்கத் தொடங்கேல்ல. இயல்பாக வாசிக்கத் தொடங்கினன். அரசியல், சமூகம், இலக்கியம், இதுகளுக்கூடான கட்டுரை கள், கதைகள் எல்லாத்தையும் வாசிப்பன். பின்னர் மலையகத்திலை தொழில் செய்த காலத்திலை அங்கை ரெட்ண சபாபதி அய்யர் எண்டு சொல்லி உபதபாலதிபர் ஒருத்தர் இருந்தவர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்-தவர். அவர் மார்ட்டின் விக்கிரமசிங்க வின்ர கம்பெ ரலிய என்ற தமிழ் மொழி பெயர்ப் பில் "கிராமப் பிறழ்வு" எண்டுற நாவலை எனக்கு வாசிக்கத் தந்தார். எனக் குப் பதினைஞ்சு வயசு தானிருக்கும். முதல் முதல் வாசிக்க நாவல்... எண்டா அதாத் தானிருக்கும்.மார்ட்டின் விக்கிர மசிங்க ஒரு புகழ் பெற்ற எழுத்தாளர். அந்த நாவல் பின்னர் 'கம்பெரலிய' எண்டு படமாயும் வந்து விருதுகளும் பெற்றது. இந்த மாதிரிப் பத்திரிகைகள் மட்டுமின்றித் தொடர்ச்சியாகப் பல நூல் களையும் வாசிக்கத் தொடங்கினன். இண்டு வரைக்கும் அந்தப் பழக்கத் தோடையே இருக்கிறன்".

குமாரதேவன் நல்லதொரு வாசகனாக இருப்பதால் பத்திரிகை வாசிப்பைப் பற்றியும் பத்திரிகைகளைப் பற்றியும் கூடப் பகிர்ந்து கொண்டார்.

" ஈழநாடு காலம், சபாரட்ணம் மாஸ்-டர் ஈழநாடு ஆசிரியராக இருந்தார். தமிழ் பத்திரிகைகளில் ஆசிரியர் தலை-லயங்கங்கள் விரும்பிப் பார்த்த காலம் அவருடைய காலம். ' ஊரடங்கு வாழ்வு' எண்டு அந்த ஆசிரியர் தலையங்கங்களைக் காரைநகரைச் சேர்ந்த ரகுபதி எண்டுற ஒரு விரிவுரையாளர் தொகுத்து ரெண்டு தொகுதிகளாக வெளியிட்டிருந்தார். பிறகு உதயன் வாசிக்கத் தொடங்கின காலம். 84 கள்... செய்திப் பத்திரிகைகளில கொஞ்சம் அனுபவம் வாய்ந்த இளை-ஞர்களும் மற்றையவர்களுமாய் இணைந்து போர்க் காலம் தொடங்கிற சூழ்நிலையில அதுகள் பற்றிய செய்திகளைப் பிரசு ரிக்கத் தொடங்கிச்சினம். இண்டைக்கு முப்பது... முப்பத்தி மூண்டு வருசமா, இடையில சிறிய காலம் தடைப்பட்டா லும் பத்திரிகை தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தது. அப்பேக்கை எனக்கு இருபத்தி நாலு வயசிருக்கும். வாசிப்புக் கூடுதலாய் இருந்தது. எழுபத்தி ஏழுக-ளில இருந்து யாழ்ப்பாண நகரத்திலை நான் வசிக்கத் தொடங்கினன். தொழில் காரணமாக இப்போதுள்ள உதயன் அலு-வலகத்திற்கு அருகில் தங்கியிருந்தன். பத்திரிகைகளில வேலை செய்யிற சிலர் அறிமுகமாகும் தன்மையும் இருந்தது. வித்தியாதரன் அப்பேக்கை இருந்த-வர். சில செய்திகளை என்னிடமிருந்து உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சில தகவல்களை கேட்டறிந்து கொள்வார். அந்த அளவிற்கு வாசர்களிலை அக்கறை யும் தொடர்புமாய் இருந்தார்.

பத்திரிகைகளின் நடுநிலைமை பற்றி யும் குமாரதேவன் குறிப்பிடத் தவற வில்லை. மிக நீண்ட காலத்திற்கு முதலே, இந்தியா - தமிழகத்தைச் சார்ந்த ஒருவர் சொன்னார் அச்சு ஊடகம் எப்போதும் நிலைத்து நிற்கும் எண்டு. அந்தக் கருத்து உண்மையானது. இணைய ஊடகங்கள், கணினி வழி ஊடகங்கள் வந்தால் கூட அச்சு ஊடகங்கள் லேசில அழியாது. ஏனெண்டு சொன்னா, என்ன தான் கணினி ஊடான பாவனை என்றாலும் அச்சிலே பார்ப்பது ஒரு சுவை, ரசனை. அந்தச்

சுவைக்கு ஈடாக இணைய ஊடகங்கள் இருக்க முடியாது. நவீன ஹோட்டல்க-ளிலே போய்ச் சாப்பிட்டாலும் நம்ம கிராமத்தில சாப்பிடுற வீட்டுச் சாப்பாடு மாதிரி வராது. அது மாதிரி, சிலருக்கு அச்சு ஊடகங்கள் பழகிப் போச்சு. கணினி களைப் பாவிக்கிறவர்கள் கூட, பின்னர் பத்திரிகைகளை எடுத்து செய்திகளைப் பார்த்து அறிந்து கொள்வதுண்டு. அது குறைவில்லாமல் நடக்குது. புதுப் புதுப் பத்திரிகைகள் வாறத்துக்கும் அது தான் காரணம். அடிமட்ட வாசகர்கள் அதைத் தான் எதிர்பார்க்கிறார்கள். ஏனெண்டு சொன்னா, பத்திரிகையில் வந்தால் அது உண்மையாய் இருக்குமெண்டும், பேஸ் புக் அது இதென்னடா சும்மா சும்மா கண்டதையும் போடுவார்கள் எண்டும் கதைப்பதை நான் கண்டிருக்கிறேன். அது உண்மையும் தான். பத்திரிகைச் செய்தி-களுக்கு ஒரு நம்பகத் தன்மை இருக்கிறது. இண்டைக்கு யாழ்ப்பாணத்திலே மூண்டு நான்கு தினசரிப் பத்திரிகைகள் வெளி-வருகின்றன. அவற்றின் நடுநிலைமை முக்கியமானது. அண்மையில் ஒருவர், யாழ் மாவட்டக் குருமுதல்வர் எண்டு நினைக்கிறன், பத்திரிகையாளருக்கான விருது வழங்கும் விழாவிலே சொல் லியிருப்பார். நடுநிலையான ஊடகம் எண்டு ஒண்டில்லை. நடுநிலையான ஊடகவியலாளர்கள் எண்டும் இல்லை. ஆனால் நடுநிலையான வாசகர்கள் இருக்கிறார்கள். அவர்கள் " Between in the lines எண்டு சொல்லுவாங்கள். செய்-திகளுக்கிடையிலான உண்மையை, அதை வாசிச்சதும் ஊகிச்சுக் கொள்வார்கள். அப்பிடியொரு வளர்ச்சி பெற்ற வாசகர் சமூகம் யாழ்ப்பாணத்திலை இருக்குது.

உதயனைப் பொறுத்த வரையிலே, ஒரு குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய விசயம் என்னெண்டு சொன்னா, அதின்ர உரி மையாளர் ஒரு கூட்டமைப்பு நாடா-ளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் கூட, உதயனிலை அதை அப்பட்டமாக காட்டிக் கொள்ளாத விதத்தில் செய்-திகளையும் வெளிக்கொணரக் கூடிய தன்மையும் இருக்கிறது. யாழ்ப்பாணப் பத்திரிகைகளிலை நடுநிலைமையானது என்று எதனையும் கூறி விட முடியாது. ஆனால் இப்படியான பின்னணியைக் கொண்ட உதயனை, யாழ்ப்பாணப் பத்திரிகைகளுடன் நோக்கும் போது, அதிகளவில் நடுநிலைமையைக் கடைப்பி டிப்பது பாராட்டுக்குரியது. அது தான் உதயன்ர வளர்ச்சிக்குக் காரணம். மற்றது உதயனை செத்த வீட்டுப் பேப்பர் எண்டு சொல்பவர்களும் இருக்கிறார்கள். அதன் உண்மை அவர்களுக்குப் புரிவதில்லை. சாவும் ஒரு செய்தி தான். மிக முக்கி ய செய்தி. இண்டைக்கு நாங்கள் மிக நெருக்கமானவர்கள், ஊரவர்கள் இறந்து விட்டால் உதயனைப் பார்த்துத் தான் தெரிந்து கொள்கிறோம். ஆரும் இறந்து விட்டால், ஒருவருடன் விசாரிக்கும் போது ஏன் உதயன் பார்க்கேல்லையா எண்டு கேப்பார். தெரிந்தவர்கள், அறிந்தவர்கள், ஊரவர்கள், நண்பர்கள், உறவுகள் எல் லாம் பிரிஞ்சு போயிருக்கிற காலத்திலை இது தான் முக்கியச் செய்தி.

புதிதாகத் தோன்றுகின்ற பத்தி ரிகைகள், தம்மை அர்ப்பணித்துச் செயல்படும் பட்சத்திலேயே உதயன் போன்று நிலைக்க வேண்டும் என்பது அவர் கருத்து. எல்லா ஊடகத்தையும் விட என்னைப் பொறுத்த வரையில்

செய்திகள் தொகுப்பதிலும் விடயதானங்களை வழங்கிறதிலையும் உதயன் முன்னிலையிலை நிக்கிறதெண்டுறது மறுக்கேலாது. செய்தியை இயன்றளவு இங்குள்ள ஊடகங்களிலை பார்க்கவும். செப்பமாக வெளியிடுறதும், குளறுபடியில்லாமல் இயன்ற வரைக்கும் பிழையில்லாமல் வெளியிடுறதும் உதயன் தான். மற்றது போர்க்காலத்திலை பத்திரிகைகளிடையே பரவலான வளர்ச்சி இருந்தது. அந்த நிலை இன்றில்லை. புதிதாகத் தோன்றுகின்ற பத்திரிகைகள் தலையெடுக்கிறது கஷ்டம். அறவே முடியாது எண்டு சொல்லிவிட முடியாது. அர்ப்பணிப்பும் கடின உழைப்பும் இருந்தால் மக்கள் மத்தியில் நின்று நிலைக்கலாம். வாசகர்களை ஈர்க்க முடியும். உதயன் தனக்கு ஏற்பட்ட பெருந்தடைகளுக்கு மத்தியில் தன்னைத் தக்க வைத்து அர்ப்பணித்து வளர்ந்த ஒன்று.

வாசகர்களையே பத்திரிகைகள் முதன்மைப்படுத்த வேண்டும். உதயனிலை வாசகர் கடிதம் எண்ட ஒண்டு வந்தாலும் கூட இன்னும் அதிகமாக வாசகர்களுக்கு இடமொதுக்குவது நல்லம். ஏனெண்டால் வாசகர்கள் மாத்திரமே பத்திரிகையின் பலம். வாசகன் எப்படித் தன்னை அணுகிறார் என்பதும் அவனுடனான ஊடாட்டமும் பத்திரிகைக்கு அவசியமான ஒன்று. வாசகர் கடிதங்கள் பத்திரிக்கையைப் பாராட்டுவதாகவும் தூற்றுவதாகவும் போற்றுவதாகவும் எதுவாகவிருந்தாலும் அதற்கு முக்கியத்துவம் கொடுப்பது நல்லது. பத்திரிகையில் பிரசுரமான பிழைகளை இனங்கண்டு வாசகர்கள் தெரிவிக்கும் பட்சத்தில் அதனைத் திருத்தியமைத்து வாசகர்களின் கருத்தாக வெளியிடும் பழக்கமும் ஏற்பட வேண்டும். அது பத்திரிகையையும் வாசகர்களையும் வாசகர்களையும் நல்ல படியாக இணைத்திருக்கும்.

உலகம் முழுவதிலும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக அயல் நாடான இந்தியாவிலும் " Letter to the editor " என்று சொல்லப்படும் பகுதி மிக முக்கியமானதாயிருக்கிறது. அதற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட வேண்டும். பத்திரிகையாளர்களுடைய கண்களுக்குப் படாத செய்திகள் கூட அதன் மூலம் வெளிவந்து விடும்.

அண்மையில் ஒரு புத்தக வெளியீட்டு விழாவிற்குச் சென்றிருந்தேன். நூலாசிரியர் ஒரு கொழும்புப் பத்திரிகையாசிரியர், கலந்து கொண்டவர்கள் ஆய்வாளர்கள் எல்லாம் இளம் வயதினர். அவர்களுடைய பின்னணி உதயன் தான். அவர்களின் ஆரம்பமாக உதயனே இருந்தது. அதிலை பயிற்சி பெற்று அதிலையிருந்து வெளியேறி வெளிநாடுகளிலும் கொழும்பிலும் பல தரப்பட்ட விதத்தில் பல பத்திரிகையாளர்களை உருவாக்கியிருப்பது உதயனின் சேவை எண்டு தான் சொல்ல வேண்டும். இளம் வயதினரை உதயன் அறிமுகப்படுத்துவதும் வளர்ப்பதும் நல்லதொரு விசயம்.

நன்றி : உதயன்



சிவதர்ஷினி நாகராஜா
(நான்காம் வருட
மருத்துவ மாணவி,
ஸ்ரீ ஜெயவர்த்தனபுர
பல்கலைக்கழகம்)



இரண்டாவது தொன்மயாத்திரை - குருவிக்காடு



சண்முகம் குடும்பத்தினருடன்



மூன்றாவது தொன்ம யாத்திரை - நெடுந்தீவு

வாசிப்பு உங்களை உருவாக்குவதில் என்ன பங்களிப்பு செய்திருக்கிறதென ஒருவர் கேட்டால், 'வாசிப்பு என்னை உருவாக்கியதன் விளைவே என்னை நோக்கிய இந்த கேள்வி' என்பதே எனது பதிலாக இருக்குமோ தெரியவில்லை. ஆனாலும் நேர்கோட்டில் சொல்வதானால், நான் நானாக இருக்கவும் பத்தோடு பதினொன்றாக இல்லாமல் இருக்கவும், என்னில் மூழ்காமல் என்னிலிருந்து மீளவும் வாசிப்பு உதவுகிறது.

கடும் சுகவீனத்திலிருந்து மீண்டு தற்போதைய வாழ்க்கையை மேலதிக போனஸாக உணர்கையில் இசங்கள், கோட்பாடுகள், சுமைகள் எதுவுமின்றி வெள்ளைமனதுடன் நவீன இலக்கியத்திற்குள் பிரவேசிக்கும் புதிய இளந் தலைமுறையினருடன் சேர்ந்துபறக்க இறக்கைகளை என்னில் உருவாக்க முயற்சி செய்கிறேன்.

குமாரசாமி குமாரதேவன்

